ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2163/20 - 2020 පෙබරවාරි මස 19 වැනි බදාදා - 2020.02.19

*2163/20 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 7/2017*

**2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டம்**

*2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின்கீழ் இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

தவிசாளர்,
இலங்கை ஊக்கு பதார்த்தப்
பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை

கொழும்பு,
*2020, பெப்புருவரி 17.*

**விதிகள்**

<u>**ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் பிரயோகம்**</u>

*1.* இவ்விதிகள் 2020 ஆம் ஆண்டின் இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகள் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், பின்வருவோருக்கும் பின்வருவனவற்றுக்கும் ஏற்புடையற்பாலனவாதலும் வேண்டும்:

(அ) ஏதேனும் களரி, அணி, கழகம் அல்லது ஒன்றியம் உட்பட, இலங்கையிலுள்ள ஏதேனும் விளையாட்டுகள் ஒழுங்கமைப்பின் உறுப்பினராகவுள்ள அல்லது உரிமம் வைத்திருப்பவராகவுள்ள ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் அல்லது விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினருக்கும் அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் விளையாட்டுகள் ஒழுங்கமைப்பின் எவரேனும் உறுப்பினருக்கும் அல்லது இணைந்த ஒழுங்கமைப்புக்கும்;


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) ஏதேனும் நிகழ்ச்சி, போட்டி அல்லது வேறு செயற்பாடு நடைபெறுகின்ற இடத்தைப் பொருட்படுத்தாது, ஏதேனும் களரி, அணி, கழகம் அல்லது ஒன்றியம் உட்பட, இலங்கையிலுள்ள ஏதேனும் விளையாட்டுகள் ஒழுங்கமைப்பினால் அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் விளையாட்டுகள் ஒழுங்கமைப்பின் எவரேனும் உறுப்பினரினால் அல்லது இணைந்த ஒழுங்கமைப்பினால் ஒழுங்குபடுத்தப்பட்ட, கூட்டப்பட்ட, அதிகாரமளிக்கப்பட்ட அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட அத்தகைய நிகழ்ச்சியில், போட்டியில் அல்லது வேறு செயற்பாட்டில் அத்தகைய தன்மையில் பங்குபற்றுகின்ற ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் அல்லது விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினருக்கும்;

(இ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நோக்கத்துக்காக, ஏதேனும் களரி, அணி, கழகம் அல்லது ஒன்றியம் உட்பட, இலங்கையிலுள்ள ஏதேனும் விளையாட்டு ஒழுங்கமைப்பின் நியாயாதிக்கத்துக்கமைந்தவராகவுள்ள, ஏதேனும் அரசாங்க விளையாட்டுகள் ஒழுங்கமைப்பினால், ஓர் உரிமத்தினால் அல்லது வேறு ஒப்பந்தமுறையிலான ஒழுங்கேற்பாட்டினால் அளிக்கப்பட்ட தராதர அங்கீகாரத்தின் பயனைக்கொண்டு எவரேனும் விளையாட்டு வீரருக்கும் அல்லது விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினருக்கும், அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் விளையாட்டுகள் ஒழுங்கமைப்பின் எவரேனும் உறுப்பினருக்கும் அல்லது இணைந்த ஒழுங்கமைப்புக்கும்;

(ஈ) ஒரு தேசிய நிகழ்ச்சியின் அல்லது ஒரு விளையாட்டுகள் ஒழுங்கமைப்படன் இணைந்திராத தேசிய ஒன்றியமொன்றின் எவரேனும் ஒழுங்குபடுத்துநரினால் ஒழுங்குபடுத்தப்பட்ட, நடாத்தப்பட்ட, கூட்டப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் செயற்பாட்டில் ஏதேனும் தன்மையில் பங்குபற்றுகின்ற ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் அல்லது விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினருக்கும்;

(உ) பந்தி (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) இன் கீழ் அடங்காதவரும் ஆனால் ஏதேனும் சர்வதேச நிகழ்ச்சியில் அல்லது தேசிய நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்குத் தகவுடையவராகவிருப்பதற்கு விரும்புகின்றவருமான ஒவ்வெரு விளையாட்டு வீரருக்கும்;

ஆயின் அத்தகைய விளையாட்டு வீரர், அத்தகைய ஏதேனும் நிகழ்ச்சிக்குத் தகவுடையவராக இருப்பதற்கு ஆகக் குறைந்தது ஆறு மாதங்களுக்கு முன்னரேனும், இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின்கீழ் அத்தகைய விளையாட்டு வீரர் சோதனையிடப்படுவதற்குக் கிடைக்கக் கூடியவராதல் வேண்டும்;

(ஊ) இலங்கையின் நாட்டினத்தவராக அல்லது இலங்கையில் வதிபவராக உள்ள எவரேனும் விளையாட்டு வீரரும் மற்றும் போட்டியிடுவதற்கு, பயிற்றுவிப்பதற்கு அல்லது வேறு வகையாக இலங்கையில் சமுகமளித்துள்ள எந்த விளையாட்டு வீரர்மீது உலக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் கோவை இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் நியாயாதிக்கத்தை அளிக்கின்றதோ அந்த ஒவ்வொரு விளையாட்டு வீரரும் உட்பட, வேறெவரேனும் ஆளுக்கும்.

2. விதி 1 இலுள்ள பந்திகள் (அ) முதல் (ஊ) வரையிலானவற்றில் குறித்துரைக்கப்பட்ட எவரேனுமாள், அவரது உறுப்பாண்மை, தராதர அங்கீகாரம் அல்லது ஏதேனும் விளையாட்டிலான பங்குபற்றுகையின் நிபந்தனையொன்றாக, இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளினால் பிணிக்கப்படுவதற்கும், (இதனகத்துப்பின்னர் "இஊபபமு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் அதிகாரத்துக்கமைய இவ்விதிகளை வலுவுறுத்துவதற்கும், இவ்விதிகளின்கீழ் கொண்டுவரப்பட்ட வழக்குகளையும் மேன்முறையீடுகளையும் கேட்டுத் தீர்மானிப்பதற்கு 34 ஆம் விதியிலும் 69 முதல் 79 வரையிலான விதிகளிலும் குறித்துரைக்கப்பட்ட கேட்புக் குழாங்களின் நியாயாதிக்கத்துக்கும் உடன்பட்டுக்கொண்டுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்.

**ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகள்**

3. பின்வருவன ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையாக அமைதல் வேண்டும் :-

(அ) விளையாட்டு வீரர் "B" மாதிரியின் பகுப்பாய்வை விட்டுக்கொடுத்து "B" மாதிரி பகுப்பாய்வு செய்யப்படாதவிடத்து அல்லது விளையாட்டு வீரரின் "B" மாதிரி பகுப்பாய்வு செய்யப்பட்டு விளையாட்டு வீரரின் "B" மாதிரியின் பகுப்பாய்வு, தடை செய்யப்பட்ட பதார்த்தம் அல்லது அதன் ஊன்மச்சிதைவுகள் அல்லது குறியீடுகள் விளையாட்டு வீரரின் "A" மாதிரியில் காணப்படுவதனை உறுதிப்படுத்துமிடத்து; அல்லது விளையாட்டு வீரரின் "B" மாதிரி இரு போத்தல்களினுள் இடப்பட்டு இரண்டாவது போத்தலின் பகுப்பாய்வு, முதலாவது போத்தலில் காணப்பட்ட தடை செய்யப்பட்ட பதார்த்தம் அல்லது அதன் ஊன்மச்சிதைவுகள் அல்லது குறியீடுகள் உள்ளமையை உறுதிப்படுத்துமிடத்தும், விளையாட்டு வீரரொருவரின் "A" மாதிரியில் தடை செய்யப்பட்ட பதார்த்தமொன்று அல்லது அதன் ஊன்மச்சிதைவுகள் அல்லது குறியீடுகள் உள்ளமை:

ஆயின், பெறுபேறு முகாமைப் பொறுப்பைக்கொண்ட இஊபபமு, அதன் தற்றுணிபின்படி, விளையாட்டு வீரர் "B" மாதிரியின் பகுப்பாய்வுக்காகக் கோரிக்கை விடுக்காதிருப்பினும் "B" மாதிரி பகுப்பாய்வு செய்யப்படுவதனைச் செய்விக்கலாம்;

(ஆ) எந்தப் பதார்த்தங்களுக்காக அளவுசார் பயன்தொடக்கமொன்று தடை செய்யப்பட்ட நிரலில் குறிப்பாக அடையாளங் காணப்பட்டுள்ளதோ அந்தப் பதார்த்தங்கள் தவிர, ஒரு விளையாட்டு வீரரின் மாதிரியில் தடை செய்யப்பட்டவொரு பதார்த்தத்தின் அல்லது அதன் ஊன்மச்சிதைவுகளின் அல்லது குறியீடுகளின் ஏதேனும் தொகை உள்ளமை;

(இ) ஒரு தடை செய்யப்பட்ட பதார்த்தம் அல்லது தடை செய்யப்பட்ட முறை ஒரு விளையாட்டு வீரரினால் பயன்படுத்தப்படுகின்றமை அல்லது பயன்படுத்தப்படுவதற்கு எத்தனிக்கப்படுகின்றமை;

(ஈ) பந்திகள் (அ), (ஆ), (இ) என்பனவற்றின் நோக்கத்துக்காக,

(i) ஒவ்வொரு விளையாட்டு வீரரும், தடை செய்யப்பட்ட பதார்த்தமெதுவும் தனது உடம்பினுட் செல்லாதிருப்பதனையும் தடை செய்யப்பட்ட முறை எதுவும் பயன்பத்துபடாதிருப்பதனையும் உறுதிப்படுத்துவது அவரது பொறுப்பாகும். அதற்கிணங்க, தடை செய்யப்பட்டவொரு பதார்த்தத்தை அல்லது தடை செய்யப்பட்டவொரு முறையைப் பயன்படுத்தியமைக்காக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை நிலைநாட்டுவதற்கென உட்கருத்து, தவறு, அசட்டை அல்லது அறிந்துகொண்டு பயன்படுத்துகின்றமை என்பன எடுத்துக்காட்டப்பட வேண்டியது அவசியமல்ல;

(ii) தடை செய்யப்பட்ட பதார்த்தமொன்றை அல்லது தடை செய்யப்பட்ட முறையொன்றைப் பயன்படுத்துவதன் அல்லது பயன்படுத்துவதற்கு எத்தனிப்பதன் வெற்றி அல்லது தோல்வி முக்கியமானதல்ல. ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்று புரியப்படுவதற்காகத் தடை செய்யப்பட்ட பதார்த்தம் அல்லது தடை செய்யப்பட்ட முறை பயன்படுத்தப்பட்டமை அல்லது பயன்படுத்தப்படுவதற்கு எத்தனிக்கப்பட்டமை போதியதாகும்.

(உ) மாதிரிச் சேகரிப்பைத் தட்டிக்கழித்தல் அல்லது வலுக்கட்டாயப்படுத்தும் நியாயப்படுத்துகையின்றி, இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளில் அதிகாரமளிக்கப்பட்டவாறாக அறிவித்தலின் பின்னர் மாதிரிச் சேகரிப்பக்கு அமைந்தொழுக மறுக்கின்றமை அல்லது தவறுகின்றமை;

(ஊ) ஒரு பதிவு செய்யப்பட்ட சோதனைக் குழுவிலுள்ள விளையாட்டு வீரரொருவரினால் பன்னிரண்டு மாதக்காலப்பகுதியினுள், சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறு, மூன்று தவறிய சோதனைகளின் அல்லது கோப்பிடப்படுகின்ற தவறுதல்களின் ஏதேனும் சேர்க்கை;

(எ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டின் ஏதேனும் பாகத்துடன் குறுக்கிடுகின்றமை அல்லது குறுக்கிடுவதற்கு எத்தனிக்கின்றமை.

இப்பந்தியின் நோக்கங்களுக்காகக் "குறுக்கிடுதல்" என்பது, வரையறையின்றி, ஊக்கு பதார்த்தக் கட்டுப்பாட்டு அலுவலரொருவருடன் வேண்டுமென்று குறுக்கிடுகின்றமை அல்லது குறுக்கிடுவதற்கு எத்தனிக்கின்றமை, ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புக்கு மோசடியான தகவலை வழங்குகின்றமை அல்லது இயல்திறச் சாட்சியை அச்சுறுத்துகின்றமை அல்லது அச்சுறுத்துவதற்கு எத்தனிக்கின்றமை;

(ஏ) தடை செய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடை செய்யப்பட்ட முறையை உடைமையில் வைத்திருக்கின்றமை. இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(i) உடைமையானது (இதனகத்துப்பின்னர் "நோபவி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நோய் தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புடன் அல்லது வேறு ஏற்றுக்கொள்தகு நியாயப்படுத்துகையுடன் ஒத்ததாகவுள்ளதென விளையாட்டு வீரர் நிலைநாட்டினாலொழிய, போட்டியின்போது தடை செய்யப்பட்ட ஏதேனும் பதார்த்தத்தை அல்லது ஏதேனும் தடை செய்யப்பட்ட முறையை விளையாட்டு வீரரொருவர் உடைமையில் வைத்திருத்தல், அல்லது போட்டியில் இல்லாதபோது தடை செய்யப்பட்ட முறையை விளையாட்டு வீரரொருவர் உடைமையில் வைத்திருத்தல்.

(ii) உடைமையானது, விளையாட்டு வீரரொருவருக்கு வழங்கப்பட்ட நோபவியுடன் அல்லது வேறு ஏற்றுக்கொள்தகு நியாயப்படுத்துகையுடன் ஒத்ததாகவுள்ளதென விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினர் நிலைநாட்டினாலொழிய, போட்டியின்போது தடை செய்யப்பட்ட ஏதேனும் பதார்த்தத்தை அல்லது ஏதேனும்

தடை செய்யப்பட்ட முறையை விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினர் உடைமையில் வைத்திருத்தல் அல்லது ஒரு விளையாட்டு வீரர், போட்டி அல்லது பயிற்சி சம்பந்தமாகப் போட்டியில் இல்லாதபோது தடை செய்யப்பட்ட ஏதேனும் தடை செய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது ஏதேனும் தடை செய்யப்பட்ட முறையை ஒரு விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினர் போட்டியில் இல்லாதபோது உடைமையில் வைத்திருத்தல்.

இப்பந்தியின் நோக்கத்துக்காக, "ஏற்றுக்கொள்தகு நியாயப்படுத்துகை" என்பது, தீவிரமான மற்றும் அவசரகால நிலைமைகளைக் கையாள்வதற்காக ஓர் அணியின் மருத்துவர் தடை செய்யப்பட்ட பதார்த்தங்களைக் கொண்டுசெல்லல் என்று பொருளாகும், ஆனால் அத்தகைய ஆள் ஒரு வைத்தியரின் மருந்துப்பட்டோலையை வைத்திருந்தவிடத்து நியாயப்படுத்தத்தக்க மருத்துவச் சூழ்நிலைகளின்கீழன்றி, ஒரு நண்பருக்கு அல்லது உறவினருக்குக் கொடுக்கும் நோக்கங்களுக்காகத் தடை செய்யப்பட்டவொரு பதார்த்தத்தை வாங்குதலை அல்லது உடைமையில் வைத்திருத்தலை உள்ளடக்காது;

(ஐ) தடை செய்யப்பட்ட ஏதேனும் பதார்த்தத்தை அல்லது தடை செய்யப்பட்ட முறையை விலைப்படுத்துகின்றமை அல்லது விலைப்படுத்துவதற்கு எத்தனிக்கின்றமை;

(ஒ) தடை செய்யப்பட்ட ஏதேனும் பதார்த்தத்தை அல்லது தடை செய்யப்பட்ட முறையைப் போட்டியின்போதான எவரேனும் வியையாட்டு வீரருக்கு ஊட்டுகின்றமை அல்லது ஊட்டுவதற்கு எத்தனிக்கின்றமை, அல்லது போட்டியில் இல்லாதபோது தடை செய்யப்பட்ட ஏதேனும் தடை செய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடை செய்யப்பட்ட ஏதேனும் முறையை எவரேனும் விளையாட்டு வீரருக்குப் போட்டியில் இல்லாதபோது ஊட்டுகின்றமை அல்லது ஊட்டுவதற்கு எத்தனிக்கின்றமை;

(ஓ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் ஒரு மீறுகைக்கு அல்லது எத்தனிக்கப்பட்ட மீறுகைக்கு அல்லது 62 ஆம் விதியின்கீழ் வேறோர் ஆளினாலான ஏதேனும் மீறுகைக்கு உதவுகின்றமை, அதனை ஊக்குவிக்கின்றமை, அதற்குத் துணைபுரிகின்றமை, உடந்தையளிக்கின்றமை, சதி செய்கின்றமை, அதனை மூடிமறைக்கின்றமை அல்லது அம்மீறுகையை உட்படுத்துகின்ற வேறேதேனும் கூட்டுச்சதியைப் புரிகின்றமை;

(ஔ) இஊபபமு வின் அதிகாரத்துக்கமைய, பின்வருபவராகவுள்ள எவரேனும் விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினருடன் உயர்தொழிற்சார் அல்லது விளையாட்டுத் தொடர்பான தன்மையில் ஒரு விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் இணைகின்றமை:-

(i) ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் அதிகாரத்துக்கமையவிருப்பின், தகவின்மைக் காலப்பகுதியொன்றை அனுபவித்துக் கொண்டிருப்பவர்; அல்லது

(ii) ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் அதிகாரத்துக்கமைந்திராதிருப்பின், மற்றும் கோவையைப் பின்பற்றிப் பெறுபேறுகள் முகாமைச் செய்முறையில் தகவின்மை எதிர்நோக்கப்பட்டிராதிருக்குமிடத்து, அத்தகைய ஆளுக்குக் கோவை இணங்கியொழுகுகை விதிகள் ஏற்புடையதற்பாலனவாக இருந்திருப்பின் ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையாக அமைந்திருக்கக்கூடிய நடத்தையில் ஈடுபட்டுள்ளாரென ஒரு குற்றவியல், ஒழுக்காற்று அல்லது உயர்தொழிற்சார் வழக்கு நடவடிக்கையில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பவர் அல்லது காணப்பட்டிருப்பவர், அத்தகைய ஆளின் தகைமையீனமளிக்கும் அந்தஸ்து, குற்றவியல், உயர்தொழிற்சார் அல்லது ஒழுக்காற்று முடிபிலிருந்து அல்லது சுமத்தப்பட்ட குற்றவியல், ஒழுக்காற்று அல்லது உயர்தொழிற்சார் தடைவிதிப்புக் காலப்பகுதியின் ஆறாண்டுகளின் நீட்சிக்கு வலுவிலிருத்தல் வேண்டும்;

(iii) பந்திகள் (i) மற்றும் (ii) இல் விவரிக்கப்பட்டவொரு தனியாளுக்காக ஒரு முகப்பாளராக அல்லது இடையீட்டாளராகச் சேவையாற்றுபவர் இப்பந்தியின் நோக்கங்களுக்காக, விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினரின் தகைமையீனமளிக்கம் அந்தஸ்து மற்றும் தடை செய்யப்பட்ட இணைகின்றமையின் இயல்திற விளைவு என்பன பற்றியும் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் இணைகின்றமையை நியாமான முறையில் தவிர்க்க முடியுமென்றும் அவ்விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பொன்றினால், அல்லது (இதனகத்துப்பின்னர் "உஊபபமு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உலக ஊக்குபதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையினால் முன்னர் எழுத்தில் மதியுரையளிக்கப்பட்டிருத்தல் அவசியமாகும்.

**ஊக்கு பதார்த்தப் பயன்பாடு பற்றிய எண்பிப்பு**

4. ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்று ஏற்பட்டுள்ளதென்பதை நிலைநாட்டுவதற்கான பொறுப்ப இஊபபமு வைச் சார்ந்ததாதல் வேண்டும். செய்யப்படுகின்ற சார்த்துதலின் பாரதூரமான தன்மையை மனதிற்கொண்டு கேட்புக் குழுமத்தின் திருப்திக்கு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியொன்றை இஊபபமு நிலைநாட்டியுள்ளதாவென்பது எண்பிப்புக்கான நியமமாதல் வேண்டும். எல்லா விடயங்களிலும் இந்த எண்பிப்புக்கான நியமமானது, வெறுமனே நிகழ்தகவுச் சமநிலையைப்பார்க்கிலும் அதிகமாகவுள்ளது ஆனால் நியாயமான ஐயத்துக்கப்பாற்பட்ட எண்பிப்பைப்பார்க்கிலும் குறைவாகவுள்ளது. ஓர் ஊகத்தை மறுதலிப்பதற்கான அல்லது குறித்துரைக்கப்பட்ட நிகழ்வுகளை அல்லது சூழ்நிலைகளை நிலைநாட்டுவதற்கான எண்பிப்புக்கான பொறுப்பை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்றைப் புரிந்துள்ளவரெனச் சார்த்தப்பட்ட விளையாட்டு வீரரின்மேல் அல்லது வேறு ஆளின்மேல் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதரான விதிகள் சுமத்துமிடத்து, எண்பிப்புக்கன நியமமானது நிகழ்தகவுச் சமநிலையின் மூலமானதாக இருத்தல் வேண்டும்.

**நிகழ்வுகளையும் ஊகங்களையும் நிலைநாட்டுவதற்கான முறைகள்**

5. இஊபபமு ஆனது, விளையாட்டு வீரரின் ஒப்புக்கொள்ளுதல்கள், மூன்றாம் ஆட்களின் நம்பிக்கையான சாட்சியம், நம்பத்தகு ஆவணமுறையான சான்று, ஒன்றில் “A” அல்லது “B” மாதிரியிலிருந்து நம்பத்தகு பகுப்பாய்வுசார் தரவு அல்லது விளையாட்டு வீரரின் தொடர்ச்சியான இரத்த அல்லது சிறுநீர் மாதிரிகளின் தோற்றத்திலிருந்து பெறப்பட்ட முடிபுகள் என்பவற்றின் அடிப்படையின்மீது, 3 (உ) என்னும் விதியின்கீழான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்றை நிலைநாட்டலாம்.

6. உஊபபமு வினால் தராதர அங்கீகாரமளிக்கப்பட்ட இயைபான ஆய்வுகூடத்துடனான கலந்தாலோசனையின் பின்னர் உஊபபமு வினால் அங்கீகரிக்கப்பட்டதும் ஒப்பாரினது மீளாய்வின் விடயமாக இருந்துள்ளதுமான ஏதேனும் பகுப்பாய்வுசார் முறை அல்லது முடிபு வரையறை, விஞ்ஞான ரீதியில் செல்லுபடியானதாக ஊகிக்கப்படுகின்றது. இந்த விஞ்ஞான ரீதியிலான செல்லுபடியாந்தன்மை பற்றிய இந்த ஊகத்தை மறுதலிப்பதற்கு நாடுகின்ற எவரேனும் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், அத்தகைய ஏதேனும் சவாலுக்கு முந்நிபந்தனையாக, சவால் பற்றியும் அடிப்படை பற்றியும் உஊபபமு இற்கும் முதலில் அறிவித்தல் வேண்டும். விளையாட்டுத்துறை நடுத்தீர்ப்பு நீதிமன்றம் (விநநீ), அதன் சொந்த முயற்சியின் மீது அத்தகைய ஏதேனும் சவால்பற்றி உஊபபமு வுக்கும் அறிவிக்கலாம். உஊபபமு வின் கோரிக்கையின்பேரில், சவாலை மதிப்பீடு செய்வதில் விநநீ குழாத்துக்கு உதவுதற்குத் தோதான அறிவியல் நிபுணரொருவரைக் குழாமானது நியமித்தல் வேண்டும். உஊபபமுவின் அறிவித்தலையும் விநநீ கோப்பையும் உலக ஊக்கு பதாரத்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை பெற்ற திகதியிலிருந்து பத்து நாட்களினுள், உஊபபமு ஆனது திறத்தவரொருவராக இடையீடு செய்வதற்கும், நயன்மன்ற உதவுநராகத் தோன்றுவதற்கும், அல்லது அத்தகைய வழக்கு நடவடிக்கையில் வேறுவகையாகச் சான்று வழங்குவதற்குமான உரிமையைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

7. உஊபபமு - தராதர அங்கீகாரமளிக்கப்பட்ட ஆய்வுகூடங்களும் , உலக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் வேறு ஆய்வுகூடங்களும், ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்துக்கிணங்க மாதிரிப் பகுப்பாய்வையும் காப்புப் பொறுப்புச்சார் நடவடிக்கைமுறைகளையும் நடாத்தியுள்ளனவென ஊகிக்ககப்படுகின்றது. பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை நியாயமானமுறையில் விளைவித்திருக்கக்கூடிய ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்திலிருந்தான விலகுகையொன்று ஏற்பட்டதென்பதை நிலைநாட்டுவதன் மூலம் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் இந்த ஊகத்தை மறுதலிக்கலாம். பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகைய நியாயமான முறையில் விளைவித்திருக்கக்கூடிய ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்திலிருந்தான விலகுகையொன்று ஏற்பட்டதென்பதைக் காட்டுவதன்மூலம் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் முற்போந்த ஊகத்தை மறுதலித்தால், அப்போது, அத்தகைய விலகுகை பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை விளைவிக்கவில்லையென்பதை நிலைநாட்டுவதற்கான பொறுப்பு உஊபபமு வைச் சார்ந்ததாதல் வேண்டும்.

8. பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை அல்லது வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை ஏற்படுத்தாததும், கோவையில் அல்லது இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளில் தரப்பட்டுள்ளதுமான வேறேதேனும் சர்வதேச நியமத்திலிருந்தான அல்லது வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியிலிருந்தான அல்லது கொள்கையிலிருந்தான விலகுகைகள் அத்தகைய சான்றை அல்லது பெறுபேறுகளைச் செல்லுபடியற்றனவாக்குதலாகாது.

9. பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையின் அல்லது வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியினது மீறுகையின் அடிப்படையின்மீது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை நியாயமானமுறையில்

ஏற்படுத்தியிருக்கக்கூடிய வேறொரு சர்வதேச நியமத்திலிருந்தான அல்லது வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான அல்லது கொள்கைக்கெதிரான விலகுகையொன்றை விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் நிலைநாட்டுமிடத்து, அப்போது, அத்தகைய விலகுகை, பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்கான நிகழ்வுசார் அடிப்படையை ஏற்படுத்தவில்லையென்பதை நிலைநாட்டுவதற்கான பொறுப்பு உஊபபமு வைச் சார்ந்ததாதல் வேண்டும்.

10. முடிவுறாதிருக்கும் மேன்முறையீடொன்றின் விடயமாகவிராதவையும், ஒரு நீதிமன்றத்தின் அல்லது தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்தைக் கொண்ட உயர்தொழிற்சார் ஒழுக்காற்று நியாயசபையின் முடிபொன்றினால் நிலைநாட்டப்பட்டவையுமான நிகழ்வுகள், அம்முடிபானது இயற்கை நீதிநெறிகளை மீறியதென விளையாட்டுவீரர் அல்லது வேறு ஆள் நிலைநாட்டினாலொழிய, அந்நிகழ்வுகள்பற்றிய முடிபு எந்த விளையாட்டு வீரருக்கெதிராக அல்லது வேறு ஆளுக்கெதிராகச் செய்யப்பட்டதோ அவருக்கெதிரான மறுதலிக்கப்படற்பாலதல்லாத சான்றாதல் வேண்டும்.

11. ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியினது மீறுகையின்மீதான கேட்பிலான கேட்புக் குழாம், கேட்பில் தோன்றுவதற்கும் கேட்புக் குழாத்திலிருந்தான அல்லது இஊபபமு விடமிருந்தான கேள்விகளுக்கு மறுமொழியளிப்பதற்கும், கேட்புக்குமுன்னர் நியாயமானவொரு காலத்தில் செய்யப்பட்ட கோரிக்கையின்பின்னர், விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் மறுப்பின் அடிப்படையின்மீது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்துள்ளாரெனத் துணிவுரைக்கப்படுகின்ற விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்குப் பாதகமான ஊகமொன்றைச் செய்யலாம்.

## <u>தடை செய்யப்பட்ட பதார்த்தங்களும் தடை செய்யப்பட்ட முறைகளும்</u>

12. தடை செய்யப்பட்ட நிரலில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, தடை செய்யப்பட்ட நிரல், இஊபபமு வினால் ஏதேனும் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுவதனைத் தேவைப்படுத்தாமல் உஊபபமு வினால் அத்தகைய நிரல் வெளியிடப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பின்னர் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின்கீழ் பயனுடையதாக வருதல் வேண்டும். எவரேனும் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் தடை செய்யப்பட்ட நிரலினால் பிணிக்கப்படுதல் வேண்டும். தடை செய்யப்பட்ட நிரலின் மிக்க நாளதுவரையான உரையுடன் தம்மைப் பரிச்சயப்படுத்திக்கொள்வது ஒவ்வொரு விளையாட்டு வீரரினதும் வேறு ஆள் ஒவ்வொருவரினதும் பொறுப்பாதல் வேண்டும்.

13. நாற்பத்தோராம் விதியை ஏற்புடையதாக்கும் நோக்கங்களுக்காக, தடை செய்யப்பட்ட பதார்த்தம் ஒவ்வொன்றும், உயிர்ப்பொருள் ஆக்கத்திற்குரிய இயக்கிகளும் இயக்குநீர்களும் என்ற வகுப்புக்களைச் சேர்ந்த பதார்த்தங்களையும் தடை செய்யப்பட்ட நிரலில் அவ்வாறு அடையாளங்காணப்பட்ட அந்த ஊக்கிகளையும் இயக்கநீர் எதிர்ப்பான்களையும் தகவேற்றிகளையும் தவிர, குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்களின் வகுதி, தடை செய்யப்பட்ட முறைகளை உள்ளடக்குதலாகாது.

14. தடை செய்யப்பட்ட நிரலில் உள்ளடக்கப்படும் தடை செய்யப்பட்ட பதார்த்தங்களும் தடை செய்யப்பட்ட முறைகளும், தடை செய்யப்பட்ட நிரலின்மீதுள்ள வகுதிகளாகப் பதார்த்தங்களை வகுப்பாக்கஞ் செய்தலும் எல்லா நேரங்களிலும் அல்லது போட்டியின்போது மட்டுமே தடை செய்யப்பட்டவாறான ஒரு பதார்த்தத்தை வகுப்பாக்கஞ்செய்தலும் பற்றிய உஊபபமு வின் தீர்மானமும் இறுதியானதாகும் என்பதுடன், பதார்த்தம் அல்லது முறை ஒரு மூடியிடல் இயக்கியாக இருக்கவில்லை அல்லது செயல்புரிகையை அதிகரிப்பதற்கான, உடனல அபாயமாக அமைவதற்கான அல்லது விளையாட்டின் பொது இயல்பை மீறுவதற்கான இயல்திறனைக் கொண்டிருக்கவில்லை என்ற வாதத்தின் அடிப்படையின் மீது ஒரு விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் சவாலுக்குட்படுத்தப்படுவதற்கு அமைந்ததாதலுமாகாது.

## <u>நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகள் ("நோபவி")</u>

15. (1) ஒரு தடை செய்யப்பட்ட பதார்த்தம் அல்லது அதன் ஊன்மச்சிதைவுகள் அல்லது குறிப்பீடுகள் அல்லது ஒரு தடை செய்யப்பட்ட பதார்த்தத்தின் அல்லது தடை செய்யப்பட்ட முறையின் பயன்பாடு அல்லது எத்தனிக்கப்பட்ட பயன்பாடு, உடைமை அல்லது ஊட்டுகை அல்லது எத்தனிக்கப்பட்ட ஊட்டுகை என்பன, நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்துக்கிணங்க வழங்கப்பட்ட நோபவி இன் ஏற்பாடுகளுடன் ஒத்ததாகவிருப்பின், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையாகக் கருதப்படுதலாகாது.

(2) இஊபபமு வினால் அதன் இணையத்தளத்தில் வெளிக்காட்டப்பட்ட அறிவித்தலில் வேறுவகையாகக் குறித்துரைக்கப்பட்டாலொழிய, நோய்தீர்க்கும் நோக்கங்களுக்காக ஒரு தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடை செய்யப்பட்ட முறையைப் பயன்படுத்துவதற்குத் தேவையுள்ள எவரேனும் தேசியமட்ட விளையாட்டு வீரர், தேவை

எழுகின்றவுடன் மற்றும் எப்பட்சத்திலும் (அவசரகால அல்லது விதிவிலக்கான நிலைமைகளில் அல்லது நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்தின் 15 ஆம் விதி ஏற்புடையதாகுமிடத்துத் தவிர) ஒரு நோபவிக்காக இஊபபமு வுக்கு ஆகக்குறைந்தது விளையாட்டு வீரரின் அடுத்த போட்டிக்கு முப்பது நாட்களுக்கு முன்னரேனும் விண்ணப்பித்தல் வேண்டும். நோபவிக்களை வழங்குவதற்கான அல்லது ஏற்றங்கீகரிப்பதற்கான விண்ணப்பங்களைக் கவனத்துட்கொள்வதற்குக் குழாமொன்றை இஊபபமு நியமித்தல் வேண்டும். நோபவி குழு, நோபவிக்களுக்கான சர்வதேச நியமத்தின் இயைபான ஏற்பாடுகளுக்கிணங்க விண்ணப்பத்தை உடனடியாக மதிப்பீடு செய்து அதுபற்றி முடிபு செய்தல் வேண்டும். அதன் முடிபானது இஊபபமு வின் இறுதி முடிபாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், நோய்தீர்க்கும் பயன்பாட்டுக்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்துக்கிணங்க, (இதனகத்துப் பின்னர் "ஊபபநிமுமு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிருவாக மற்றும் முகாமை முறைமையினூடாக உஊபபமு மற்றும் வேறு இயைபான ஊபப ஒழுங்கமைப்புகளுக்கும் விளையாட்டு வீரரின் விளையாட்டுகள் ஒழுங்கமைப்புக்கும் அறிக்கையிடப்படுதலும் வேண்டும்.

16. இஊபபமு வினால் வழங்கப்பட்ட நோபவி ஒன்று மட்டத்தில் மட்டுமே செல்லுபடியாதல் வேண்டுமென்பதுடன், சர்வதேச மட்ட விளையாட்டு வீரராகவுள்ள அல்லது வருகின்ற விளையாட்டு வீரரொருவர் :-

(அ) கேள்விக்குட்படுத்தப்பட்ட பதார்த்தத்துக்காக அல்லது முறைக்காக இஊபபமு வினால் வழங்கப்பட்ட நோபவி ஒன்றை விளையாட்டு வீரர் அல்லது விளையாட்டு வீராங்கணை ஏலவே கொண்டிருக்குமிடத்து, அவ்விளையாட்டு வீரர் அல்லது வீராங்கணை, நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புக்கான சர்வதேச நியமத்தின் 22 ஆம் விதிக்கிணங்க, அந்த நோபவியை ஏற்றங்கீகரிக்கும்படி அவரது அல்லது அவளது சர்வதேசச் சம்மேளனத்துக்கு விண்ணப்பிக்கலாம். அந்த நோபவி ஆனது, நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்தில் தரப்பட்டுள்ள கட்டளைக்கற்களை எதிர்கொண்டால், அப்போது அச்சர்வதேசச் சம்மேளனம், சர்வதேச மட்டப் போட்டி நோக்கங்களுக்காகவும் அதனை ஏற்றங்கீகரித்தல் வேண்டும். இஊபபமு வினால் வழங்கப்பட்ட நோபவி, அக்கட்டளைக்கற்களை எதிர்கொள்வதில்லையெனச் சர்வதேசச் சம்மேளனம் கருதுவதுடன்அதனை ஏற்றங்கீகரிப்பதற்கு அவ்வாறு மறுத்தால், சர்வதேசச் சம்மேளனம், காரணங்களுடன், சர்வதேச மட்ட விளையாட்டு வீரருக்கும் இஊபபமு வுக்கும் உடனடியாக அறிவித்தல் வேண்டும் சர்வதேச மட்ட விளையாட்டு வீரருக்கும் இஊபபமு வுக்கும், பரிசீலனைக்காக அவ்விடயத்தை உஊபபமு வுக்கு ஆற்றுப்படுத்தவதற்கு அத்தகைய அறிவித்தலிலிருந்து இருபத்தொரு நாட்கள் கொடுக்கப்படுதல் வேண்டும். அவ்விடயமானது 18 ஆம் விதிக்கிணங்கப் பரிசீலனைக்காக உஊபபமு வுக்கு ஆற்றுப்படுத்தப்படின், உஊபபமு வின் முடிபு செய்யப்படும்வரை இஊபபமு வினால் வழங்கப்பட்ட நோபவி, தேசிய மட்டப் போட்டிக்காகவும் போட்டியில் இல்லாதபோதான சோதனைக்காகவும் செல்லுபடியாகவிருக்கும் (ஆனால் சர்வதேச மட்டப் போட்டிக்காகச் செல்லுபடியாகாது). அவ்விடயமானது பரிசீலனைக்காக உஊபபமு வுக்கு ஆற்றுப்படுத்தப்படாவிடின், பரிசீலனைக்கான இருபத்தொரு நாட்களைக்கொண்ட காலக்கெடு முடிவுறும்போது நோபவி ஆனது எந்நோக்கத்துக்காகவும் செல்லுபடியற்றதாகவரும்.

நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க, இஊபபமு ஆனது, இஊபபமு வினால் சர்வதேசச் சம்மேளனமொன்றுக்கு அல்லது பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்பொன்றுக்கு ஏற்றங்கீகாரத்துக்காக வழங்கப்பட்ட நோபவிக்களை அதன் விளையாட்டு வீரர்கள் எப்போது சமர்ப்பிக்க வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதற்கு அவர்களுக்கு உதவலாமென்பதுடன், ஏற்றங்கீகரிப்புச் செய்முறையினூடாக அந்த விளையாட்டு வீரர்களுக்கு வழிகாட்டி ஆதரவுமளிக்கலாம்.

(ஆ) நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்திலான கட்டளைக்கற்களைத் திருப்திசெய்வதனை எடுத்துக்காட்டுவதற்குத் தேவையான மருத்துவப் பதிவேடுகள் அல்லது வேறு தகவல்கள் காணாமற்போயுள்ளன என்ற காரணத்துக்காக மட்டும் இஊபபமு வினால் வழங்கப்பட்ட நோபவி ஒன்றை சர்வதேசச் சம்மேளனமொன்று ஏற்றங்கீகரிக்க மறுத்தால், அவ்விடயமானது, உஊபபமு வுக்கு ஆற்றுப்படுத்தப்படலாகாது. அதற்குப் பதிலாக, கோப்பானது நிரப்பப்பட்டு சர்வதேசச் சம்மேளனத்துக்கு மீளச்சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(இ) கேள்விக்குட்பட்ட பதார்த்தத்துக்காக அல்லது முறைக்காக இஊபபமுவினால் வழங்கப்பட்ட நோபவி ஒன்றை விளையாட்டு வீரர் ஏலவே கொண்டிராதிருப்பின், நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்தில் தரப்பட்டுள்ள செய்முறைக்கிணங்க விளையாட்டு வீரர் நோபவி ஒன்றுக்காகச் சர்வதேசச் சம்மேளனத்துக்கு நேரடியாக விண்ணப்பித்தல் வேண்டும். சர்வதேசச் சம்மேளனம் விளையாட்டு வீரரின் விண்ணப்பத்தை அனுமதித்தால், அது, விளையாட்டு வீரருக்கும் இஊபபமுவுக்கும் அறிவித்தல் வேண்டும். சர்வதேசச் சம்மேளனத்தினால் வழங்கப்பட்ட நோபவி, நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்தில் தரப்பட்டுள்ள கட்டளைக்கற்களை எதிர்கொள்வதில்லையென இஊபபபமு கருதினால், அவ்விடயத்தைப் பரிசீலனைக்காக உஊபபமு வுக்கு அத்தகைய அறிவித்தலிலிருந்து இருபத்தொரு நாட்களினுள்

அது ஆற்றுப்படுத்தலாம். இஊபபமு, பரிசீலனைக்காக அவ்விடயத்தை இஊபபமுவுக்கு ஆற்றுப்படுத்தினால், சர்வதேசச் சம்மேளனத்தினால் வழங்கப்பட்ட நோபவி, உஊபபமுவின் முடிபு செய்யப்படும் வரை சர்வதேச மட்டப் போட்டிக்காகவும் போட்டியில் இல்லாத போதான சோதனைக்காகவும் செல்லுபடியாகவிருக்கும் (ஆனால் தேசிய மட்டப் போட்டிக்காகச் செல்லுபடியாகாது) இஊபபமு ஆனது, பரிசீலனைக்காக அவ்விடயத்தை உஊபபமு வுக்கு ஆற்றுப்படுத்தாவிடின், சர்வதேசச் சம்மேளனத்தினால் வழங்கப்பட்ட நோபவி, இருபத்தொரு நாட்களைக் கொண்ட காலக்கெடு முடிவுறும்போது தேசிய மட்டப் போட்டிக்காகவும் செல்லுபடியாகவரும்.

ஒரு நோபவியின் முடிவுறுத்துகை, இல்லாதாக்குகை, மீளப்பெறுகை அல்லது எதிர்மாறாக்குகை

17. (1) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளைப் பின்பற்றி வழங்கப்பட்ட நோபவி ஒன்று -

(அ) ஏதேனும் மேலதிக அறிவிப்புக்கான அல்லது வேறு விதிமுறைக்கான தேவையின்றி, அது எந்தக் காலத்துக்காக வழங்கப்பட்டதோ அந்தக் காலத்தின் முடிவில் தானாகவே முடிவுறுதல் வேண்டும் ;

(ஆ) நோபவியின் வழங்குகையின்மேல் நோபவி குழுவினால் சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுடன் அல்லது நிபந்தனையுடன் விளையாட்டு வீரர் உடனடியாக இணங்கியொழுகாவிடின் அது இல்லாதாக்கப்படலாம் ;

(இ) நோபவி ஒன்றை வழங்குவதற்கான கட்டளைக்கற்கள் உண்மையில் எதிர்கொள்ளப்படவில்லையென அடுத்துப் பின்னர் தீர்மானிக்கப்படின், நோபவி, குழுவினால் மீளப்பெறப்படலாம் ; அல்லது

(ஈ) உஊபபமு வினாலான பரிசீலனையின்மீது அல்லது மேன்முறையீட்டின்மீது எதிர்மாறாக்கப்படலாம்.

(2) அத்தகைய பட்சத்தில், விளையாட்டு வீரர், நோபவியின் முடிவுறுத்துகை, இல்லாதாக்குகை, மீளப்பெறுகை அல்லது எதிர்மாறாக்குகையின் பயனுள்ள தேதிக்கு முன்னர் நோபவிக் கிணங்கக் கேள்விக்குட்படுத்தப்பட்ட தடை செய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடை செய்யப்பட்ட முறையை அவர் பயன்படுத்துவதன் அல்லது உடைமையில் வைத்திருப்பதன் அல்லது ஊட்டுவதன் அடிப்படையின் மீதான எவையேனும் விளைவுகளுக்கமைந்தவராதலாகாது. ஏதேனும் அடுத்துப் பின்னரான பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையின் 22(3) ஆம் விதியைப் பின்பற்றிச் செய்யப்பட்ட பரிசீலனை, அத்தகைய கண்டறிகை அத்தேதிக்குமுன்னர் தடை செய்யப்பட்ட பதார்த்தத்தின் அல்லது தடை செய்யப்பட்ட முறையின் பயன்பாட்டுடன் ஒத்ததாகவுள்ளதாவென்பதனைக் கவனத்துட்கொள்ளுதலை உள்ளடக்குதல் வேண்டும்; அப்பட்சத்தில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மீறுகையெதுவும் துணிவுரைக்கப்படுதலாகாது.

நோபவி முடிபுகளின் பரிசீலனைகளும் மேன்முறையீடுகளும்

18. (1) ஒரு மருத்துவரினால் அங்கீகரிக்கப்பட்டு இஊபபமுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நோபவிக்கான விண்ணப்பமொன்றை இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை அனுமதிக்க மறுத்தால், இயைபான விளையாட்டு வீரர் 70 ஆம், 75 ஆம் விதிகளின் நியதிகளின்படி தேசிய மட்ட மேன்முறையீட்டுக குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) உஊபபமு ஆனது, விளையாட்டு வீரரினால் அல்லது இஊபபமு வினால் உஊபபமு வுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றதும் இஊபபமுவினால் வழங்கப்பட்டதுமான நோபவி ஒன்றை ஏற்றங்கீகரிக்காதிருப்பதற்குச் சர்வதேசச் சம்மேளனமொன்றினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபைப் பரிசீலனை செய்தல் வேண்டும். மேலதிகமாக, இஊபபமு வினால் உஊபபமு வுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற நோபவி ஒன்றை வழங்குவதற்குச் சர்வதேசச் சம்மேளனமொன்றினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபை உஊபபமு பரிசீலனைசெய்தல் வேண்டும். உஊபபமு ஆனது, பாதிக்கப்பட்டோரின் கோரிக்கையின்மேல் அல்லது அதன் சொந்த முயற்சியின்மீது, வேறெவையேனும் நோபவி முடிபுகளை எந்நேரத்திலும் பரிசீலனைசெய்யலாம். பரிசீலனை செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்ற நோபவி முடிபு, அக்கட்டளைக்கற்களை எதிர்கொள்ளாதிருப்பின், உஊபபமு அதனை எதிர்மாறாக்குதல் வேண்டும்.

(3) ஒரு சர்வதேசச் சம்மேளனத்தினால் அல்லது இஊபபமு வினால் செய்யப்பட்ட ஏதேனும் நோபவி முடிபுக்கெதிராக, உஊபபமு வினால் பரிசீலனை செய்யப்படாததும், அல்லது உஊபபமுவினால் பரிசீலனைசெய்யப்பட்டு ஆனால் பரிசீனையின்மேல் எதிர்மாறாக்கப்படாததும், சர்வதேசச் சம்மேளனத்தின் சார்பிலானதுமான விண்ணப்பத்தைக் கவனத்துட்கொள்வதற்கு அது உடன்பட்டுக்கொண்டுள்ளவிடத்து, 69 முதல் 79 வரையிலான விதிகளுக்கிணங்க, புறநீங்கலாக விநநீ க்கு விளையாட்டு வீரரினால் அல்லது இஊபபமு வினால் மேன்முறையீடு செய்யப்படலாம்.

*(4)* பாதிக்கப்பட்ட விளையாட்டு வீரர், இஊபபமு அல்லது சர்வதேசச் சம்மேளனம், ஒரு நோபவி முடிபை எதிர்மாறாக்குவதற்கு உஊபபமு வினால் செய்யப்பட்ட முடிபுக்கெதிராக 69 முதல் 79 வரையிலான விதிகளுக்கிணங்க மேன்முறையீடு செய்யலாம்.

*(5)* ஒரு நோபவி க்கு ஏற்றங்கீகாரம் வழங்குவதற்காக அல்லது நோபவி முடிபைப் பரிசீலனை செய்வதற்காக முறையாகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மீது நியயமான காலத்தினுள் நடவடிக்கையெடுப்பதற்குத் தவறுதல், விண்ணப்பத்தின் அனுமதிமறுப்பாகக் கருதப்படுதல் வேண்டும்.

**சோதனையிடுதலும் புலனாய்வுகளும்**

*19. (1)* சோதனையிடுதலும் புலனாய்வுகளும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நோக்கங்களுக்காக மட்டுமே பொறுப்பேற்கப்படுதல் வேண்டும். அவை, சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தின் ஏற்பாடுகளுக்கும் அந்தச் சர்வதேச நியமத்தைக் குறைநிரப்புகின்ற இஊபபமு வின் குறிப்பிட்ட வரைவாவணங்களுக்கும் இசைந்தொழுக நடாத்தப்படுதல் வேண்டும்.

*(2)* தடை செய்யப்பட்ட பதார்த்தம் அல்லது தடை செய்யப்பட்ட முறை உள்ளமை அல்லது அதன் பயன்பாடுபற்றிக் கண்டிப்பான கோவைத் தடையுடன் விளையாட்டு வீரர் இணங்கியொழுகுகின்றமை அல்லது இணங்கியொழுகாதிருக்கின்றமை பற்றிய பகுப்பாய்வுசார் சான்றைப் பெற்றுக்கொள்வதற்குச் சோதனையிடுதல் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும். இஊபபமு வினால் நடாத்தப்பட்ட சோதனைப் பகிர்வுத் திட்டமிடுதல், சோதனையிடுதல், சோதனையிடுதலுக்குப் பின்னரான செயற்பாடு மற்றும் தொடர்புபட்ட எல்லாச் செயற்பாடுகளும், சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்துக்கு இசைந்தொழுகவிருத்தல் வேண்டும். சோதனையிடுதலுக்கும் பலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தினால் தாபிக்கப்பட்ட கட்டளைக்கற்களுக்கிணங்கப் புரியப்படவேண்டிய முடிகின்ற இடுகைச் சோதனைகள், இயைபிலாச் சோதனைகள் மற்றும் இலக்குச் சோதனைகளின் எண்ணிக்கையை இஊபபமு ஆனது தீர்மானித்தல் வேண்டும் சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தின் எல்லா ஏற்பாடுகளும் அத்தகைய எல்லாச் சோதனையிடுதல்களும் தொடர்பில் தானாகவே ஏற்புடையனவாதல் வேண்டும்.

*(3)* பின்வருவனவற்றுக்கான புலனாய்வுகள் பெறுப்பேற்கப்படுதல் வேண்டும் :

*(அ)* முறையே 23 (5) முதல் (9) வரையான விதிகளுக்கும் 24 ஆம் விதிக்கும் இணங்க, இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகைகள், இயல்பிலிருந்து மாறுபட்ட நடைமுறைக் கண்டறிகைகள் மற்றும் பாதகமான நடைமுறைக் கண்டறிகைகள் என்பன தொடர்பாக, விதிகள் 3 (அ), (ஆ) அல்லது 3 (இ) இன்கீழ் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்று ஏற்பட்டுள்ளதாவென்பதைத் தீர்மானிப்பதற்கென உளவறிவை அல்லது சான்றைச் சேகரித்தல் ; அத்துடன்

*(அ)* 26 ஆம், 27 ஆம் விதிகளுக்கிணங்க, இயல்திற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகளிலிருந்து வேறு சுட்டிக்காட்டுகைகள் தொடர்பாக, 3 (இ) முதல் 3 (ஓ) வரையிலான ஏதேனும் விதியின்கீழ் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்று ஏற்பட்டுள்ளதாவென்பதைத் தீர்மானிப்பதற்கென உளவறிவை அல்லது சான்றைச் சேகரித்தல்.

*(4)* இஊபபமு ஆனது, பயனுள்ள, சாதுரியமான மற்றும் விகிதாசாரச் சோதனைப் பகிர்வுத் திட்டத்தின் அபிவிருத்தியை அறிவிப்பதற்கும், இலக்குச் சோதனையிடுதலைத் திட்டமிடுவதற்கும் அல்லது நிகழ்தகு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றிய புலனாய்வின் அடிப்படையாக அமைவதற்கும், கிடைக்கக்கூடிய எல்லா மூலங்களிலிருந்தும் இஊபபமு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான உளவறிவைப் பெற்றுக்கொள்ளலாம், மதிப்பீடுசெய்யலாம் மற்றும் செய்முறைப்படுத்தலாம்.

*(5)* கோவையின் உறுப்புரை 5.3 இல் தரப்பட்டுள்ள நிகழ்ச்சிச் சோதனையிடுதலுக்கான நியாயாதிக்கஞ்சார் வரையறைகளுக்கமைய, 1 ஆம் விதியின் நோக்கெல்லையினுள் அடங்குகின்ற விளையாட்டு வீரர்கள் எல்லோரினதும்மீது இஊபபமு போட்டியின்போதான மற்றும் போட்டியில் இல்லாதபோதான சோதனையிடுதல் அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*(6)* இஊபபமு ஆனது, தகவின்மைக் காலப்பகுதியை அனுபவிக்கின்ற எந்த விளையாட்டு வீரர்மீது அது சோதனையிடுதல் அதிகாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த எவரேனும் விளையாட்டு வீரர் உட்பட, ஏதேனும் நேரத்திலும் ஏதேனும் இடத்திலும் மாதிரியொன்றை வழங்கும்படி எவரேனும் விளையாட்டு வீரரைத் தேவைப்படுத்தலாம்.

(7) சர்வதேசச் சம்மேளனமொன்று அல்லது பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்பொன்று சோதனையிடுதலின் ஏதேனும் பாகத்தை நேரடியாக அல்லது ஒரு விளையாட்டுகள் ஒழுங்கமைப்பினூடாக இஊபபமு வுக்குக் கையளித்தால் அல்லது ஒப்பந்தஞ்செய்தால், இஊபபமு ஆனது மேலதிக மாதிரிகளைச் சேகரிக்கலாம் அல்லது இஊபபமு வின் செலவில் மேலதிக வகையினவான பகுப்பாய்வுகளைப் புரியும்படி ஆய்வுகூடத்தைப் பணிக்கலாம். மேலதிக மாதிரிகள் சேகரிக்கப்பட்டால் அல்லது மேலதிக வகையினவான பகுப்பாய்வுகள் புரியப்பட்டால், சர்வதேசச் சம்மேளனத்துக்கு அல்லது பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்புக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(8) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கு அமைந்தவராகவுள்ளவொரு விளையாட்டு வீரரின்மீது சோதனையிடுதல் அதிகாரம்கொண்ட வேறோர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு அந்த விளையாட்டு வீரர்மீது சோதனையிடுதலை நடாத்துமிடத்து, இஊபபமு மற்றும் விளையாட்டு வீரரின் விளையாட்டுகள் ஒழுங்கமைப்பு 15 ஆம் உறுப்புரைக்கிணங்க அத்தகைய சோதனையிடுதலை ஏற்றங்கீகரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சோதனையிடுதல் தொடர்பாக எழுகின்ற ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்காக இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளைப் பின்பற்றி இஊபபமு ஆனது விளையாட்டு வீரருக்கெதிராக வழக்குநடவடிக்கைகளையும் கொணரலாம்.

(9) கோவையின் உறுப்புரை 5.3 இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, ஒரு நிகழ்ச்சிக் காலப்பகுதியின்போது நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில் சோதனையிடுதலைத் தொடக்கிவைத்து பணிப்பதற்குத் தனியோர் ஒழுங்கமைப்பு மட்டுமே பொறுப்பாதல் வேண்டும். இலங்கையில் நடைபெறும் சர்வதேச நிகழ்ச்சிகளில், மாதிரிகளைச் சேகரித்தலானது, சர்வதேசச் சம்மேளனத்தினால் அல்லது அத்தகைய நிகழ்ச்சிக்கான ஆளும் குழுவாகவுள்ள வேறேதேனும் சர்வதேச ஒழுங்கமைப்பினால் தொடக்கிவைக்கப்பட்டு பணிக்கப்படுதல் வேண்டும். இலங்கையில் நடைபெறும் தேசிய நிகழ்ச்சியில் மாதிரிகளைச் சேகரித்தலானது இஊபபமு வினால் தொடக்கிவைக்கப்பட்டு பணிக்கப்படுதல் வேண்டும். விடயத்துக்கேற்ப, இஊபபமுவின் அல்லது ஆளும் குழுவின் கோரிக்கையின் பேரில், நிகழ்ச்சிக் காலப்பகுதியின்போது நிகழ்ச்சி நடைபெறும் இடங்களுக்கு வெளியேயான ஏதேனும் சோதனையிடுதல், இஊபபமு வுடன் அல்லது இயைபான ஆளும் குழுவுடன் ஒருங்கிணைக்கப்படுதல் வேண்டும்.

(10) வேறுவகையில் சோதனையிடுதல் அதிகாரத்தைக் கொண்டிருக்கக்கூடிய ஆனால் ஒரு நிகழ்ச்சியில் சோதனையிடுதலைத் தொடக்கிவைத்து பணிப்பதற்குப் பொறுப்பாகவிராத ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பொன்று, நிகழ்ச்சிக் காலப்பகுதியின்போது நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில் விளையாட்டு வீரர்களின் சோதனையிடுதலை நடாத்துவதற்கு விரும்பினால், அத்தகைய சோதனையிடுதலை நடாத்தி ஒருங்கிணைப்பதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு இஊபபமு வுடன் அல்லது நிகழ்ச்சியின் ஆளும் குழுவுடன் முதலில் கலந்துரையாடுதல் வேண்டும். ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு இஊபபமு வின் அல்லது நிகழ்ச்சியின் ஆளும் குழுவின் பதிலுடன் திருப்தியடையாதிருப்பின், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு, சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தில் தரப்பட்டுள்ள நடவடிக்கைமுறைகளுக்கிணங்க, சோதனையிடுதலை நடாத்துவதற்கும் அத்தகைய சோதனையிடுதலை எவ்வாறு ஒருங்கிணைப்பதென்பதைத் தீர்மானிப்பதற்குமான அனுமதியை உஊபபமு விடமிருந்து கோரலாம். உஊபபமு ஆனது, இஊபபமு வுடன் அல்லது நிகழ்ச்சிக்கான ஆளும் குழுவுடன் கலந்தாலோசித்து அவற்றுக்கு அறிவிப்பதற்குமுன்னர் அத்தகைய சோதனையிடுதலுக்கான அங்கீகாரத்தை வழங்குதலாகாது. உஊபபமு வின் முடிபு இறுதியானதாதல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீட்டுக்கு அமைந்ததாதலுமாகாது. சோதனையிடுதலை நடாத்துவதற்கான அதிகாரவளிப்பில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டாலொழிய, அத்தகைய சோதனைகள், போட்டியில் இல்லாதபோதான சோதனைகளாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் சோதனைக்கான பெறுபேறு முகாமை, நிகழ்ச்சியின் ஆளும் குழுவின் விதிகளில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டாலொழிய, அச்சோதனையைத் தொடக்கிவைக்கின்ற ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் பொறுப்பாதல் வேண்டும்.

(11) விளையாட்டுகள் ஒழுங்கமைப்புகளும் தேசிய நிகழ்ச்சிகளுக்கான ஒழுங்குபடுத்தற் குழுக்களும், அத்தகைய நிகழ்ச்சிகளில் சுயாதீனமான அவதானிப்பாளர் நிகழ்ச்சித்திட்டத்தை அதிகாரமளித்து வசதிப்படுத்துதல் வெண்டும்.

(12) நியாயமானமுறையில் சாத்தியமானவிடத்து, சோதனையிடுதலானது, இணைந்த சோதனையிடுதல் முயற்சியின் பயனுறுதன்மையை உச்சப்படுத்துவதற்கும் அவசியமற்ற மீண்டும் மீண்டும் நிகழ்கின்ற சோதனையிடுதலைத் தவிர்ப்பதற்குமென, ஊபபநிமுமு வின் ஊடாக அல்லது உஊபபமு வினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் முறைமையினூடாக ஒருங்கிணைக்கப்படுதல் வேண்டும்.

(13) சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்துக்கான பின்னிணைப்பு 1 இன் எங்குள்ளமை பற்றிய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற அந்த விளையாட்டு வீரர்கள் பற்றிய

பதிவுசெய்யப்பட்ட சோதனையிடுதற் குழுவொன்றை இஊபபமு அடையாளங்காணுதல் வேண்டும். பதிவுசெய்யப்பட்ட சோதனையிடுதற் குழுவிலுள்ள ஒவ்வொரு விளையாட்டு வீரரும், ஒவ்வொரு விடயத்திலும் சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்துக்கான பின்னிணைப்பு 1 றுக்கிணங்கப் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும் :

(அ) அவர் எங்குள்ளாரென்பதைக் காலாண்டு அடிப்படையில் இஊபபமு வுக்கு அறிவித்தல் வேண்டும் :

(ஆ) அத்தகவல் எல்லா நேரங்களிலும் செம்மையாகவும் பூரணமாகவும் இருக்கும்வகையில் அதனை நாளது வரையாக்குதல் வேண்டும்; அத்துடன்

(இ) அவருள்ள அத்தகைய இடங்களில் சோதனையிடுதலுக்காகத் தன்னைக் கிடைக்கக்கூடியவராக்குதல் வேண்டும்.

(14) ஒன்றில் பெயர்மூலம் அல்லது தெளிவாக வரைவிலக்கணங்கூறப்பட்ட, குறிப்பிட்ட கட்டளைக்கற்கள்மூலம் இஊபபமு ஆனது, அதன் பதிவுசெய்யப்பட்ட சோதனையிடுதற் குழுவில் உள்ளடக்கப்பட்ட அவ்விளையாட்டு வீரர்களை அடையாளங்காண்கின்ற நிரலொன்றை ஊபபநிமுமு வின் ஊடாகக் கிடைக்கக்கூடியதாக்குதல் வேண்டும். அத்தகைய விளையாட்டு வீரர்களை அடையாளங்காண்பதற்காகவும் அவர்கள் எங்குள்ளனரென்பதுபற்றிய தகவலைச் சேகரிப்பதற்காகவும் இஊபபமு ஆனது, சர்வதேசச் சம்மேளனங்களுடன் ஒருங்கிணைதல் வேண்டும். விளையாட்டு வீரரொருவர் சர்வதேசப் பதிவுசெய்யப்பட்ட சோதனையிடுதற் குழுவில் அவரது சர்வதேசச் சம்மேளனத்தினால் உள்ளடக்கப்படுமிடத்தும் ஒரு தேசியப் பதிவுசெய்யப்பட்ட சோதனையிடுதற் குழுவில் இஊபபமு வினால் உள்ளடக்கப்படுமிடத்தும், இஊபபமு வும் சர்வதேசச் சம்மேளனமும் அவ்விளையாட்டு வீரர் எங்குள்ளாரென்பதுபற்றிய கோப்பிடுதல்களை எது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது தொடர்பில் அவை, தமக்கிடையில், உடன்படுதல் வேண்டும். எவ்விடயத்திலும் விளையாட்டு வீரரொருவர், அவற்றுள் ஒன்றுக்கு மேற்பட்டவற்றுக்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது. இஊபபமு ஆனது, விளையாட்டு வீரர்களை அதன் பதிவுசெய்யப்பட்ட சோதனையிடுதற் குழுவில் உள்ளடக்கியமைக்கான அதன் பதிவுசெய்யப்பட்ட சோதனையிடுதற் குழுவில் உள்ளடக்கியமைக்கான அதன் கட்டளைக்கற்களைப் பரிசீலனைசெய்து நாளதுவரையாக்குதல் வேண்டும் என்பதுடன், அக்கட்டளைக்கற்களுக்கிணங்கத் தோதானவாறாக, காலத்துக்குக்காலம், அதன் பதிவுசெய்யப்பட்ட சோதனையிடுதற் குழுவின் உறுப்பாண்மையை மீளாய்வுசெய்தலும் வேண்டும். விளையாட்டு வீரர்கள் ஒரு பதிவுசெய்யப்பட்ட சோதனையிடுதற் குழுவில் உள்ளடக்கப்படுவதற்கு முன்னரும் அக்குழுவிலிருந்து அவர்கள் அகற்றப்படும்போதும் அவர்களுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(15) விதி 3(உ) இன் நோக்கங்களுக்காக, சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு விளையாட்டு வீரரொருவர் தவறுகின்றமையானது, கோப்பிடுதல் தவறுதலை அல்லது தவறப்பட்ட சோதனையை வெளிப்படுத்துவதற்காகச் சோதனையிடுதலுக்கம் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தில் எடுத்துக்கூறப்பட்ட நிபந்தனைகள் எதிர்கொள்ளப்படுகின்றவிடத்து, சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு ஒரு கோப்பிடுதல் தவறுதலாக அல்லது தவறப்பட்ட சோதனையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(16) இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பதிவுசெய்யப்பட்ட சோதனையிடுதற் குழுவிலுள்ள விளையாட்டு வீரரொருவர் -

(அ) விளையாட்டு வீரர் தாம் ஓய்வுபெற்றுள்ளாரென இஊபபமு வுக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுத்தாலொழியவும் கொடுக்கும்வரையும்; அல்லது

(ஆ) இஊபபமு வின் பதிவுசெய்யப்பட்ட சோதனையிடுதற் குழுவில் உள்ளடக்கப்படுவதற்கான கட்டளைக்கற்களை அவர் மேற்கொண்டு திருப்திப்படுத்தவில்லையென இஊபபமு அவருக்கு அறிவித்திருந்தாலொழியவும் அறிவிக்கும் வரையும்,

சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தின் பின்னிணைப்பு 1 இன் எங்குள்ளாரென்பது பற்றிய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கான கடப்பாட்டுக்குத் தொடர்ந்தும் அமைந்தவராகவிருத்தல் வேண்டும்.

(17) ஒரு விளையாட்டு வீரர் தொடர்பாக எங்குள்ளார் என்பது பற்றிய தகவல்கள், அவ்விளையாட்டு வீரரைச் சோதனையிடுவதற்கு அதிகாரங்கொண்ட உஊபபமு வுடனும் ஏனைய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான

ஒழுங்கமைப்புகளுடனும் ஊபபநிமுகு வினூடாகப் பகிரப்படுதல் வேண்டும், எல்லா நேரங்களிலும் கண்டிப்பான அந்தரங்கத்தன்மையில் பேணப்படுதல் வேண்டும், கோவையின் உறுப்பரை 5.6 இல் தரப்பட்டுள்ள நோக்கங்களுக்காகப் புறநீங்கலாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும் அத்துடன் இந்நோக்கங்களுக்காக அவை மேற்கொண்டு இயைபானவையாகவிராதபோது அந்தரங்கத்தன்மை மற்றும் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச நியமத்துக்கிணங்க அழித்துவிடப்படுதல் வேண்டும்.

<u>போட்டிக்குத் திரும்பிவரும் ஓய்வுபெற்ற விளையாட்டு வீரர்கள்</u>

*(20) (1)* ஓய்வுபெறுகைபற்றிய அறிவித்தலை இஊபபமு வுக்குக் கொடுத்துள்ள பதிவுசெய்யப்பட்ட சோதனையிடுதற் குழுவிலுள்ள விளையாட்டு வீரரொருவர், சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்துக்கான பின்னிணைப்பு 1 இன் எங்குள்ளாரென்பதுபற்றிய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலுட்பட, மீண்டும் போட்டியிடுவதற்கான தனது உட்கருத்துப் பற்றி எழுத்திலான அறிவித்தலை அவர் இஊபபமு வுக்குக் கொடுக்கும்வரை, சர்வதேச நிகழ்ச்சிகளில் அல்லது தேசிய நிகழ்ச்சிகளில் மீண்டும் போட்டியிடுதலாகாது. உஊபபமு ஆனது, இஊபபமு வினதும் விளையாட்டு வீரரின் சர்வதேசச் சம்மேளனத்தினதும் கலந்தாலோசனையுடன், ஆறுமாத எழுத்திலான அறிவித்தல் பற்றிய விதியைக் கண்டிப்பாக ஏற்புடையதாக்குதல், விளையாட்டு வீரரொருவருக்கு வெளிப்படையாக நியாயமற்றதாகவிருக்குமிடத்து, அவ்விதிக்கான விலக்களிப்பொன்றை வழங்கலாம், இம்முடிபுக்கெதிராக உறுப்புரை 13 இன்கீழ் மேன்முறையீடு செய்யப்படலாம். இவ்விதிக்கு முரணாக ஏதேனும் நிகழ்ச்சியிற் பெற்றுக்கொள்ளப்பட்ட எவையேனும் போட்டிப் பெறுபேறுகள் பெறுபேறுகள் தகைமையற்றவையாக்கப்படுதல் வேண்டும்.

*(2)* விளையாட்டு வீரரொருவர் தகவின்மைக் காலப்பகுதிக்கு உட்பட்டவராக இருக்கையில் விளையாட்டுத்துறையிலிருந்து இளைப்பாறினால், அவ்விளையாட்டு வீரர், சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்துக்கான பின்னிணைப்பு 1 இன் எங்குள்ளாரென்பது பற்றிய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலுட்பட, மீண்டும் போட்டியிடுவதற்கான தனது உட்கருத்துப்பற்றி இஊபபமு வுக்கும் அவரது சர்வதேசச் சம்மேளனத்துக்கும் ஆறுமாத முன்னறிவித்தலை அல்லது அவ்வீரர் இளைப்பாறிய தேதியன்றுள்ளவாறு எஞ்சியுள்ள தகவின்மைக் காலப்பகுதிக்குச் சமமான அறிவித்தலை, அக்காலப்பகுதி ஆறு மாதங்களுக்கு மேற்படாதிருப்பின், மற்றும் அவ்வறிவித்தற் காலப்பகுதிக்காகச் சோதனையிடுதலுக்கு அவர் தம்மைக் கிடைக்கக்கூடியவராக்கும்வரை, அவ்விளையாட்டு வீரர் சர்வதேச நிகழ்ச்சிகளில் அல்லது தேசிய நிகழ்ச்சிகளில் மீண்டும் போட்டியிடுதலாகாது.

<u>மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்வதற்கான நெறிகள்</u>

*21. (1)* விதி 3 (அ) மற்றும் (ஆ) வின் நோக்கங்களுக்காக, மாதிரிகளானவை, உஊபபமு வினால் தராதர அங்கீகாரம்பெற்ற அல்லது வேறுவகையாக அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூடங்களில் மட்டுமே பகுப்பாய்வுசெய்யப்படுதல் வேண்டும். மாதிரிப் பகுப்பாய்வுக்காகப் பயன்படுத்தப்பட்ட உஊபபமு வின் தராதர அங்கீகாரம் பெறப்பட்ட அல்லது உஊபபமு வின் அங்கீகரிக்கப்படட ஆய்வுகூடத்தின் தெரிவு, இஊபபமு வினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். மேலும், விளையாட்டு வீரரின் சம்மதமின்றி ஏதேனும் ஆராய்ச்சி நோக்கத்துக்காக மாதிரியெதுவும் பயன்படுத்தப்படுதலாகாது.

*(2)* கோவையின் உறுப்பரை 4.5 இல் விவரிக்கப்பட்ட கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தைப் பின்பற்றி உஊபபமு வினால் பணிக்கப்படக்கூடியவாறாகத் தடை செய்யப்பட்ட பதார்த்தங்களையும் தடை செய்யப்பட்ட முறைகளையும் வேறு பதார்த்தங்களையும் கண்டுபிடிப்பதற்கு அல்லது மரபணுப் பரிசோதனை அல்லது மரபுவகை புறவுருவமைத்தல் உட்பட, ஒரு விளையாட்டு வீரரின் சிறுநீர், இரத்தம் அல்லது வேறு இழைக்கலன்கள் உள்ள இயைபான அளபுருக்களைப் புறவுருவமைப்பதில் உதவுவதற்கு அல்லது வேறேதேனும் சட்டமுறையான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நோக்கத்துக்காக மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுதல் வேண்டும். எதிர்காலப் பகுப்பாய்வுக்காகவும் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்படலாம்.

*(3)* கோவையின் 6.4 ஆம் உறுப்பரைக்கும் சோதனையிதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தின் 4.7 ஆம் உறுப்பரைக்கும் இசைந்தொழுக மாதிரிகளைப் பகுப்பாய்வுசெய்யும்படி இஊபபமு ஆய்வுகூடங்களைக் கோருதல் வேண்டும்.

*(4)* ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்துக்கு இசைந்தொழுக ஆய்வுகூடங்கள் மாதிரிகளைப் பகுப்பாய்வுசெய்து பெறுபேறுகளை அறிக்கையிடுதல் வேண்டும். பயனுள்ள சோதனையிடுதலை உறுதிப்படுத்துவதற்குக் கோவையின் உறுப்பரை 5.4.1. இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தொழினுட்ப ஆவணம், குறிப்பிட்ட விளையாட்டுகளுக்காகவும் விளையாட்டுக் கற்கைகளுக்கும் தோதான அபாய மதிப்பீட்டு அடிப்படையிலான மாதிரிப் பகுப்பாய்வுச்

செயற்பட்டிகளைத் தாபிக்குமென்பதுடன், ஆய்வுகூடங்கள் பின்வருமாறு தவிர, அந்த செயற்பட்டிகளுக்கிசைந்தொழுக மாதிரிகளைப் பகுப்பாய்வுசெய்தலும் வேண்டும் :-

(அ) தொழினுட்ப ஆவணத்தில் விவரிக்கப்பட்டவை தவிர்ந்த கூடுதல் விரிவான செயற்பட்டிகளைப் பயன்படுத்துவதன்மூலம் ஆய்வுகூடங்கள் அவற்றின் மாதிரிகளைப் பகுப்பாய்வுசெய்ய வேண்டுமென இஊபபமு ஆனது கோரலாம்.

(ஆ) இஊபபமு ஆனது, அதன் சோதனைப் பகிர்வுத் திட்டத்தில் தரப்பட்டுள்ளவாறு, அதன் நாட்டிலுள்ள குறிப்பிட்ட சூழ்நிலைகள் அல்லது சம்பந்தப்பட்ட விளையாட்டுக் காரணமாக, குறைந்தளவு விரிவான பகுப்பாய்வு தோதாகவிருக்கமென உஊபபமு வை அது திருப்திசெய்திருந்தால் மட்டுமே தொழினுட்ப ஆவணத்தில் விவரிக்கப்பட்டவை தவிர்ந்த குறைந்தளவு விரிவான செயற்பட்டிகளைப் பயன்படுத்துவதன்மூலம் ஆய்வுகூடங்கள் அவற்றின் மாதிரிகளைப் பகுப்பாய்வுசெய்ய வேண்டுமென இஊபபமு ஆனது கோரலாம்.

(இ) ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக, ஆய்வுகூடங்கள், அவற்றின் சொந்த முயற்சியிலும் செலவிலும், தொழினுட்ப ஆவணத்தில் விவரிக்கப்பட்ட மாதிரிப் பகுப்பாய்வுச் செயற்பட்டியில் உள்ளடக்கப்படாத அல்லது சோதனையிடுதல் அதிகாரியினால் குறித்துரைக்கப்படும் தடை செய்யப்பட்ட பதார்த்தங்களுக்கான அல்லது தடைசெய்யப்பட்ட முறைகளுக்கான மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யலாம். அத்தகைய ஏதேனும் பகுப்பாய்விலிருந்தான பெறுபேறுகள் அறிக்கையிடப்படுதல் வேண்டுமென்பதுடன், வேறேதேனும் பகுப்பாய்வுப் பெறுபேற்றைப் போன்று அதே செல்லுபடியையும் விளைவையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(5) ஏதேனும் மாதிரியானது (2) ஆம், (3) ஆம் பந்திகளிற்றரப்பட்டுள்ள நோக்கங்களுக்காகப் பின்வருவனவற்றினால் களஞ்சியப்படுத்தப்பட்டு அடுத்துப்பின்னர் மேலதிகப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படலாம் :-

(அ) எந்நேரத்திலும் உஊபபமு வினால்; அல்லது

(ஆ) A மற்றும் B மாதிரிப் பகுப்பாய்வுப் பெறுபேறுகள் அல்லது 'B' மாதிரிப் பகுப்பாய்வு விட்டுக்கொடுக்கப்பட்டுள்ள விடத்து அல்லது புரியப்படாதிருக்குமிடத்து, A மாதிரிப் பெறுபேறு, விதி 3 (1) (அ) (ஆ) மற்றும் (இ) இன்கீழான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்கான துணிவுரைக்கப்பட்ட அடிப்படையாக விளையாட்டு வீரருக்கு இஊபபமு வினால் அறிவிக்கப்படுமுன்னர் எந்நேரத்திலும் இஊபபமு வினால். அத்தகைய மேலதிக மாதிரிகளின் பகுப்பாய்வு, ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்தின் மற்றும் சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தின் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகுதல் வேண்டும்.

<u>பெறுபேறுகள் முகாமையை நடாத்துவதற்கான பொறுப்பு</u>

22. (1) இஊபபமு ஆனது, கோவையின் 7 ஆம் உறுப்புரையிற்றரப்பட்டுள்ள நெறிகளுக்கிணங்க அதன் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நியாயாதிக்கத்தின்கீழுள்ள விளையாட்டு வீரர்களும் வேறு ஆட்களும் தொடர்பிலான பெறுபேறுகள் முகாமைக்கான பொறுப்பை எடுத்தல் வேண்டும்.

(2) பெறுபேறுகள் முகாமைக்கான பொறுப்பைத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக, 19 (7) அம் விதியிற்றரப்பட்டுள்ள சூழ்நிலைகளில் மேலதிக மாதிரிகளைச் சேகரிப்பதற்கு இஊபபமு தெரிவுசெய்யுமிடத்து, அப்போது, அது, மாதிரியின் சேகரிப்பைத் தொடக்கிவைத்துப் பணித்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், இஊபபமு வின் செலவில் மேலதிக வகையினவான பகுப்பாய்வுகளைப் புரிவதற்கு மட்டுமே இஊபபமு ஆனது ஆய்வுகூடத்தைப் பணிக்கின்றவிடத்து, அப்போது, சர்வதேசச் சம்மேளனம் அல்லது பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு, மாதிரியின் சேகரிப்பைத் தொடக்கிவைத்துப் பணித்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இஊபபமு வினால் தொடக்கிவைக்கப்பட்ட சோதனைகள் தொடர்பில் பெறுபேறுகள் முகாமையானது பின்வருமாறு மேற்கொண்டு நடவடிக்கையெடுத்தல் வெண்டும்:

(ஆ) எல்லாப் பகுப்பாய்வுகளிலிருந்துமான பெறுபேறுகள், ஆய்வுகூடத்தின் அதிகாரமளிக்கப்பட்டவொரு பிரதிநிதியினால் கையொப்பமிடப்பட்டவோர் அறிக்கையில் ஒரு குறியீட்டாக்க வடிவத்தில் இஊபபமு வுக்கு

அனுப்பப்படுதல் வேண்டும். எல்லாத் தொடர்பாடல்களும் அந்தரங்கமானவையாகவும் ஊபபநிமுமு வுக்கு இசைந்தொழுகவும் நடாத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையொன்று கிடைக்கப்பெற்றதன்மேல் இஊபபமு ஆனது, பின்வருவனவற்றைத் தீர்மானிப்பதற்குப் பரிசீலனையொன்றை நடாத்துதல் வேண்டும் :-

(i) நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட வாறாக ஏற்புடையற்பாலதான நோபவி வழங்கப்பட்டுள்ளதா அல்லது வழங்கப்படுமா எனவும்; அல்லது

(ii) பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை விளைவித்த சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்திலிருந்தான அல்லது ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்திலிருந்தான ஏதேனும் வெளிப்படையான விலகுகை இருக்கின்றதா எனவும்.

(இ) விதி 22 (3) (ஆ) இன்கீழ் பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையொன்றின் பரிசீலனையானது, ஏற்புடையற்பாலதான நோபவி யை அல்லது அப்பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை விளைவித்த சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்திலிருந்தான அல்லது ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்திலிருந்தான விலகுகையை வெளிக்காட்டினால், முழுச் சோதனையும் எதிர்மாறானதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், விளையாட்டு வீரருக்கும், விளையாட்டு வீரரின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும், விளையாட்டு வீரரின் விளையாட்டுகள் ஒழுங்கமைப்புக்கும், உலக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மைக்கும் அவ்வாறு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

<u>பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகைகள் தொடர்பான பரிசீலனைக்குப் பின்னரான அறிவிப்பு</u>

23. (1) விதி 22 (3) (ஆ) வின்கீழான பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையொன்றின் பரிசீலனையானது, நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக ஏற்புடையற்பாலதான நோபவி ஒன்றை அல்லது உரித்துடைமை ஒன்றை, அல்லது பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை விளைவித்த சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்திலிருந்தான அல்லது ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்திலிருந்தான விலகுகையொன்றை வெளிக்காட்டாதிருந்தால், இஊபபமு ஆனது, 80 ஆம் விதியிற்றரப்பட்டுள்ளவாறான முறையில் விளையாட்டு வீரருக்கும், அதேநேரத்தில் விளையாட்டு வீரரின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும், விளையாட்டு வீரரின் விளையாட்டுகள் ஒழுங்கமைப்புக்கும், உஊபபமுவுக்கும் பின்வருவனபற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும் :-

(அ) பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகை

(ஆ) மீறப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி ;

(இ) "B" மாதிரியின் பகுப்பாய்வைக் கோருவதற்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட காலக்கெடுவுக்குமுன்னர் அத்தகைய கோரிக்கையைச் செய்யத் தவறினால் "B" மாதிரிப் பகுப்பாய்வு விட்டுக்கொடுக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டுமெனக் கோருவதற்கு விளையாட்டு வீரருக்குள்ள உரிமை ;

(ஈ) விளையாட்டு வீரர் அல்லது இஊபபமு ஆனது "B" மாதிரியின் பகுப்பாய்வொன்றைக் கோருவதற்குத் தெரிவுசெய்தால், "B" மாதிரிக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட தேதியும் இடமும்;

(உ) ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்துக்கிணங்க "B" மாதிரித் திறத்தலுக்கும் பகுப்பாய்வுக்கும் வருகை தருவதற்கு விளையாட்டு வீரருக்கு அல்லது விளையாட்டு வீரரின் பிரதிநிதிக்குள்ள வாய்ப்பு ; அத்துடன்

(ஊ) ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறான தகவலை உள்ளடக்குகின்ற "A" மற்றும் "B" மாதிரி ஆய்வுகூட ஆவணப்படுத்துகைப் பொதியின் பிரதிகளைக் கோருவதற்கு விளையாட்டு வீரருக்குள்ள உரிமை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையாகப் பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை முன்கொணராதிருப்பதற்கு இஊபபமு முடிபுசெய்யின், அது, விளையாட்டு வீரருக்கும், விளையாட்டு வீரரின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும், விளையாட்டு வீரரின் விளையாட்டுகள் ஒழுங்கமைப்புக்கும், உஊபபமு வுக்கும் அவ்வாறு அறிவித்தல் வேண்டும்.

(2) விளையாட்டு வீரரினால் அல்லது இஊபபமு வினால் கோரப்படுமிடத்து, "B" மாதிரியை ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்துக்கிணங்கப் பகுப்பாய்வுசெய்வதற்கான ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். "B" மாதிரிப் பகுப்பாய்வுக்கான தேவைப்பாட்டை விட்டுக்கொடுப்பதன்மூலம் "A" மாதிரப் பகுப்பாய்வுசார் பெறுபேறுகளை விளையாட்டு வீரரொருவர் ஏற்றுக்கொள்ளலாம். எனினும், இஊபபமு ஆனது "B" மாதிரிப் பகுப்பாய்வை மேற்கொண்டு நடாத்துவதற்கு விருப்புத் தெரிவிக்கலாம். விளையாட்டு வீரர் அல்லது அவரது பிரதிநிதி, "B" மாதிரியின் பகுப்பாய்வில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். மேலும் இஊபபமு வின் பிரதிநிதியொருவரும், விளையாட்டு வீரரின் விளையாட்டுகள் ஒழுங்கமைப்பின் பிரதிநிதியொருவரும் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(3) "B" மாதிரிப் பகுப்பாய்வானது "A" மாதிரிப் பகுப்பாய்வுக்கு இசைந்தொழுகாதிருப்பின், அப்போது, இஊபபமு ஆனது, விதி 3 (2)(i) மற்றும் (ii) இன்கீழ் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்றாக அவ்விடயத்தை முன்னெடுத்துச்சென்றாலொழிய, முழுச்சோதனையும் எதிர்மாறானதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், விளையாட்டு வீரருக்கும், விளையாட்டு வீரரின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும், விளையாட்டு வீரரின் விளையாட்டுகள் ஒழுங்கமைப்புக்கும், உஊபபமு வுக்கும் அவ்வாறு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(4) "B" மாதிரிப் பகுப்பாய்வானது "A" மாதிரிப் பகுப்பாய்வுக்கு இசைந்தொழுகினால், கண்டறிகைகள், விளையாட்டு வீரருக்கும், விளையாட்டு வீரரின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும், விளையாட்டு வீரரின் விளையாட்டுகள் ஒழுங்கமைப்புக்கும், உஊபபமு வுக்கும் அறிக்கையிடப்படுதல் வேண்டும். இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகையொன்றைப் பெற்றதன்மேல் இஊபபமு ஆனது பின்வருவனபற்றித் தீர்மானிப்பதற்குப் பரிசீலனையொன்றை நடாத்துதல் வேண்டும் :-

(அ) நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்புகளுக்கான சர்வதேச நியமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக ஏற்புடையற்பாலதான நோபவி வழங்கப்பட்டுள்ளதா அல்லது வழங்கப்படுமா எனவும்; அல்லது

(ஆ) பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை விளைவித்த சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்திலிருந்தான அல்லது ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்திலிருந்தான ஏதேனும் வெளிப்படையான விலகுகை இருக்கின்றதா எனவும்.

(5) விதி 23 (4) இன்கீழான இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகையொன்றின் பரிசீலனையானது ஏற்புடையற்பாலதான நோபவி ஒன்றை அல்லது இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகையை விளைவித்த சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்திலிருந்தான அல்லது ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்திலிருந்தான விலகுகையொன்றை வெளிக்காட்டினால், முழுச்சோதனையும் எதிர்மாறானதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் விளையாட்டு வீரருக்கும், விளையாட்டு வீரரின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும், உஊபபமு வுக்கும் அவ்வாறு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(6) அப்பரிசீலனையானது ஏற்புடையற்பாலதான நோபவி ஒன்றை அல்லது இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகையை விளைவித்த சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்திலிருந்தான அல்லது ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்திலிருந்தான விலகுகையொன்றை வெளிக்காட்டாதிருந்தால், இஊபபமு ஆனது தேவைப்பட்ட புலனாய்வை நடாத்துதல் வேண்டும் அல்லது அதனை நடாத்தச்செய்தல் வேண்டும். புலனாய்வு பூர்த்திசெய்யப்பட்டபின்னர், ஒன்றில் இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகை, விதி 23 (1) றுக்கிணங்க, பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையாக முன்கொணரப்படும், அல்லது இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகை பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையாக முன்கொணரப்படமாட்டாது என விளையாட்டு வீரருக்கு, விளையாட்டு வீரரின் சர்வதேசச் சம்மேளனத்துக்கு, விளையாட்டு வீரரின் விளையாட்டுகள் ஒழுங்கமைப்புக்கு மற்றும் உஊபபமு வுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(7) இஊபபமு ஆனது, அதன் புலனாய்வைப் பூர்த்திசெய்து, பின்வரும் சூழ்நிலைகளுள் ஒன்று இருந்தாலொழிய, இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகையை அது பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையாக முன்கொணருமா என்பதுபற்றி முடிபுசெய்யும்வரை இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகை பற்றிய அறிவித்தலை வழங்கமாட்டாது:-

(அ) இஊபபமு ஆனது, அதன் புலனாய்வு நிறைவுசெய்யப்படுமுன்னர் "B" மாதிரி பகுப்பாய்வு செய்யப்படுதல் வேண்டுமெனத் தீர்மானித்தால், இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகையின் விவரணத்தையும் (ஈ) முதல் (ஊ)

வரையிலான பந்திகளில் விவரிக்கப்பட்ட தகவலையும் உள்ளடக்குவதற்கான அத்தகைய அறிவித்தலுடன், விளையாட்டு வீரருக்கு அறிவித்தபின்னர் "B" மாதிரிப் பகுப்பாய்வை அது நடாத்தலாம்.

(ஆ) ஒரு பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்பினால் அல்லது ஒரு விளையாட்டுகள் ஒழுங்கமைப்பினால் வழங்கப்பட்ட நிரலொன்றில் அடையாளங்காணப்பட்ட எவரேனும் விளையாட்டு வீரர், முடிவுறாதுள்ள இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகையைக் கொண்டுள்ளாராவென்பதை வெளிக்காட்டும்படி அப்பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்பினால் அதன் சர்வதேச நிகழ்ச்சிகளுள் ஒன்றின்முன்னர் உடனடியாக அல்லது ஒரு சர்வதேச நிகழ்ச்சியொன்றுக்காக ஆட்டக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான உடனடிக் காலக்கெடுவை எதிர்கொள்வதற்குப் பொறுப்பாகவுள்ள அவ்விளையாட்டுகள் ஒழுங்கமைப்பினால் இஊபபமு விடம் கேட்கப்படின், இஊபபமு ஆனது, விளையாட்டு வீரருக்கு இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகைபற்றிய அறிவித்தலை முதலில் வழங்கியபின்னர் அப்பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்புக்கு அல்லது அவ்விளையாட்டுகள் ஒழுங்கமைப்புக்கு அவ்வாறு மதியுரையளித்தல் வேண்டும்.

<u>இயல்பிலிருந்து மாறுபட்ட நடைமுறைக் கண்டறிகைகளினதும் பாதகமான நடைமுறைக் கண்டறிகைகளினதும் பரிசீலனை</u>

24. இயல்பிலிருந்து மாறுபட்ட நடைமுறைக் கண்டறிகைகளினதும் பாதகமான நடைமுறைக் கண்டறிகைகளினதும் பரிசீலனை, சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்திலும் ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்திலும் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக இடம்பெறுதல் வேண்டும். ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்று ஏற்பட்டுள்ளதென இஊபபமு ஆனது திருப்திப்படும் அத்தகைய நேரத்தில், துணிவுரைக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றியும் அத்துணிவுரையின் அடிப்படை பற்றியும் விளையாட்டு வீரருக்கும், அதேநேரத்தில் விளையாட்டு வீரரின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும், விளையாட்டு வீரரின் விளையாட்டுகள் ஒழுங்கமைப்புக்கும், உஊபபமு வுக்கும் உடனடியாக அது அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

<u>எங்குள்ளாரென்பது பற்றிய தவறுதல்களின் பரிசீலனை</u>

(25) சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்திற்கான பின்னிணைப்பு 1 றுக்கிணங்க, இஊபபமு விடம் தாம் எங்குள்ளனரென்பதுபற்றிய தகவலைக் கோப்பிடும் விளையாட்டு வீரர்கள் தொடர்பில் சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு இயல்திறக் கோப்பிடுதல் தவறுதல்களையும் தவறிய சோதனைகளையும் இஊபபமு ஆனது பரிசீலனைசெய்தல் வேண்டும். விதி 4 (உ) இன்கீழ் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்று ஏற்பட்டுள்ளதென இஊபபமு ஆனது திருப்திப்படும் அத்தகைய நேரத்தில், விதி 4 (உ) இன் மீறுகைபற்றி அது துணிவுரைக்கின்றதென்றும் அத்துணிவுரையின் அடிப்படை பற்றியும் விளையாட்டு வீரருக்கும், அதேநேரத்தில் விளையாட்டு வீரரின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும், விளையாட்டு வீரரின் விளையாட்டுகள் ஒழுங்கமைப்புக்கும், உஊபபமு வுக்கும் உடனடியாக அது அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

<u>22 (3) முதல் 25 வரையிலான விதிகளினால் மேவப்படாத ஏனைய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் மீறுகைகளைப் பரிசீலனை செய்தல்</u>

26. இருபத்திரெண்டு (3) முதல் 25 வரையிலான விதிகளினால் மேவப்படாத நிகழ்தகு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மீறுகையொன்று பற்றிய ஏதேனும் பின்தொடர் புலனாய்வை இஊபபமு நடாத்துதல் வேண்டும். ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியொன்றின் மீறுகை ஏற்பட்டுள்ளதென இஊபபமு திருப்திப்படும் அத்தகைய நேரத்தில், துணிவுரைக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை பற்றியும் அத்துணிவுரையின் அடிப்படைபற்றியும் விளையாட்டு வீரருக்கும் வேறு ஆளுக்கும், அதே நேரத்தில் விளையாட்டு வீரரின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும், விளையாட்டு வீரரின் விளையாட்டுகள் ஒழுங்கமைப்புக்கும், உஊபபமு வுக்கும் உடனடியாக அது அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

<u>ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் முன்னைய மீறுகைகளை அடையாளங்காணுதல்</u>

27. மேலே ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக துணிவுரைக்கப்படட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மீறுகை பற்றிய அறிவித்தலை ஒரு விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்குக் கொடுக்க முன்னர், இஊபபமு ஆனது, அதனை ஊபபநிமுமு வுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் ஏதேனும் முன்னைய மீறுகை உள்ளதாவென்பதைத் தீர்மானிப்பதற்கு உஊபபமு வுடனும் ஏனைய இயைபான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுடனும் தொடர்புகொள்ளலும் வேண்டும்.

<u>பணிப்பாணை முறையான தற்காலிக இடைநிறுத்துகை</u>

28. குறித்துரைக்கப்பட்ட பதார்த்ததொன்றாகவிராத தடை செய்யப்பட்ட பதார்த்தமொன்றுக்காக, அல்லது ஒரு தடை செய்யப்பட்ட முறைக்காக, "A" மாதிரியொன்றின் பகுப்பாய்வு, பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை விளைவித்திருப்பின், மற்றும் 22 (3) (ஆ) என்னும் விதிக்கிணங்கவுள்ள பரிசீலனையொன்று ஏற்புடையற்பாலதான நோபவி ஒன்றை அல்லது பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை விளைவித்த சோதனையிடுதலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்திலிருந்தான அல்லது ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்திலிருந்தான விலகுகையை வெளிக்காட்டாதிருப்பின், 22 (3) ஆம், (1) முதல் (4) வரையிலான அல்லது 24 ஆம் விதிகளில் குறித்துரைக்கப்பட்ட அறிவிப்பின் மேல் அல்லது அதற்கு உடனடியாகப் பின்னர் தற்காலிக இடைநிறுத்துகையொன்று விதிக்கப்படுதல் வேண்டும்.

<u>விருப்புத்தெரிவுமுறையிலான தற்காலிக இடைநிறுத்துகை</u>

29. குறித்துரைக்கப்பட்டவொரு பதார்த்தத்துக்கான பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையின் விடயத்தில், அல்லது 28 ஆம் விதியினால் மேவப்படாத ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் வேறெவையேனும் மீறுகைகளின் விடயத்தில், இஊபபமு ஆனது, 22 (3) முதல் 26 வரையிலான விதிகளில் குறித்துரைக்கப்பட்ட பரிசீலனையின் மற்றும் அறிவிப்பின் பின்னரும் 34 முதல் 39 வரையிலான விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறான இறுதிக் கேட்புக்குமுன்னரும் எந்நேரத்திலும், எந்த விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு எதிராக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி துணிவுரைக்கப்படுகின்றதோ அந்த விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் மீது தற்காலிக இடைநிறுத்துகையொன்றை விதிக்கலாம்.

30. (1) விதி 28 அல்லது விதி 29 என்பவற்றைப் பின்பற்றித் தற்காலிக இடைநிறுத்துகையொன்று விதிக்கப்படுமிடத்து, விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு, ஒன்றில் -

(அ) தற்காலிக இடைநிறுத்துகை விதிக்கப்பட்ட பின்னர் ஒன்றில் முன்னரோ அல்லது உரிய நேரத்திலான அடிப்படையிலோ தற்காலிகக் கேட்புக்கான சந்தர்ப்பமொன்று அளிக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) தற்காலிக இடைநிறுத்துகை விதிக்கப்பட்டபின்னர் உரிய நேரத்திலான அடிப்படையின்மீது 34 முதல் 39 வரையிலான விதிகளுக்கிணங்கத் துரிதப்படுத்தப்பட்ட இறுதிக் கேட்புக்கான சந்தர்ப்பமொன்று அளிக்கப்படுதல் வேண்டும்.

மேலேயுள்ளவற்றுடன் சேர்த்து, விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், (விதி 32 இல் தரப்பட்டுள்ளவாறுதவிர), 69 (5) முதல் 75 வரையிலான விதிகளுக்கிணங்கத் தற்காலிக இடைநிறுத்துகைக்கெதிராக மேன்முறையீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருப்பார்.

(2) மீறுகையானது மாசுபடுத்தப்பட்ட தயாரிப்பொன்றை உட்படுத்தியிருக்கக்கூடுமென விளையாட்டு வீரர் கேட்புக் குழாத்துக்கு எடுத்துக்காட்டினால், தற்காலிக இடைநிறுத்துகையை அகற்றாதிருப்பதற்குக் கேட்புக் குழாத்தின் முடிபொன்றுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படற்பாலதாதலாகாது.

(3) விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் பின்வருவனவற்றை நிலைநாட்டினாலொழிய, தற்காலிக இடைநிறுத்துகை விதிக்கப்படுதல் வேண்டும் அல்லது அகற்றப்படுதலாகாது :-

(அ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றிய துணிவுரையை நிலைநிறுத்துவதற்கு நியாயமான வாய்ப்பெதுவும் இல்லையென்றும் ;

(ஆ) விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், துணிவுரைக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்காகத் தாம் தவறெதனையும் அல்லது அசட்டையெதனையும் கொண்டிருப்பதில்லையெனத் திடமான, விவாதிக்கப்படத்தக்க தம்பக்க வழக்கொன்றைக் கொண்டுள்ளாரென்றும்; அல்லது

(இ) 34 முதல் 39 வரையிலான விதிகளுக்கிணங்க இறுதிக் கேட்பொன்றுக்கு முன்னர் தற்காலிக இடைநிறுத்துகையொன்றை விதிப்பதனை எல்லாச் சூழ்நிலைகளிலும் தெளிவாக நியாயமற்றனவாக்கும் வேறு சில நிகழ்வுகள் உள்ளனவென்றும்.

(4) "A" மாதிரிப் பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையின் அடிப்படையில் தற்காலிக இடைநிறுத்துகை ஒன்று விதிக்கப்பட்டு "B" மாதிரியின் அடுத்துப் பின்னரான பகுப்பாய்வு, "A" மாதிரிப் பகுப்பாய்வை உறுதிப்படுத்தாதிருப்பின், அப்போது,

விளையாட்டு வீரர், 4 ஆம் விதியின் மீறுகை காரணமாக ஏதேனும் மேலதிகத் தற்காலிக இடைநிறுத்துகைக்கு அமைந்தவராதலாகாது. 4 ஆம் விதியின் மீறுகையொன்றின் அடிப்படையில் விளையாட்டு வீரர் அல்லது விளையாட்டு வீரரின் ஆட்டக்குழு போட்டியொன்றிலிருந்து அகற்றப்பட்டு அடுத்துப்பின்னரான “B” மாதிரிப் பகுப்பாய்வு, “A” மாதிரிக் கண்டறிகையை உறுதிப்படுத்தாத சூழ்நிலைகளில், அப்போது போட்டியை வேறுவகையில் பாதிக்காமல் விளையாட்டு வீரரை அல்லது ஆட்டக்குழுவை மீள உட்புகுத்துவது இன்னமும் இயன்றதாகவிருப்பின், அவ்விளையாட்டு வீரர் அல்லது ஆட்டக்குழு போட்டியில் தொடர்ந்து பங்குபற்றலாம். அத்துடன் சேர்த்து, அவ்விளையாட்டு வீரர் அல்லது ஆட்டக்குழு அதன்பின்னர் அதே நிகழ்ச்சியில் வேறு போட்டிகளில் பங்குபற்றலாம்.

(5) விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் ஒருவருக்கு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை பற்றி அறிவிக்கப்பட்டு ஆனால் தற்காலிக இடைநிறுத்துகையொன்று அவர்மீது விதிக்கப்பட்டிராத எல்லா விடயங்களிலும், அவ்விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு, அவ்விடயம் தீர்மானிக்கப்படும் வரை தன்னிச்சையாகத் தற்காலிக இடைநிறுத்துகையொன்றை ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு முனையப்படுதல் வேண்டும்.

<u>ஒரு கேட்பின்றித் தீர்மானித்தல்</u>

31. (1) எந்த விளையாட்டு வீரருக்கெதிராக அல்லது வேறு ஆளுக்கெதிராக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மீறுகை துணிவுரைக்கப்படுகின்றதோ அந்த விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் ஒருவர் எந்நேரத்திலும் அம்மீறுகையை ஒப்புக்கொள்ளலாம், கேட்பொன்றை விட்டுக்கொடுக்கலாம் மற்றும் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளினால் பணிப்பாணையிடப்படுகின்றவிடத்து அல்லது இஊபபமு வின் முடிபினால் முனையப்பட்டுள்ள இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் கீழ் விளைவுகள் பற்றிய ஏதேனும் தற்றுணிபு உள்ளவிடத்து விளைவுகளை ஏற்றுக்கொள்ளலாம்.

(2) மாற்றாக, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை எந்த விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு எதிராகத் துணிவுரைக்கப்படுகின்றதோ அந்த விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், அம்மீறுகையைத் துணிவுரைக்கின்ற முடிபின்மூலம் அனுப்பப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலக்கெடுவினுள் அத்துணிவுரையைப் பிணக்கிலிடுவதற்குத் தவறினால், அப்போது அவர் அம்மீறுகையை ஒப்புக்கொண்டுள்ளாரெனவும், கேட்பொன்றை விட்டுக்கொடுத்துள்ளாரெனவும், இஊபபமு வினால் முனையப்பட்டுள்ள இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளினால் பணிப்பாணையிடப்படுகின்ற விளைவுகளை ஏற்றுக்கொண்டுள்ளாரெனவும் கருதப்படுதல் வேண்டும்.

(3) விதி 31 (1) அல்லது விதி 31 (2) ஏற்புடையதாகும் விடயங்களில், ஒரு கேட்புக் குழாத்தின்முன்னரான கேட்பொன்று தேவைப்படுதலாகாது. பதிலாக இஊபபமு ஆனது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை புரியப்பட்டமையையும் அதன்காரணமாக விதிக்கப்பட்ட விளைவுகளையும் உறுதிப்படுத்தியும், ஏற்புடையற்பாலதாகுமிடத்து, அதிகபட்ச இயல்திறத் தகவின்மைக் காலப்பகுதி ஏன் விதிக்கப்படவில்லை என்பதற்கான நியாயப்படுத்துகையுட்பட, விதிக்கப்பட்ட ஏதேனும் தகவின்மைக் காலப்பகுதிக்கான முழுக்காரணங்களையும் எடுத்துக்கூறியும், எழுத்திலான முடிபொன்றை உடனடியாக வழங்குதல் வேண்டும். இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை, அம்முடிபின் பிரதிகளை 75 ஆம் விதியின்கீழ் மேன்முறையீடு செய்வதற்கான உரிமையுடனான வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கு அனுப்புதல் வேண்டுமென்பதுடன், 82(2) ஆம் விதிக்கிணங்க அம்முடிபைப் பகிரங்கமாக வெளிவிடுதலும் வேண்டும்.

<u>பெறுபேறுகள் முகாமை முடிபுகள்பற்றிய அறிவிப்பு</u>

32. இஊபபமு ஆனது, ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை புரியப்பட்டமையைத் துணிவுரைத்துள்ள, ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை மீளப்பெற்றுள்ள, ஒரு தற்காலிக இடைநிறுத்துகையை விதித்துள்ள, அல்லது ஒரு கேட்பின்றி விளைவுகளை விதித்தல் பற்றி ஒரு விளையாட்டு வீரருடன் அல்லது வேறு ஆளுடன் உடன்பட்டுக்கொண்டுள்ள எல்லா விடயங்களிலும், இஊபபமு ஆனது, 75 ஆம் விதியின்கீழ் மேன்முறையீடு செய்வதற்கான உரிமையுடனான வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கு 81 (1) ஆம் விதிக்கிணங்க அதுபற்றிய அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும்.

<u>விளையாட்டிலிருந்து இளைப்பாறுதல்</u>

33. இஊபபமு ஆனது பெறுபேறுகள் முகாமை நடைமுறையை நடாத்துகையில் விளையாட்டு வீரரொருவர் அல்லது வேறு ஆள் இளைப்பாறினால், இஊபபமு அதன் பெறுபேறுகள் முகாமை நடைமுறையைப் பூர்த்தி செய்வதற்கான நியாயாதிக்கத்தைத்

தொடர்ந்து வைத்திருக்கின்றது. விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், ஏதேனும் பெறுபேறுகள் முகாமை நடைமுறை ஆரம்பிக்க முன்னர் இளைப்பாறினால் மற்றும் இஊபபமு ஆனது அவ்விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்த நேரத்தில் அந்த விளையாட்டு வீரரின் மீது அல்லது வேறு ஆளின் மீது பெறுபேறுகள் முகாமை அதிகாரத்தைக் கொண்டதாக இருந்திருக்குமாயின், இஊபபமு ஆனது அந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை தொடர்பில் பெறுபேறுகள் முகாமையை நடாத்துவதற்கு அதிகாரம் கொண்டுள்ளது.

**இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பெறுபேறு முகாமைக்குப் பின்னரான கேட்புக்கள்**

34. (1) இஊபபமு நிறைவேற்றுநர், ஒரு தவிசாளரையும் இரு துணைத் தவிசாளர்களையும் கொண்ட ஊக்கு பதார்த்தக் கேட்புக் குழாமொன்றை நியமித்தல் வேண்டும்; அவர்களுள் ஒவ்வொருவரும் ஐந்தாண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்ட சட்டத்தொழில் புரியுநர்களாகவிருத்தல் வேண்டும்; அத்துடன் மூன்று மேலதிக உறுப்பினர்கள்; அவர்களுள் ஒவ்வொருவரும் ஒரு விளையாட்டுக்கள் நிருவாகியாக அல்லது விளையாட்டு வீரராகவிருத்தல் வேண்டும், அல்லது முன்னர் இருந்திருத்தல் வேண்டும் ; அவர்களுள் எல்லோரும் வழக்குகளை நியாயமாகவும் பாரபட்சமின்றியும் கேட்பதற்கான நிலையில் அவர்கள் உள்ளனர் என்ற அடிப்படையில் நியமிக்கப்படுதல் வேண்டும். குழாத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் நான்காண்டு காலத்துக்குச் சேவையாற்றுதல் வேண்டும். குழாத்தின் உறுப்பினரொருவர் இறந்தால் அல்லது பதவி விலகினால், விளைகின்ற வெற்றிடத்தை நிரப்பவதற்கு இஊபபமு நிறைவேற்றுநர் வேறோராளை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், அவர் எந்த உறுப்பினரை மாற்றீடு செய்கின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் எஞ்சியுள்ள காலத்துக்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்றைத் துணிவுரைக்கின்ற அறிவித்தலை விளையாட்டு வீரரொருவருக்கு அல்லது வேறு ஆளுக்கு இஊபபமு அனுப்பும் போதும், அவ்விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் விதி 31 (1) அல்லது விதி 31 (2) க்கிணங்கக் கேட்பொன்றை விட்டுக்கொடுக்காத போதும், அப்போது, வழக்கானது கேட்புக்காகவும் தீர்ப்புக்காகவும் ஊக்கு பதார்த்தக் கேட்புக் குழாத்துக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய ஆற்றுப்படுத்துகையின் மேல் ஊக்கு பதார்த்தக் கேட்புக் குழாத்தின் தவிசாளர், அக்கருமத்தைக் கேட்டுத் தீர்ப்பளிப்பதற்குக் குழாத்தின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களை நியமித்தல் வேண்டும். நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் அவ்வழக்கில் முற்கூட்டிய சம்பந்தமெதனையும் கொண்டிருத்தலாகாது. ஒவ்வோர் உறுப்பினரும், நியமிக்கப்பட்டதன் மேல், திறத்தவர்களுள் எவரேனும் தொடர்பில் பாரபட்சமின்மையைப் பாதிக்கக்கூடிய எவையேனும் சூழ்நிலைகளைத் தவிசாளருக்கு வெளிவிடுதல் வேண்டும்.

**ஒரு நியாயமான கேட்புக்கான நெறிகள்**

35. (1) கேட்புக்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு நியாயமானவொரு காலத்தினுள் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கமைந்த ஏதேனும் நிகழ்ச்சி சம்பந்தமாக நடைபெற்ற கேட்புக்கள், கேட்புக் குழாத்தினால் அனுமதிக்கப்படுமிடத்து துரிதப்படுத்தப்பட்ட நடைமுறையொன்றின்மூலம் நடாத்தப்படலாம்.

(2) ஊக்கு பதார்த்தக் கேட்புக் குழாம், கேட்பில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையைத் தீர்மானித்தல் வேண்டும்.

(3) உஊபபமு வும் விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் விளையாட்டுகள் ஒழுங்கமைப்பும் அவதானிப்பாளர் களாகக் கேட்புக்கு வருகை தரலாம். எப்பட்சத்திலும், இஊபபமு ஆனது, முடிவுறாதுள்ள வழக்குகளின் நிலைமை பற்றியும் ஒவ்வொரு கேட்பினதும் பெறுபேறு பற்றியும் உஊபபமு வை முழுமையாக அறிவிக்கப்பட்டதாக வைத்திருத்தல் வேண்டும்.

(4) ஊக்கு பதார்த்தக் கேட்புக் குழாம், எல்லா நேரங்களிலும் எல்லாத் திறத்தவர்கள் தொடர்பிலும் நியாயமான மற்றும் பாரபட்சமற்ற முறையில் செயலாற்றுதல் வேண்டும்.

**ஊக்கு பதார்த்தக் கேட்புக் குழாத்தின் முடிபுகள்**

36. கேட்பின் முடிவில் அல்லது அதன்பின்னர் உரிய நேரத்திலான அடிப்படையின்மீது, ஊக்கு பதார்த்தக் கேட்புக் குழுவானது, ஏற்புடையற்பாலவிடத்து, உச்சளவிலான இயல்திற விளைவுகள் ஏன் விதிக்கப்படவில்லையென்பதற்கான நியாயப்படுத்துகை உட்பட, முடிபுக்கும் மற்றும் விதிக்கப்பட்ட ஏதேனும் தகவின்மைக்குமான காரணங்களை உட்படுத்துகின்ற ஒன்றில் ஏகமனதான அல்லது பெரும்பான்மைமூலமான எழுத்திலான, தேதியிடப்பட்ட மற்றும் கையொப்பமிடப்பட்ட முடிபொன்றை வழங்குதல் வேண்டும்.

37. முடிபானது, விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு, அவரது விளையாட்டுகள் ஒழுங்கமைப்புகளுக்கு மற்றும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கு, 75 ஆம் விதியின்கீழ் மேன்முறையீடு செய்வதற்கான உரிமையுடன் வழங்கப்படுதல் வேண்டும்.

38. அறுபத்தொன்பது முதல் 79 வரையிலான விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அம்முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படலாம். முடிபுக்கெதிராக மேன்முறையீடெதுவும் கொணரப்படாவிடின், அப்போது, முடிபானது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியொன்றின் மீறுகை புரியப்பட்டமையாகவிருப்பின், விதி 82 (2) இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக முடிபானது பகிரங்கமான முறையில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்:
ஆயின், முடிபானது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையெதுவும் புரியப்படவில்லையென்பதாகவிருப்பின், அப்போது அம்முடிபு, அம்முடிபின் விடயமாகவுள்ள விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் சம்மதத்துடன் மட்டுமே பகிரங்கமானமுறையில் வெளிவிடப்படுதல் வேண்டும். இஊபபமு ஆனது அத்தகைய சம்மதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நியாயமான முயற்சிகளைப் பயன்படுத்துதல் வேண்டுமென்பதுடன், சம்மதம் பெற்றுக்கொள்ளப்படின், அம்முடிபை முழுமையாக அல்லது விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் அங்கீகரிக்கக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கமைக்கப்பட்ட வடிவத்தில் பகிரங்கமான முறையில் வெளிவிடுதலும் வேண்டும். 84 ஆம் விதியில் அடங்கியுள்ள நெறிகள், பராயமடையாத ஒருவர் சம்பந்தப்பட்டுள்ள விடயங்களில் ஏற்புடையனவாக்கப்படுதல் வேண்டும்.

<u>விளையாட்டுத்துறை நடுத்தீர்ப்பு நீதிமன்றத்தின் (விநநீ) முன்னரான தனிக்கேட்பு</u>

39. சர்வதேச மட்ட விளையாட்டு வீரர்களுக்கெதிராக அல்லது தேசிய மட்ட விளையாட்டு வீரர்களுக்கெதிராக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகளைத் துணிவுரைக்கின்ற வழக்குகள், முன்கூட்டிய கேட்புக்கான தேவைப்பாடெதுவுமின்றி, விளையாட்டு வீரரின், இஊபபமு வின், உஊபபமு வின், மற்றும் விநநீக்கு முதலாவது தடவையிலான கேட்புக்கெதிராக மேன்முறையீடு செய்வதற்கான உரிமையொன்றைக் கொண்டிருந்திருக்கும் வேறேதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் சம்மதத்துடன் விநநீ இல் நேரடியாகக் கேட்கப்படலாம்.

<u>தனிப்பட்ட பெறுபேறுகளின் தன்னியக்கமான தகைமையீனம்</u>

40. போட்டியின்போது பரீட்சிப்பொன்று சம்பந்தமாகத் தனிப்பட்ட விளையாட்டுக்களில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்று, எவையேனும் பதக்கங்கள், புள்ளிகள் மற்றும் பரிசில்களின் இழப்பித்தலுட்பட, விளைகின்ற எல்லா விளைவுகளுடனும் அப்போட்டியிற் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறின் தகைமையீனத்துக்குத் தன்னியக்கமாக இட்டுச்செல்கின்றது.

<u>ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை எந்த நிகழ்ச்சியில் இடம்பெறுகின்றதோ அந்த நிகழ்ச்சியிலான பெறுபேறின் தகைமையீனம்</u>

41. ஒரு நிகழ்ச்சியின்போது அல்லது அது சம்பந்தமாக இடம்பெறுகின்ற ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை, அந்நிகழ்ச்சியின் ஆளும் குழுவின் முடிபின்மேல் 43 ஆம் விதியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, எல்லாப் பதக்கங்கள், புள்ளிகள் மற்றும் பரிசில்களின் இழப்பித்தலுட்பட, எல்லா விளைவுகளுடனும் அந்நிகழ்ச்சியில் விளையாட்டு வீரரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லாத் தனிப்பட்ட பெறுபேறுகளின் தகைமையீனத்துக்கு இட்டுச்செல்லலாம்.

42. நிகழ்ச்சியொன்றில் வேறு பெறுபேறுகளைத் தகைமையற்றனவாக்குவதா என்பதைக் கவனத்துட்கொள்வதில் உள்ளடக்கப்பட வேண்டிய காரணிகள், விளையாட்டு வீரரின் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியினது மீறுகையின் பாரதூரமான தன்மையையும், ஏனைய போட்டிகளில் விளையாட்டு வீரர் எதிர்மாறாகப் பரீட்சிக்கப்பட்டாராவென்பதையும் உள்ளடக்கலாம்.

43. மீறுகைக்கான தவறெதனையும் அல்லது அசட்டையெதனையும் தாம் கொண்டிருக்கவில்லையென விளையாட்டு வீரர் நிலைநாட்டினால், ஏனைய போட்டிகளில் விளையாட்டு வீரரின் தனிப்பட்ட பெறுபேறுகள், எந்தப் போட்டியில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை இடம்பெற்றதோ அந்தப் போட்டி தவிர்ந்த போட்டிகளில் விளையாட்டு வீரரின் பெறுபேறுகள், அவ்விளையாட்டு வீரரின் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையினால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடியனவாக இருந்திருந்தாலொழிய, தகைமையற்றனவாக்கப்படுதலாகாது.

**ஒரு தடை செய்யப்பட்ட பதார்த்தம் அல்லது தடை செய்யப்பட்ட முறை உள்ளமைக்கான, பயன்படுத்தப்படுகின்றமைக்கான அல்லது அதன் எத்தனிக்கப்பட்ட பயன்பாட்டுக்கான, அல்லது உடைமைக்கான தகவின்மை**

44. நாற்பத்தாறு, 47 மற்றும் 48 முதல் 52 வரையான விதிகளைப் பின்பற்றி நிகழ்தகு குறைப்பு அல்லது இடைநிறுத்துகைக்கமைய, விதி 4 (அ) மற்றும் (ஆ), விதி 3 (1) (ஈ) அல்லது விதி 4 (எ) (i) மற்றும் (ii) என்பவற்றின் மீறுகைக்கான தகவின்மைக் காலப்பகுதி பின்வருமாறாதல் வேண்டும் :-

(அ) (i) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை வேண்டுமென்று புரியப்படவில்லையென விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் நிலைநாட்டினாலொழிய, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான விதியின் மீறுகை குறித்துரைக்கப்பட்டவொரு பதார்த்தத்தை உட்படுத்தாதவிடத்து.

(ii) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை குறித்துரைக்கப்பட்ட பதார்த்தமொன்றை உட்படுத்துமிடத்தும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை வேண்டுமென்று புரியப்படவில்லையென இஊபபமு நிலைநாட்டக்கூடியவிடத்தும்,

தகவின்மைக் காலப்பகுதி நான்காண்டுகளாதல் வேண்டும்.

(அ) விதி 44 (அ) மற்றும் (ஆ) என்பவற்றின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாதவிடத்து, தகவின்மைக் காலப்பகுதி இரண்டாண்டுகளாதல் வேண்டும்.

(இ) 44 ஆம் மற்றும் 45 ஆம் விதிகளின் நோக்கங்களுக்காக "வேண்டுமென்று" என்ற பதம், விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்றை அமைத்துருவாக்கியதென அவர் அறிந்திருந்த நடத்தையில் ஈடுபட்டார் அல்லது அந்நடத்தை ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை அமைத்துருவாக்கலாம் அல்லது விளைவிக்கலாமென்பதற்கான குறிப்பிடத்தக்க அபாயம் உண்டென்பதை அறிந்திருந்து அவ்வபாயத்தை வெளிப்படையாகப் புறக்கணித்தாரென்பதைத் தேவைப்படுத்துகின்றது. போட்டியின்போது மட்டும் தடைசெய்யப்பட்டவொரு பதார்த்தத்துக்கான பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையிலிருந்து விளைகின்ற ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை, அப்பதார்த்தம் ஒரு குறித்துரைக்கப்பட்ட பதார்த்தமாகவிருந்து தடை செய்யப்பட்ட பதார்த்தம் போட்டியில் இல்லாதபோது பயன்படுத்தப்பட்டதென விளையாட்டு வீரர் நிலைநாட்டுவதற்கு முடியுமானவராகவிருப்பின், "வேண்டுமென்று" செய்யப்படவில்லை என மறுதலிக்கக்கூடிய வகையில் ஊகிக்கப்படுதல் வேண்டும். போட்டியின்போது மட்டுமே தடை செய்யப்பட்டவொரு பதார்த்தத்துக்கான பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையிலிருந்து விளைகின்ற ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்று, அப்பதார்த்தம் குறித்துரைக்கப்பட்டவொரு பதார்த்தமாக இல்லாதிருந்து தடை செய்யப்பட்ட பதார்த்தம் போட்டியில் இல்லாதபோது சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்பட்டதென அவ்விளையாட்டு வீரர் நிலைநாட்ட முடியுமானவராக இருந்தால் "வேண்டுமென்றதாக" க் கருதப்படுதலாகாது.

**ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் ஏனைய மீறுகைகளுக்கான தகவின்மை**

45. விதி 44 இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகத்தவிர, விதி 47 அல்லது 48 முதல் 52 வரையிலான விதிகள் ஏற்புடையனவாகவிருந்தாலொழிய, தகவின்மைக் காலப்பகுதியானது பின்வருமாறாதல் வேண்டும் :-

(அ) விதி 4 (ஈ) அல்லது விதி 4 (ஊ) என்பவற்றின் மீறுகைகளுக்காக, தகவின்மைக் காலப்பகுதி, விளையாட்டு வீரர் மாதிரிச் சேகரிப்புக்கு உட்படுவதற்குத் தவறுகின்ற விடயத்தில், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை புரியப்பட்டமை, விதி 44 (இ) இல் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறு வேண்டுமென்றதாக இருக்கவில்லையென அவ்விளையாட்டு வீரர் நிலைநாட்ட முடியுமானவராக இருந்தாலொழிய, நான்காண்டுகளாதல் வேண்டும்; இவ்விடயத்தில் தகவின்மைக் காலப்பகுதி இரண்டாண்டுகளாதல் வேண்டும்.

(ஆ) விதி 4 (உ) மீறுகைகளுக்காகத் தகவின்மைக் காலப்பகுதி, விளையாட்டு வீரரின் தவறின் அளவைப் பொறுத்து, குறைந்தபட்சம் ஓராண்டுக்குக் குறைக்கப்படுவதற்கமைய, இரண்டாண்டுகளாதல் வேண்டும். இவ்விதியிலுள்ள தகவின்மையின் இரண்டாண்டுகள் மற்றும் ஓராண்டுக்கிடையேயான நெகிழ்வுத்தன்மை, விளையாட்டு வீரர் பரீட்சிப்புக்குக் கிடைக்கக்கூடியவராக இருப்பதனைத் தவிர்ப்பதற்கு முயற்சித்தாரென்ற பாரதூமான சந்தேகத்தைக் கடைசி நேர இருப்பிட மாற்றங்களின் முறை அல்லது வேறு நடத்தையின் முறை எழுப்புகின்றவிடத்து விளையாட்டு வீரர்களுக்குக் கிடைக்கமாட்டாது.

(இ) 4 (ஏ) அல்லது 4 (ஐ) என்னும் விதியின் மீறுகைகளுக்காக, தகவின்மைக் காலப்பகுதியானது, மீறுகையின் பாரதூரமான தன்மையைப் பொறுத்து, ஆயுட்காலத் தகவின்மை வரை குறைந்த பட்சம் நான்காண்டுகளாகவிருத்தல் வேண்டும். ஒரு பராயமடையாதவரை உட்படுத்துகின்ற விதி 4 (ஏ) அல்லது 4 (ஐ) இன் கீழான ஏதேனும் மீறுகை பாரதூரமான மீறுகையொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்கள் தவிர்ந்த மீறுகைகளுக்காக, விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினரினால் புரியப்படின், விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினருக்கு ஆயுட்காலத் தகவின்மையை விளைவித்தலும் வேண்டும். அத்துடன் மேலதிகமாக, விளையாட்டுத்துறை சாராச் சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் மீறக்கூடிய 4 (ஏ) அல்லது 4 (ஐ) என்னும் விதிகளின் குறிப்பிடத்தக்க மீறுகைகள், தகுதிவாய்ந்த நிருவாக, உயர்தொழிற்சார் அல்லது நீதிமுறை அதிகாரிகளுக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

(ஈ) 4 (எ) என்னும் விதியின் மீறுகைகளுக்காக, விதிக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதி, மீறுகையின் பாரதூரமான தன்மையைப் பொறுத்து, இரண்டாண்டுகளுக்குக் குறையாமலும் நான்காண்டுகளுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(உ) 4 (ஓ) என்னும் விதியின் மீறுகைகளுக்காக, தகவின்மைக் காலப்பகுதியானது, விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தவறின் அளவையும் விடயத்தின் ஏனைய சூழ்நிலைகளையும் பொறுத்து, குறைந்தபட்சம் ஓராண்டுவரை குறைப்பதற்கமைய, இரண்டாண்டுகளாதல் வேண்டும்.

**தவறு அல்லது அசட்டை எதுவும் இல்லாதவிடத்து தகவின்மைக் காலப்பகுதியை ஒழித்தல்**

46. ஒரு விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் தாம் தவறு அல்லது அசட்டை எதனையும் கொண்டிருப்பதில்லையெனத் தனிப்பட்டவொரு விடயத்தில் நிலைநாட்டினால், அப்போது, வேறுவகையாக ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதி ஒழிக்கப்படுதல் வேண்டும்

**குறிப்பிடத்தக்க தவறு அல்லது அசட்டை எதுவுமில்லையென்ற அடிப்படையின்மீது தகவின்மைக் காலப்பகுதியைக் குறைத்தல்**

47. (1) விதி 3 (1) , 3 (1) (i) (ஐ) அல்லது விதி 3 (ஏ) என்பவற்றின் மீறுகைகளுக்காகக் குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்கள் அல்லது மாசுபடுத்தப்பட்ட தயாரிப்புகளுக்கான தடைவிதிப்புகளைக் குறைத்தல் பின்வருமாறாகும்:-

(அ) குறித்துரைக்கப்பட்ட பதார்த்தங்கள் - ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை ஒரு குறித்துரைக்கப்பட்ட பதார்த்தத்தை உட்படுத்துமிடத்தும், விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், குறிப்பிடத்தக்க தவறு அல்லது அசட்டை எதுவுமில்லையென்பதை நிலைநாட்ட முடியுமானவராக இருக்குமிடத்தும், அப்போது, தகவின்மைக் காலப்பகுதி, விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தவறினது அளவைப் பொறுத்து, குறைந்தபட்சத்தில் ஒரு கண்டனமாகவும் தகவின்மைக் காலப்பகுதி இல்லாமலும், அதிகபட்சத்தில், இரண்டாண்டுகளுக்கான தகவின்மையாகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) மாசுபடுத்தப்பட்ட தயாரிப்புகள் - விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் குறிப்பிடத்தக்க தவறு அல்லது அசட்டை எதுவுமில்லையென்பதையும் கண்டுபிடிக்கப்பட்ட தடைசெய்யப்பட்ட பதார்த்தம் ஒரு மாசுபடுத்தப்பட்ட தயாரிப்பிலிருந்து வந்ததென்பதையும் நிலைநாட்ட முடியுமானவராகவுள்ள விடயங்களில், அப்போது, தகவின்மைக் காலப்பகுதி, விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தவறினது அளவைப் பொறுத்து, குறைந்தபட்சத்தில் ஒரு கண்டனமாகவும் தகவின்மைக் காலப்பகுதி இல்லாமலும், அதிக பட்சத்தில், இரண்டாண்டுகளுக்கான தகவின்மையாகவும் இருத்தல் வேண்டும்.

(2) ஒரு விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் தாம் குறிப்பிடத்தக்க தவறு அல்லது அசட்டை எதனையும் கொண்டிருப்பதில்லையென 47 (1) ஆம் விதி ஏற்புடையற்பாலதல்லாத தனிப்பட்டவொரு விடயத்தில் நிலைநாட்டினால், அப்போது, 48 முதல் 52 வரையிலான விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு மேலதிகக் குறைப்பு, அல்லது ஒழிப்புக்கமைய, வேறுவகையில் ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதி, விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தவறினது அளவின் அடிப்படையில் குறைக்கப்படலாம், ஆனால் குறைக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதி, வேறுவகையில் ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதியின் ஓரரைவாசிக்குக் குறையாதிருக்கலாம். வேறுவகையில் ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதி ஆயுட்காலத்துக்கானதாகவிருப்பின், இவ்விதியின்கீழ் குறைக்கப்பட்ட காலப்பகுதி எட்டாண்டுகளுக்குக் குறையாமல் இருக்கலாம்.

*48.* *(1)* இஊபபமு ஆனது, *69* முதல் *79* வரையிலான விதிகளின்கீழான இறுதி மேன்முறையீட்டு முடிபுக்குமுன்னர் அல்லது மேன்முறையீட்டுக்கான காலம் முடிவுறுமுன்னர், பின்வருவனவற்றை விளைவிக்ககூடியதாக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஓர் ஒழுங்கமைப்புக்கு, குற்றவியல் அதிகாரசபைக்கு அல்லது உயர்தொழிற்சார் ஒழுக்காற்றுக் குழுவுக்கு விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் கணிசமானளவு உதவி வழங்கியுள்ளவிடத்து, அது எந்தத் தனிப்பட்ட விடயத்தில் பெறுபேறுகள் முகாமை அதிகாரத்தைக் கொண்டுள்ளதோ அந்தத் தனிப்பட்ட விடயத்தில் விதிக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியின் ஒரு பாகத்தை இடைநிறுத்தலாம் :-

(அ) இன்னோராளினால் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் மீறுகையை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு கண்டுபிடித்தல் அல்லது முன்கொணர்தல் ;

(ஆ) ஒரு குற்றவியல் அல்லது உயர்தொழிற்சார் ஒழுக்காற்றுக் குழு இன்னோராளினால் புரியப்பட்ட குற்றவியல் தவறை அல்லது உயர்தொழிற்சார் விதிகளின் மீறுகையைக் கண்டுபிடித்தல் அல்லது முன்கொணர்தல் மற்றும் கணிசமானளவு உதவியை வழங்குகின்ற ஆளினால் வழங்கப்பட்ட தகவல்கள் இஊபபமு வுக்கும் கிடைக்கக்கூடியதாக்கப்படுதல். *69* முதல் *79* வரையிலான விதிகளின்கீழான இறுதி மேன்முறையீட்டு முடிபுக்குப்பின்னர் அல்லது மேன்முறையீடு செய்வதற்கான காலம் முடிவுற்றபின்னர், இஊபபமு ஆனது உஊபபமு வினதும் ஏற்புடையற்பாலதான சர்வதேசச் சம்மேளனத்தினதும் அங்கீகாரத்துடன் வேறுவகையில் ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதியின் ஒருபாகத்தை மட்டுமே இடைநிறுத்தலாம் வேறுவகையில் ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதியை எந்த அளவுக்கு இடைநிறுத்தலாமோ அந்த அளவு, விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் புரியப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையினது பாரதூரமானதன்மையினதும் விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டை ஒழிப்பதற்கான முயற்சிக்கு அந்த விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் வழங்கப்பட்ட கணிசமானளவு உதவியின் குறிப்பிடப்படத்தக்கதன்மையினதும் அடிப்படையின்மீதாதல் வேண்டும். வேறுவகையினால் ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதியின் நான்கில் மூன்றுக்கு மேற்படாதது இடைநிறுத்தப்படலாம். வேறுவகையில் ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதி ஆயுட்காலத்துக்கானதாக இருப்பின், இவ்விதியின்கீழ் இடைநிறுத்தப்படாத காலப்பகுதி எட்டாண்டுகளுக்குக் குறைவாகவிருத்தலாகாது. விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் தொடர்ந்து ஒத்துழைப்பதற்கும் தகவின்மைக் காலப்பகுதியின் இடைநிறுத்துகை எந்தப் பூரணமான மற்றும் நம்பத்தகு கணிசமானளவு உதவியின் அடிப்படையின்மேல் இருந்ததோ அந்தப் பூரணமான மற்றும் நம்பத்தகு கணிசமானளவு உதவியை வழங்குவதற்கும் தவறினால், இஊபபமு ஆனது தொடக்கத் தகவின்மைக் காலப்பகுதியை மீள நிலைநாட்டுதல் வேண்டும். இஊபபமு, இடைநிறுத்தப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியொன்றை மீளநிலைநாட்டுவதற்கு முடிபுசெய்தால் அல்லது இடைநிறுத்தப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியொன்றை மீளநிலைநாட்டுவதற்கு முடிசெய்யாவிடின், *69* முதல் *79* வரையிலாள விதிகளின்கீழ் மேன்முறையீடு செய்வதற்கு உரித்துள்ள எவரேனுமாளினால் அம்முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படலாம்.

*(2)* ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்குக் கணிசமானளவு உதவிவழங்குவதற்கு விளையாட்டு வீரர்களுக்கும் வேறு ஆட்களுக்கும் மேலும் ஊக்கமளிப்பதற்கு, இஊபபமு வின் கோரிக்கையின்பேரில் அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்துள்ள, அல்லது புரிந்துள்ளாரெனத் துணிவுரைக்கப்பட்டுள்ள விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் கோரிக்கையின் பேரில் உஊபபமு ஆனது, பெறுபேறுகள் முகாமை நடைமுறையின் ஏதேனும் கட்டத்தில், *69* முதல் *79* வரையிலான விதிகளின்கீழான இறுதி மேன்முறையீட்டு முடிபுக்குப் பின்னருட்பட, வேறுவகையில் ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதியின் தோதான இடைநிறுத்துகையாகவும் வேறு விளைவுகளாகவும் உள்ளனவென அது கருதுகின்றவற்றுக்கு உடன்படலாம். விதிவிலக்கான சூழ்நிலைகளில், உஊபபமு ஆனது, இவ்விதியில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டவற்றுக்கு அதிகமான கணிசமானளவு உதவிக்காகத் தகவின்மைக் காலப்பகுதியின் மற்றும் வேறு விளைவுகளின் இடைநிறுத்துகைகளுக்கு, அல்லது தகவின்மைக் காலப்பகுதி இல்லாமைக்கு, அல்லது பரிசில் பணத்தைத் திருப்பிக்கொடுக்காமைக்கு அல்லது குற்றப்பணங்களை அல்லது செலவுதொகைகளைச் செலுத்தாதிருக்கின்றமைக்கு உடன்படலாம். உஊபபமு வின் அங்கீகாரமானது, இவ்விதியில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகத் தடைவிதிப்புக்கு அமைந்ததாதல் வேண்டும். *69* முதல் *79* வரையிலான விதிகள் எவ்வாறிருப்பினும், இவ்விதியின் சந்தர்ப்பத்தில் உஊபபமு வின் முடிபுக்கெதிராக வேறேதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பினால் மேன்முறையீடு செய்யப்படமுடியாதிருக்கலாம்.

*49.* கணிசமானளவு உதவிகாரணமாக வேறுவகையில் ஏற்புடையற்பாலதான தடைவிதிப்பொன்றின் ஏதேனும் பாகத்தை இஊபபமு ஆனது இடைநிறுத்தினால், அப்போது முடிபுக்கான நியாயப்படுத்துகையை வழங்கும் அறிவித்தல், தனித்துவமான சூழ்நிலைகளில் *81* ஆம் விதியில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக *75* ஆம் விதியின்கீழ் மேன்முறையீடுசெய்வதற்கான

உரிமையொன்றுடன் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஏனைய ஒழுங்கமைப்புகளுக்கு வழங்கப்படுதல் வேண்டும். ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மிகச்சிறந்த நலனுக்காகவிருக்குமென உஊபபமு தீர்மானிக்குமிடத்து, கணிசமானளவு உதவி உடன்படிக்கையை அல்லது வழங்கப்படுகின்ற கணிசமானளவு உதவியின் தன்மையை வெளிவிடுவதனை வரையறுத்து அல்லது தாமதப்படுத்தி தோதான அந்தரங்கத்தன்மை உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளும்படி உஊபபமு இஊபபமு வுக்கு அதிகாரமளிக்கலாம்.

<u>வேறு சான்று இல்லாதபோது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை ஒப்புக்கொள்ளுதல்</u>

50. விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை நிலைநாட்டக்கூடிய மாதிரிச் சேகரிப்பொன்று பற்றிய அறிவித்தலைப் பெறுமுன்னர் அல்லது 3 (1) ஆம் விதியின்கீழ்தவிர ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையினது விடயத்தில், 23 முதல் 33 வரையிலான விதிகளைப் பின்பற்றி ஒப்புக்கொள்ளப்பட்ட மீறுகைபற்றிய முதலாவது அறிவித்தல் பெறப்படுமுன்னர் ஊக்கு பதர்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைத் தன்னிச்சையாக ஒப்புக்கொள்ளுமிடத்தும், அந்த ஒப்புக்கொள்ளுதலானது, ஒப்புக்கொள்ளப்பட்ட நேரத்தில் மீறுகையின் ஒரே நம்பத்தகு சான்றாக உள்ளவிடத்தும், அப்போது, தகவின்மைக் காலப்பகுதி குறைக்கப்படலாம், ஆனால் வேறுவகையாக ஏற்புடையற்பாலதாகவுள்ள காலப்பகுதியின் ஓரரைவாசிக்குக் குறைவாகவல்ல.

<u>விதி 44 (அ) மற்றும் (ஆ) அல்லது விதி 45 (அ) என்பவற்றின்கீழ் தடைவிதிக்கப்படற்பாலதான மீறுகையொன்றை எதிர்முகப்படுத்திய பின்னர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையினது உடனடி ஒப்புக்கொள்ளுகை</u>

51. மாதிரிச் சேகரிப்பைத் தட்டிக்கழிப்பதற்காக அல்லது மறுப்பதற்காக அல்லது மாதிரிச் சேகரிப்புடன் குறுக்கிடுவதற்காக விதி 44 (அ) மற்றும் (ஆ) அல்லது விதி 45 (அ) இன்கீழ் நான்காண்டுத் தடைவிதிப்பொன்றுக்கு இயல்திறனான முறையில் அமைந்தவராகவுள்ள விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் ஒருவர், இஊபபமு இனால் எதிர்முகப்படுத்தப்பட்ட பின்னர் உடனடியாகத் துணிவுரைக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை ஒப்புக்கொள்வதன் மூலமும், உஊபபமு இனதும் இஊபபமு இனதும் அங்கீகாரத்தின் மேலும் அவற்றின் தற்றுணிபின்பேரிலும், மீறுகையின் பாரதூரமான தன்மையை மற்றும் விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தவறினது அளவைப் பொறுத்து, குறைந்தபட்சம் இரண்டாண்டுகள்வரை தகவின்மைக் காலப்பகுதியிலான குறைப்பைப் பெறலாம்.

<u>ஒரு தடைவிதிப்பைக் குறைப்பதற்காகப் பல ஏதுக்களை ஏற்புடையனவாக்குதல்</u>

52. நாற்பத்தெட்டு முதல் 52 வரையிலான விதிகளின்கீழ் ஏதேனும் குறைப்பை அல்லது இடைநிறுத்துகையை ஏற்புடையதாக்குவதற்குமுன்னர், விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், 46, 47 அல்லது 48 முதல் 52 வரையிலான விதிகளின் ஒன்றுக்கு மேற்பட்ட ஏற்பாடுகளின்கீழ் தடைவிதிப்பிலான குறைப்புக்கான உரித்துடைமையை நிலைநாட்டுமிடத்து, வேறுவகையாக ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதி 44, 45, 46 மற்றும் 47 ஆம் விதிகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், 48 முதல் 52 வரையிலான தகவின்மைக் காலப்பகுதி, விதிகளின் குறைப்புக்கான அல்லது இடைநிறுத்துகைக்கான உரித்துடைமையை நிலைநாட்டினால், அப்போது, தகவின்மைக் காலப்பகுதி குறைக்கப்படலாம் அல்லது இடைநிறுத்தப்படலாம், ஆனால் வேறுவகையாக ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதியின் நான்கிலொன்றுக்குக் குறைவாகவல்ல.

<u>பன்மடங்கான மீறுகைகள்</u>

53. (1) ஒரு விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், ஓர் இரண்டாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்துள்ளவிடத்து, அத்தகைய விளையாட்டு வீரருக்கான அல்லது வேறு ஆளுக்கான தகவின்மைக் காலப்பகுதி, பின்வருவனவற்றின் அதிகரித்த காலப்பகுதியாகவிருத்தல் வேண்டும் :-

(அ) ஆறு மாதங்கள் ;

(ஆ) 48 முதல் 52 வரையிலான விதிகளின்கீழான ஏதேனும் குறைப்பைக் கணக்குக்கெடுக்காமல முதலாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்காக விதிக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியின் ஒரரைவாசி; அல்லது

(இ) 48 முதல் 52 வரையிலான விதிகளின்கீழான ஏதேனும் குறைப்பைக் கணக்குக்கெடுக்காமல், முதலாவது மீறுகையாகக் கொள்ளப்பட்ட இரண்டாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்கு வேறுவகையாக ஏற்புடையற்பாலதான தகவின்மைக் காலப்பகுதியின் இரு மடங்குகள்.

மேலே நிலைநாட்டப்பட்ட தகவின்மைக் காலப்பகுதி, 48 முதல் 52 வரையிலான விதிகளை ஏற்புடையதாக்குவதன்மூலம் அப்போது மேலும் குறைக்கப்படலாம்.

*(2)* ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மூன்றாவது மீறுகையானது, மூன்றாவது மீறுகை 46 ஆம் அல்லது 47 ஆம் விதியின்கீழ் தகவின்மைக் காலப்பகுதியின் ஒழிப்புக்கான அல்லது குறைப்புக்கான நிபந்தனையை நிறைவேற்றினால் தவிர, அல்லது விதி 4 (உ) இன் மீறுகையை உட்படுத்தினால் தவிர, ஆயுட்காலத்துக்கான தகவின்மைக் காலப்பகுதியை எப்பொழுதும் விளைவித்தல் வேண்டும். இந்தக் குறிப்பிட்ட விடயங்களில், தகவின்மைக் காலப்பகுதியானது எட்டாண்டுகளிலிருந்து ஆயுட்காலத்துக்கான தகவின்மையாகவிருத்தல் வேண்டும்.

*(3)* இவ்விதியின் நோக்கங்களுக்காக, எந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்காக விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் தவறின்மையை அல்லது அசட்டையின்மையை நிலைநாட்டியுள்ளாரோ அந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி முன்னைய மீறுகையாகக் கருதப்படுதலாகாது.

<u>குறித்த சில இயல்திறனான பன்மடங்கான மீறுகைகளுக்கான மேலதிக விதிகள்</u>

*54. (1)* விதி 44 (அ) மற்றும் (ஆ) அல்லது விதி 45 (அ) என்பவற்றின்கீழ் பல மீறுகைகளுக்காகத் தடைவிதிப்புகளை விதிக்கும் நோக்கங்களுக்காக, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்று, விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் 22 முதல் 33 வரையிலான விதிகளைப் பின்பற்றி அறிவித்தல் பெற்றபின்னர் அல்லது முதலாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றி அறிவித்தல் கொடுப்பதற்கு இஊபபமு நியாயமான முயற்சிகளைச் செய்த பின்னர் அவ்விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் இரண்டாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்தாரென இஊபபமு ஆனது நிலைநாட்ட முடியுமானதாகவிருப்பின் மட்டுமே இரண்டாவது மீறுகையொன்றாகக் கருதப்படலாம். இஊபபமு இதனை நிலைநாட்ட முடியாதிருப்பின், மீறுகைகள் தனியொரு முதலாவது மீறுகையாக ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் விதிக்கப்பட்ட தடைவிதிப்பு, கூடுதலாகப் பாரதூரமானதாகவுள்ள தடைவிதிப்பைக் கொண்டுள்ள மீறுகையின் அடிப்படையின்மீதாதலும் வேண்டும்.

*(2)* முதலாவது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்காகத் தடைவிதிப்பொன்றை விதித்த பின்னர், முதலாவது மீறுகை தொடர்பான அறிவிப்புக்குமுன்னர் ஏற்பட்ட, விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் ஆன ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை உட்படுத்துகின்ற நிகழ்வுகளை இஊபபமு கண்டுபிடிப்பின், அப்போது, இஊபபமு ஆனது, இரு மீறுகைகளுக்கும் ஒரேநேரத்தில் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் விதிக்கப்பட்டிருக்கக்கூடிய தடைவிதிப்பின் அடிப்படையின்மீது மேலதிகத் தடைவிதிப்பொன்றை விதித்தல் வேண்டும். முன்னைய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைத்தேதியில் நடைபெற்ற எல்லாப் போட்டிகளிலுமான பெறுபேறுகள் 55 ஆம் விதியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகத் தகைமையற்றனவாக்கப்படலாம்.

*53 ஆம், 54 ஆம் விதிகளின் நோக்கங்களுக்காக, ஒவ்வோர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்குமெதிரான விதியின் மீறுகை, பன்மடங்கான மீறுகைகளாகக் கருதப்படுவதற்கென அதே பத்தாண்டுக் காலப்பகுதியினுள் இடம்பெறுதல் வேண்டும்.*

<u>மாதிரிச் சேகரிப்பை அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை அடுத்துப் பின்னர் போட்டிகளிலான பெறுபேறுகளின் தகைமையீனம்</u>

55. எந்தப் போட்டியிலான பெறுபேறுகள் 40 ஆம் விதியின்கீழ் நேரிடை மாதிரியை விளைவித்தனவோ அந்தப் போட்டியிலான பெறுபேறுகள் தன்னியக்கமாகத் தகைமையீனமாக்கப்படுதலுடன் மேலதிகமாக, போட்டியின்போது அல்லது போட்டியில் இல்லாதபோது நேரிடை மாதிரியொன்று சேகரிக்கப்பட்ட தேதியிலிருந்து அல்லது ஏதேனும் தற்காலிக இடைநிறுத்துகை அல்லது தகவின்மைக் காலப்பகுதி தொடங்குவதனூடாக வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை இடம்பெற்ற தேதியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விளையாட்டு வீரரின் மற்றெல்லாப் போட்டிசார் பெறுபேறுகளும், நியாயத்தன்மை வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, எவையேனும் பதக்கங்கள், புள்ளிகள் மற்றும் பரிசில்கள் இழப்பிக்கப்படுதலுட்பட, ஏற்படுகின்ற எல்லா விளைவுகளுடனும் தகைமையற்றனவாக்கப்படுதல் வேண்டும்.

<u>விளையாட்டுத்துறை நடுத்தீர்ப்பு நீதிமன்றச் செலவுதொகை அளிப்புக்களையும் இழப்பிக்கப்பட்ட பரிசில் பணத்தையும் குறித்தொதுக்குதல்</u>

56. விநநீ செலவுதொகை அளிப்புக்களையும் இழப்பிக்கப்பட்ட பரிசில் பணத்தையும் மீளக்கொடுப்பனவு செய்வதற்கான முன்னுரிமையானது, முதலாவதாக, விநநீ இனால் அளிக்கப்பட்ட செலவுதொகைகளின் கொடுப்பனவாகவும், இரண்டாவதாக, ஏற்புடையற்பாலதான சர்வதேசச் சம்மேளனத்தின் விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டிருப்பின் இழப்பிக்கப்பட்ட பரிசில் பணத்தை

ஏனைய விளையாட்டு வீரர்களுக்கு மீளக்குறித்தொதுக்குதலாகவும், மற்றும் மூன்றாவதாக, இஊபபமு வின் செலவுகளை மீளளித்தலாகவும் இருத்தல் வேண்டும்.

**நிதிசார் விளைவுகள்**

57. (1) விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரியுமிடத்து, இஊபபமு ஆனது, அதன் தற்றுணிபின்படியும் விகிதாசாரத்தன்மை நெறிக்கமையவும், பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தெரிவுசெய்யலாம் :-

(அ) விதிக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியைப் பொருட்படுத்தாது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையுடன் இணைந்த செலவுதொகைகளை விளையாட்டு வீரரிடமிருந்து அல்லது வேறு ஆளிடமிருந்து அறவிடலாம் ; அல்லது

(ஆ) வேறுவகையாக ஏற்புடையற்பாலதான அதிகபட்சத் தகவின்மைக் காலப்பகுதி ஏலவே விதிக்கப்பட்டிருக்கும் விடயங்களில் மட்டுமே, விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு $.......... ஐ. அமெ. டொலருக்குக் குறையாத குற்றப்பணமொன்றை விதிக்கலாம்.

(2) ஒரு நிதிசார் தடைவிதிப்பை விதித்தல் அல்லது இஊபபமு வினால் செலவுதொகைகள் அறவிடப்படுதல், இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின்கீழ் அல்லது சட்டகோவையின் கீழ் வேறுவகையில் ஏற்புடையற்பாலதாகவிருக்கக்கூடிய தகவின்மையை அல்லது வேறு தடைவிதிப்பைக் குறைப்பதற்கான அடிப்படையொன்றாகக் கவனத்துட்கொள்ளப்படுதலாகாது.

**தகவின்மைக் காலப்பகுதியின் தொடக்கம்**

58. கீழே ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, தகவின்மைக் காலப்பகுதி, தகவின்மைக்காக ஏற்பாடுசெய்கின்ற இறுதிக்கேட்பு முடிபுத் தேதியன்று, அல்லது கேட்பு விட்டுக்கொடுக்கப்படின் அல்லது கேட்பெதுவும் இல்லாதிருப்பின், தகவின்மை ஏற்றுக்கொள்ளப்படும் அல்லது வேறுவகையாக விதிக்கப்படும் தேதியன்று தொடங்குதல் வேண்டும்.

**விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதல்லாத கேட்பு நடைமுறையிலான தாமதங்கள்**

59. விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதல்லாத கேட்பு நடைமுறையில் அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டின் வேறு அம்சங்களில் எவையேனும் கணிசமானளவு தாமதங்கள் இருந்துள்ளவிடத்து, இஊபபமு, மாதிரிச் சேகரிப்புத் தேதியன்றே தொடங்குகின்ற முன்னையவொரு தேதியில் அல்லது இன்னுமோர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையானது கடைசியாக இடம்பெற்ற தேதியன்று முற்கூட்டியே தகவின்மைக் காலப்பகுதியை ஆரம்பிக்கலாம். தகவின்மைக் காலப்பகுதியின்போது எய்தப்பட்ட எல்லாப் போட்டியுள்ள பெறுபேறுகளும், எதிர்செயலாற்றத் தகவின்மையுட்பட, தகைமையற்றனவாக்கப்படுதல் வேண்டும்.

**உரிய நேரத்தில் ஒப்புக்கொள்ளுதல்**

60. விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், இஊபபமு வினால் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றி வினவப்பட்ட பின்னர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை உடனடியாக ஒப்புக்கொள்ளுமிடத்து, தகவின்மைக் காலப்பகுதி, மாதிரிச் சேகரிப்புத் தேதியன்றே அல்லது இன்னுமோர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை கடைசியாக இடம்பெற்ற தேதியன்று ஆரம்பிக்கலாம். எவ்வாறாயினும், ஒவ்வொரு விடயத்திலும், இந்த விதி ஏற்புடையதாக்கப்படுமிடத்து, விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், அந்த விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், ஒரு தடைவிதிப்பின் விதிப்பை ஏற்றுக்கொண்ட தேதியிலிருந்து, ஒரு தடைவிதிப்பை விதிக்கின்ற முடிபொன்றின் கேட்புத் தேதியிலிருந்து, அல்லது தடைவிதிப்பு வேறுவகையில் விதிக்கப்படும் தேதியிலிருந்து முன்னெடுக்கப்படும் தகவின்மைக் காலப்பகுதியின் குறைந்தபட்சம் ஓரரைவாசிக்கேனும் உட்படுதல் வேண்டும். தகவின்மைக் காலப்பகுதி 51 ஆம் பிரிவின்கீழ் ஏலவே குறைக்கப்பட்டுள்ளவிடத்து இவ்விதி ஏற்புடையதாதலாகாது.

**தற்காலிக இடைநிறுத்துகைக்கான அல்லது உட்பட்ட தகவின்மைக் காலப்பகுதிக்கான மதிப்பு**

61. (1) தற்காலிக இடைநிறுத்துகையொன்று விதிக்கப்பட்டு அது விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் கடைப்பிடிக்கப்பட்டிருப்பின், அப்போது, அந்த விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், இறுதியாக விதிக்கப்படக்கூடிய

ஏதேனும் தகவின்மைக் காலப்பகுதிக்கெதிரான அத்தகைய தற்காலிக இடைநிறுத்துகைக் காலப்பகுதிக்காக மதிப்பு ஒன்றைப் பெறுதல் வேண்டும். எந்த முடிக்கெதிராக அடுத்துப்பின்னர் மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த முடிபைப் பின்பற்றித் தகவின்மைக் காலப்பகுதியொன்றுக்கு அவர் உட்பட்டவராகவிருப்பின், அப்போது விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், மேன்முறையீட்டின்மீது இறுதியாக விதிக்கப்படக்கூடிய ஏதேனும் தகவின்மைக் காலப்பகுதிக்கெதிராக அவர் உட்பட்டவாராகவிருந்த தகவின்மைக் காலப்பகுதிக்காக மதிப்பு ஒன்றைப் பெறுதல் வேண்டும்.

(2) விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் ஒருவர் இஊபபமு விடமிருந்து எழுத்திலான தற்காலிக இடைநிறுத்துகையொன்றைத் தன்னிச்சையாக ஏற்று அதன்பின்னர் அத்தற்காலிக இடைநிறுத்துகையைக் கடைப்பிடித்தால், அந்த விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், இறுதியாக விதிக்கப்படக்கூடிய ஏதேனும் தகவின்மைக் காலப்பகுதிக்கெதிரான அத்தகைய தன்னிச்சையான தற்காலிக இடைநிறுத்துகைக் காலப்பகுதிக்காக மதிப்பு ஒன்றைப் பெறுதல் வேண்டும். ஒரு தற்காலிக இடைநிறுகையினதாக விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தன்னிச்சையான ஏற்றுக்கொள்கையின் பிரதியொன்று, 80 ஆம் விதியின்கீழ் துணிவுரைக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை பற்றிய அறிவித்தலைப் பெறுவதற்கு உரித்துள்ள ஒவ்வொரு திறத்தவருக்கும் உடனடியாக வழங்கப்படுதல் வேண்டும்.

<u>தகவின்மையின்போதான அந்தஸ்து</u>

62. (1) தகவற்றவரென வெளிப்படுத்தப்பட்டுள்ள விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் எவரும், தகவின்மைக் காலப்பகுதியின்போது, எவரேனும் கையொப்பமிடுநரினால், கையொப்பமிடுநர் உறுப்பினராகவுள்ள ஒழுங்கமைப்பினால், அல்லது கையொப்பமிடுநர் உறுப்பினராகவுள்ள ஒழுங்கமைப்பொன்றின் ஒரு களரியினால் அல்லது வேறு உறுப்பு ஒழுங்கமைப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு போட்டியில் அல்லது செயற்பாட்டில், அல்லது ஏதேனும் உயர்தொழில்சார் ஒன்றியத்தினால் அல்லது ஏதேனும் சர்வதேச அல்லது தேசிய மட்ட நிகழ்ச்சி ஒழுங்கமைப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட போட்டிகளில் அல்லது ஓர் அரசாங்கஞ்சார் முகவராண்மையினால் நிதியளிக்கப்பட்ட ஏதேனும் உச்சக்கூறு அல்லது தேசிய மட்ட விளையாட்டுத்துறைச் செயற்பாட்டில் ஏதேனும் தன்மையில் பங்குபற்றுதலாகாது.

(2) நான்காண்டுகளை விஞ்சுகின்ற தகவின்மைக் காலப்பகுதிக்கமைந்த விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், தகவின்மைக் காலப்பகுதியின் நான்காண்டுகளைப் பூர்த்தி செய்த பின்னர், தடைவிதிக்கப்படாத உள்நாட்டு விளையாட்டு நிகழ்ச்சிகளில் அல்லது கோவைக் கையொப்பமிடுநரின் அல்லது கோவைக் கையொப்பமிடுநரின் உறுப்பினரினது நியாயாதிக்கத்தின்கீழ் வேறுவகையாக விளையாட்டு வீரரொருவராகப் பங்குபற்றலாம், ஆனால் அந்த உள்நாட்டு விளையாட்டு நிகழ்ச்சி, அத்தகைய விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஒரு தேசியத் திறப்பாட்டு முதன்மையில் அல்லது சர்வதேச நிகழ்ச்சியில் போட்டியிடுவதற்கு அவரைத் தகைமையுடையவராக்கக்கூடிய மட்டத்தில் இராதிருக்கும்வரை மட்டுமே மற்றும் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் எத்தன்மையிலும் பராயமடையாதோருடன் பணிபுரிவதனை உட்படுத்தாதிருக்கும்வரை மட்டுமே அவ்வாறு பங்குபற்றலாம்.

(3) தகவின்மைக் காலப்பகுதியொன்றுக்கு அமைந்த விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் பரீட்சிப்புக்கு அமைந்தவராகவிருந்தல் வேண்டும்.

<u>பயிற்சிக்குத் திரும்பிவருதல்</u>

63. விதி 62 க்கு விதிவிலக்காக, விளையாட்டு வீரரொருவர் விளையாட்டு வீரரின் விதிக்கப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியின் கடைசி இரண்டு மாதங்களின் குறுகியகாலத்தின் போது அல்லது தகவின்மைக காலப்பகுதியின் கடைசிக் காலாண்டின்போது ஓர் ஆட்டக்குழுவுடன் பயிற்சிபெறுவதற்கு அல்லது இஊபபமு வின் உறுப்பினர் ஒழுங்கமைப்பினது ஒரு களரியின் அல்லது வேறு உறுப்பினர் ஒழுங்கமைப்பின் வசதிகளைப் பயன்படுத்துவதற்குத் திரும்பிவரலாம்.

<u>தகவின்மையின்போது பங்குபற்றுவதற்கான தடையை மீறுதல்</u>

64. (1) தகவில்லாதவரென வெளிப்படுத்தப்பட்டுள்ள விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், 62 ஆம் விதியிற் குறித்துரைக்கப்பட்டவாறு தகவின்மையின்போது பங்குபற்றுகைக்கெதிரான தடையை மீறுமிடத்து, அத்தகைய பங்குபற்றுகையின் பெறுபேறுகள் தகைமையற்றனவாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் தொடக்கத் தகவின்மைக் காலப்பகுதிக்கு நீட்சியில் சமமாகவுள்ளவொரு புதிய தகவின்மைக் காலப்பகுதி, தகவின்மையின் தொடக்கக்

காலப்பகுதியின் முடிவுக்குச் சேர்க்கப்படுதலும் வேண்டும். புதிய தகவின்மைக் காலப்பகுதி, அந்த விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் தவறுகையின் அளவினதும் விடயத்தின் வேறு சூழ்நிலைகளினதும் அடிப்படையில் சீர்ப்படுத்தப்படலாம். விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் பங்குபற்றுகைக்கெதிரான தடையை மீறியுள்ளாராவென்பது மற்றும் சீர்ப்படுத்துகையொன்று தோதானதாவென்பதுபற்றிய தீர்மானம், எந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் பெறுபேறுகள் முகாமை தொடக்கத் தகவின்மைக் காலப்பகுதி விதிக்கப்படுவதற்கு இட்டுச்சென்றதோ அந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பினால் செய்யப்படுதல் வேண்டும். 69 முதல் 79 வரையிலான விதிகளின்கீழ் இம்முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படலாம்.

(2) விளையாட்டு வீரருக்கு ஆதரவளிக்கும் ஆள் அல்லது வேறு ஆள், தகவின்மையின்போது பங்குபற்றுவதற்கெதிரான தடையை மீறுவதில் ஆளொருவருக்கு உதவியளிக்குமிடத்து இஊபபமு ஆனது, அத்தகைய உதவிக்காக விதி 4 (ஒ) வில் குறித்துரைக்கப்பட்டவாறாக விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினரின்மீது அல்லது அத்தகைய மீறுகைக்கு உதவுகின்ற ஆளின்மீது தடைகளை விதித்தல் வேண்டும்.

**தகவின்மையின்போது நிதியாதரவைப் பிடித்துவைத்தல்**

65. (1) மேலதிகமாக, விதி 46 இல் அல்லது 47 இல் குறித்துரைக்கப்பட்டவாறாகக் குறைந்தவொரு தடைவிதிப்பை உட்படுத்தாத ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்காக, அத்தகைய ஆளினாற் பெறப்பட்ட சில அல்லது எல்லா விளையாட்டுகள் தொடர்பான நிதியாதரவும் அல்லது வேறு விளையாட்டுகள் தொடர்பான நன்மைகளும், இஊபபமு, இலங்கை அரசாங்கம் மற்றும் விளையாட்டுகள் ஒழுங்கமைப்புகளினால் பிடித்துவைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு தடைவிதிப்பினதும் பணிப்பாணைசார் பாகமும், உறுப்புரை விதி 82 இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகத், தன்னியக்க வெளியீட்டை உள்ளடக்குதல் வேண்டும்.

**ஆட்டக்குழு விளையாட்டுகளைப் பரீட்சித்தல்**

66. ஓர் ஆட்டக்குழு விளையாட்டின் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களுக்கு ஒரு நிகழ்ச்சி சம்பந்தமாக 22 முதல் 33 வரையிலான விதிகளின்கீழ் ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றி அறிவிக்கப்பட்டுள்ளவிடத்து, அந்நிகழ்ச்சிக்கான ஆளும் குழு, நிகழ்ச்சிக் காலப்பகுதியின்போது ஆட்டக்குழுவின் தோதான இலக்குப் பரீட்சிப்பை நடாத்துதல் வேண்டும்.

**ஆட்டக்குழு விளையாட்டுகளுக்கான விளைவுகள்**

67. ஓர் ஆட்டக்குழு விளையாட்டிலான ஆட்டக்குழு உறுப்பினர்களுள் இருவருக்கு மேற்பட்டோர் நிகழ்ச்சிக் காலப்பகுதியின்போது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்துள்ளனரெனக் காணப்படின், நிகழ்ச்சியின் ஆளும் குழு, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிகின்ற தனிப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு விதிக்கப்பட்ட எவையேனும் விளைவுகளுடன்சேர்த்து, ஆட்டக்குழுவின்மீது தோதான தடைவிதிப்பொன்றை விதித்தல் வேண்டும்.

**நிகழ்ச்சியை ஆளும் குழு, ஆட்டக்குழு விளையாட்டுகளுக்காக மேலும் கண்டிப்பான விளைவுகளை நிலைநாட்டலாம்**

68. (1) ஒரு நிகழ்ச்சிக்கான ஆளும் குழு, எந்த நிகழ்ச்சியின் நோக்கங்களுக்காக 67 ஆம் விதியிலுள்ளவற்றைப் பார்க்கிலும் மேலும் கண்டிப்பான விளைவுகளை ஆட்டக்குழு விளையாட்டுகளுக்காக விதிக்கின்றதோ அந்த நிகழ்ச்சிக்காக விதிகளை நிலைநாட்டுவதற்கு விருப்புத்தெரிவிக்கலாம்.

(2) இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை, இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கு இணங்கியொழுகவிராத விளையாட்டுகள் ஒழுங்கமைப்புகளுக்குச் சில அல்லது எல்லா நிதியளிப்பு அல்லது வேறு நிதிசாரா ஆதரவைப் பிடித்துவைக்கும்படி இயைபான பகிரங்க அதிகாரிகளுக்குக் கோரிக்கை விடுப்பதற்கு அதிகாரம் உடையது.

(3) ஒரு விளையாட்டுகள் ஒழுங்கமைப்புடன் இணைந்துள்ள ஒரு விளையாட்டு வீரரினால் அல்லது வேறு ஆளினால் புரியப்பட்ட இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் மீறுகையுடன் தொடர்புபட்ட ஆய்வுகூடக் கட்டணங்கள், கேட்புச் செலவுகள் மற்றும் பயணம் என்பனவுட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல்

எல்லாச் செலவுதொகைகளையும் இஊபபமு வுக்கு மீளளிப்பதற்கு அந்த விளையாட்டுகள் ஒழுங்கமைப்புகள் கடப்பாடுடையனவாதல் வேண்டும்.

(4) ஏற்றங்கீகாரம், சர்வதேச நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கு விளையாட்டுகள் ஒழுங்கமைப்புகளின் அலுவலர்களினதும் விளையாட்டு வீரர்களினதும் தகவுடைமை மற்றும் பின்வருவனவற்றின் அடிப்படையிலான குற்றப்பணங்கள் என்பன தொடர்பில் அவற்றுக்கெதிராக மேலதிக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்படி இஊபபமு ஆனது இலங்கைத் தேசிய ஒலிம்பிக் குழுவுக்குக் கோரிக்கை விடுப்பதற்கு விருப்புத்தெரிவிக்கலாம் :-

(அ) விதி 4 (உ) வை உட்படுத்துகின்ற மீறுகைகள் தவிர இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகனின் நான்கு அல்லது அதற்குமேற்பட்ட மீறுகைகள், பன்னிரெண்டு மாத காலப்பகுதியொன்றினுள் விளையாட்டு வீரர்களினால் அல்லது ஒரு விளையாட்டுகள் ஒழுங்கமைப்புடன் இணைந்துள்ள வேறு ஆட்களினால் புரியப்படுகின்றமை:

(ஆ) ஒரு விளையாட்டுகள் ஒழுங்கமைப்பிலிருந்தான ஒன்றுக்கு மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் அல்லது வேறு ஆட்கள் சர்வதேச நிகழ்ச்சியின்போது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிகின்றமை:

(இ) இஊபபமு விடமிருந்து ஒரு விளையாட்டு வீரர் எங்குள்ளாரென்பது பற்றிய தகவலுக்கான கோரிக்கையைப் பெற்ற பின்னர் அத்தகவல் பற்றி இஊபபமு வை அறிவிக்கப்பட்டதாக வைத்திருப்பதற்கு விளையாட்டுகள் ஒழுங்கமைப்பொன்று விழிப்புக்கவனத்துடனான முயற்சிகளை எடுப்பதற்குத் தவறியுள்ளமை.

**முடிபுகள் மேன்முறைமீட்டுக்கு அமைந்தவையாதல்**

69. (1) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின்கீழ் செய்யப்பட்ட முடிபுகளுக்கெதிராக 79 ஆம் விதியினூடாக 65 (5) முதல் 74 வரையிலான விதிகளிற், குறித்துரைக்கப்பட்டவாறு அல்லது இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளில், கோவையில் அல்லது சர்வதேச நியமங்களில் வேறு வகையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு மேன்முறையீடு செய்யப்படலாம். அத்தகைய முடிபுகள், மேன்முறையீட்டுக் குழு வேறுவகையாகக் கட்டளையிட்டாலொழிய, மேன்முறையீட்டின் கீழ் இருக்கையில் பயனுடையனவாகவிருத்தல் வேண்டும். மேன்முறையீடொன்று தொடங்கப்படுமுன்னர், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் முடிபுக்குப் பின்னரான மீளாய்வு நிறைவுசெய்யப்படுதல் வேண்டும்: ஆயின், அத்தகைய மீளாய்வு, விதி 69 (4) இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர 70 ஆம் விதியில் குறித்துரைக்கப்பட்ட நெறிகளுக்கு மதிப்புக்கொடுத்தல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டின்மீது மீளாய்வின் நோக்கெல்லை, விடயத்துக்கு இயைபான எல்லாப் பிரச்சினைகளையும் உள்ளடக்குவதுடன் தொடக்க முடிபு ஆக்குநரின் முன்னரான பிரச்சினைகளுக்கு அல்லது மீளாய்வின் நோக்கெல்லைக்கு வெளிப்படையாக வரையறுக்கப்படுவதுமில்லை.

(3) விளையாட்டுத்துறை நடுத்தீர்ப்பு நீதிமன்றமானது, அதன் முடிபைச் செய்வதில், எந்தக் குழுவின் முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்தக் குழுவினால் பிரயோகிக்கப்பட்ட தற்றுணிபுக்குப் பணிவிணக்கம் கொடுக்கத் தேவையில்லை.

(4) அறுபத்தொன்பது முதல் 79 வரையிலான விதிகளின்கீழ் உஊபபமு ஆனது மேன்முறையீடுசெய்வதற்கு உரிமைகொண்டிருக்குமிடத்தும் விளையாட்டுத்துறை நடுத்தீர்ப்பு நீதிமன்றத்தின் நடைமுறையினுள் வேறு திறத்தவரெவரும் ஓர் இறுதி முடிபுக்கெதிராக மேன்முறையீடுசெய்திராதவிடத்தும், உஊபபமு ஆனது, இஊபபமு இன் நடைமுறையில் வேறு பரிகாரங்களை நிறைவுசெய்யவேண்டியிராமல் அத்தகைய முடிபுக்கெதிராக விளையாட்டுத்துறை நடுத்தீர்ப்பு நீதிமன்றத்துக்கு நேரடியாக மேன்முறையீடு செய்யலாம்.

(5) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்று புரியப்பட்டுள்ளதென்ற முடிபு, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்காக விளைவுகளை விதிக்கின்ற அல்லது விளைவுகளை விதிக்காத முடிபு, அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை புரியப்படவில்லையென்ற முடிபு, உதாரணமாக, காலவிதிப்புட்பட, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை நடவடிக்கையானது நடவடிக்கைசார் காரணங்களுக்காக முன்செல்லமுடியாதென்ற முடிபு, விதி 20 (1) இன்கீழ் ஒய்வுபெற்ற விளையாட்டு

வீரரொருவர் போட்டிக்குத் திரும்பிவருவதற்காக ஆறுமாத அறிவித்தலுக்கான விதிவிலக்கை வழங்காதிருப்பதற்கு உஊபபமு வினாலான முடிபு, கோவையின் 22 (1) ஆம் விதியின்கீழ் பெறுபேறுகள் முகாமையைக் குறித்தளித்து உஊபபமு வினாலான முடிபு, ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையாகப் பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையை அல்லது ஓர் இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகையை முன்கொணராதிருப்பதற்கு இஊபபமு வினாலான முடிபு, அல்லது 26 ஆம் விதியின்கீழான புலனாய்வொன்றின்பின்னர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையை முன்னெடுத்துச்செல்லாதிருப்பதற்கான முடிபு, ஒரு தற்காலிகக் கேட்பின் விளைவாகத் தற்காலிக இடைநிறுத்துகையொன்றை விதிப்பதற்கான முடிபு, 28 முதல் 30 வரையிலான விதிகளுக்கு இணங்கியொழுகுவதற்கு இஊபபமு வின் தவறுதல், சார்த்தப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையின்மீது அல்லது அதன் விளைவுகளின்மீது விதிப்பைச் செய்வதற்கு இஊபபமு வுக்கு நியாயாதிக்க முண்டென்ற முடிபு, ஒரு தகவின்மைக் காலப்பகுதியை இடைநிறுத்துவதற்கு அல்லது இடைநிறுத்தாதிருப்பதற்கு அல்லது விதி 48 மற்றும் 49 இன்கீழ் இடைநிறுத்தப்பட்ட தகவின்மைக் காலப்பகுதியொன்றை மீளநிலைநாட்டுவதற்கான அல்லது மீளநிலைநாட்டாதிருப்பதற்கான முடிபு, 64 ஆம் விதியின்கீழான முடிபு, மற்றும் 85 ஆம் விதியின்கீழ் வேறோர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் முடிபை ஏற்றங்கீகரிக்காதிருப்பதற்கு இஊபபமு வினாலான முடிபு என்பவற்றுக்கெதிராக 69 (5) முதல் 74, 75, 76, 77, 78 மற்றும் 79 வரையிலான விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகப் புறநீங்கலானமுறையில் மேன்முறையீடு செய்யப்படலாம்.

(6) சர்வதேச நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றுவதிலிருந்து எழுகின்ற விடயங்களில் அல்லது சர்வதேச மட்ட விளையாட்டு வீரர்களை உட்படுத்துகின்ற விடயங்களில், விதி 75 இல் குறித்துரைக்கப்பட்டவாறான எவரேனும் திறத்தவர் அத்தகைய முடிபுக்கெதிராக விநநீ க்குப் புறநீங்கலானமுறையில் மேன்முறையீடுசெய்யலாம்.

<u>வேறு விளையாட்டு வீரர்களை அல்லது வேறு ஆட்களை உட்படுத்துகின்ற மேன்முறையீடுகள்</u>

70. (1) விதி 69 (6) ஏற்புடையற்பாலதாக இராதிருக்கும் விடயங்களில், விநநீ க்கு முன்னர் ஏற்புடையற்பாலனவான ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய நீதிமன்றத்திற்கு முடிபுக்கெதிராகப் புறநீங்கலானமுறையில் மேன்முறையீடு செய்யப்படலாம்.

(2) விதி 69 (6) ஏற்புடையற்பாலதாக இராதிருக்கும் விடயங்களில், முடிபுக்கெதிராகத் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்முறையீட்டுக் குழாத்துக்கு மேன்முறையீடுசெய்யப்படலாம். இந்த மாற்றுவழி தெரிவு செய்யப்படுமிடத்து, தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான ஒழுங்கமைப்புகள் கீழே குறித்துரைக்கப்பட்ட 71 முதல் 73 வரையிலான விதிகளைக் கடைப்பிடிப்பதற்கு விருப்புத்தெரிவைக் கொண்டிருத்தல் வேண்டும்:

ஆயின், ஏதேனும் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு, கோவையின் இயைபான ஏற்பாடு களினுள் அவற்றின் தேசிய மேன்முறையீட்டுக் குழுவின் நடவடிக்கைமுறைகளை நிலைநாட்டுவதற்குச் சுதந்திரமுடையதாகும்.

<u>தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்முறையீட்டுக் குழாத்தின்முன்னரரான கேட்புகள்</u>

71. (1) (இதனகத்துப்பின்னர் "மேன்முறையீட்டுக் குழாம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான மேன்முறையீட்டுக் குழாமொன்றை அமைச்சர் நியமித்தல் வேண்டும்: இது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளை மீறுவதிலிருந்து எழுகின்ற கருமங்கள் தொடர்பில் மேன்முறையீடுகளைக் கேட்பதற்குச் சட்டம் மற்றும் விளையாட்டுத்துறை மருத்துவம் என்ற துறைகளில் திறமையெய்தியுள்ள ஆறு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டுக் குழாத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் பதவி விலகுவதன் மூலம், இறப்பதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அவரது பதவியில் வெற்றிடமொன்று எழுந்தாலொழிய, நியமனத் தேதியிலிருந்து .......... ஆண்டுகளுக்குப் பதவிவகித்தல் வேண்டும். பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலமாகவல்லாது எந்த உறுப்பினரின் பதவிக்காலம் முடிவடைவதற்குள்ளதோ அந்த எவரேனும் உறுப்பினர் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும். அத்தகைய மீள்நியமனம், அடுத்தடுத்து வருவதாயினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி, ஒரு மேலதிகக் காலப்பகுதிக்கு மேற்படாததற்காகவிருத்தல் வேண்டும்.

(3) சுகவீனம் காரணமாக, உடற்றகுதியீனம் காரணமாக அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாமைகாரணமாக மேன்முறையீட்டுக் குழாத்தின் உறுப்பினரொருவராகத் தமது கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவுள்ள எவரேனும் உறுப்பினர் அதனை எழுத்தில் அமைச்சருக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகையவொரு படசத்தில் அமைச்சர், (1) ஆம் உடபிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கு வேறோராளை நியமித்தல் வேண்டும்.

(4) மேன்முறையீட்டுக் குழாத்தின் எவரேனும் உறுப்பினர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் தமது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை, அது அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படும் தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(5) அமைச்சர், எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான காரணங்களைக் குறித்தளித்தபின்னர் அவ்வாறு செய்யலாம். அத்தகைய பதவியகற்றுகை வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(6) எவரேனும் உறுப்பினர் இறக்குமிடத்து, பதவிவிலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய உறுப்பினரின் இடத்தில் வேறொரு பொருத்தமான ஆளை நியமித்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(7) அமைச்சர், (இதனகத்துப்பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மேன்முறையீட்டுக் குழாத்தின் உறுப்பினர்களுள் ஒருவரை அதன் தவிசாளராக இருப்பதற்கு நியமித்தல் வேண்டும்.

(8) தவிசாளர், அமைச்சருக்கு அதற்கென முகவரியிடப்பட்ட கடிதத்தின்மூலம் தவிசாளரென்ற பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அப்பதவிவிலகுகையானது, அது எத்தேதியன்று அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(9) அமைச்சர், தவிசாளரென்ற பதவியிலிருந்து தவிசாளரை அகற்றுவதற்கான காரணங்களைக் குறித்தளித்தளித்த பின்னர் அவ்வாறு செய்யலாம்.

(10) தவிசாளர், மேன்முறையீட்டுக் குழாத்தின் உறுப்பினரொருவராக அவரது பதவிக்காலத்தின்போது தவிசாளரென்ற பதவியை வகித்தல் வேண்டும்.

(11) தவிசாளர், சுகவீனம், உடற்றகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரினிடத்திற் செயலாற்றவென மேன்முறையீட்டுக் குழாத்தின் வேறோர் உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(12) எவரேனும் உறுப்பினர், வழக்கின் ஏதேனும் அம்சம் தொடர்பில் முன்னைய சம்பந்தப்படுத்துகை எதனையும் கொண்டிருத்தலாகாது. குறிப்பாக, உறுப்பினரெவரும், தற்போதைய வழக்கிற்போன்று அதே விளையாட்டு வீரரைச் சம்பந்தப்படுத்துகின்ற ஏதேனும் நோபவி விண்ணப்பத்தை அல்லது மேன்முறையீட்டை முன்னர் கவனத்துட்கொண்டிருத்தலாகாது. ஒவ்வோர் உறுப்பினரும், நியமனத்தின்மேல், திறத்தவர்களுள் எவர் தொடர்பிலும் பாரபட்சமின்மையைப் பாதிக்கக்கூடிய எவையேனும் சூழ்நிலைகளைத் தவிசாளருக்கு வெளிவிடுதல் வேண்டும்.

(13) ஒரு வழக்கைக் கேட்பதற்குத் தவிசாளரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், எத்தகைய எக்காரணத்துக்காகவேனும், அவ்வழக்கைக் கேட்பதற்கு விரும்பாதிருப்பின் அல்லது இயலாதிருப்பின், தவிசாளர் வேறோர் உறுப்பினரை நியமிக்கலாம் அல்லது அத்தகைய வழக்கைக் கேட்பதற்கு புதிய கேட்புக் குழாமொன்றை நியமிக்கலாம்.

(14) தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்முறையீட்டுக் குழாம், அதன் தனித்தற்றுணிபில், குழாத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறாகக் குழாத்துக்கு உதவுவதற்கு அல்லது மதியுரையளிப்பதற்கு நிபுணரொருவரை நியமிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும். அத்தகைய ஆள் வழக்குநவடிக்கைகளில் கூட்டுச்சேர்வதற்கும் திறத்தவரொருவராகத் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்முறையீட்டுக் குழாத்தின் கேட்புகளுக்கு வருகை தருவதற்கும் உரிமைகொண்டுள்ளார்.

(15) சம்பந்தப்பட்ட சர்வதேசச் சம்மேளனம் அல்லது விளையாட்டுகள் ஒழுங்கமைப்பு வழக்குநடவடிக்கைகளுக்கான திறத்தவராக இராதிருப்பின், தேசிய ஒலிம்பிக் குழு வழக்குநடவடிக்கைகளுக்கான திறத்தவராக இராதிருப்பின், மற்றும் உஊபபமு ஆனது, அவதானிப்பாளரொருவராகத் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்முறையீட்டுக் குழாத்தின் கேட்புகளுக்கு வருகைதருவதற்கு ஒவ்வொன்றும் உரிமைகொண்டுள்ளது.

(16) இவ்விதியைப் பின்பற்றிய கேட்புகள் துரிதமானமுறையில் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், விதிவிலக்கான சூழ்நிலைகள் ஏற்புடையதாகின்றவிடத்துத்தவிர, எல்லா வழக்குகளிலும் ஊக்கு பதார்த்தக் கேட்புக் குழாத்தின் முடிபுத் தேதியிலிருந்து மூன்றுமாதங்களினுள் பூர்த்திசெய்யப்படுதலும் வேண்டும்.

(17) நிகழ்ச்சிகள் சம்பந்தமாக நடாத்தப்பட்ட கேட்புகள் துரிதப்படுத்தப்பட்டவோர் அடிப்படையில் நடாத்தப்படலாம்.

<u>தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்முறையீட்டுக் முழாத்தின் வழக்கு நடவடிக்கைகள்</u>

72. (1) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய, தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்டுறையீட்டுக் குழாம் அதன் நடவடிக்கைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டாளர் தம்பக்க வழக்கை முன்வைத்தல் வேண்டுமென்பதுடன் பிரதிவாதியான திறத்தவர் அல்லது திறத்தவர்கள் மறுமொழியாகத் தம்பக்க வழக்கை முன்வைத்தலும் வேண்டும்.

(3) அறிவிப்புக்குப்பின்னர் கேட்பொன்றுக்கு வருகைதருவதற்கு எவரேனும் திறத்தவரினாலான அல்லது அத்தகைய திறத்தவரின் பிரதிநிதியினாலான தவறுதலொன்று, கேட்பொன்றுக்கு அத்தகைய திறத்தவரின் உரிமைதுறப்பு ஒன்றாகக் கருதப்படும். இவ்வுரிமை நியாயமான ஏதுக்களின்மீது மீளநிலைநாட்டப்படலாம்.

(4) திறத்தவர் ஒவ்வொருவரும், அத்தகைய திறத்தவரின் செலவில், ஒரு கேட்பில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு உரிமைகொண்டிருத்தல் வேண்டும்.

(5) கேட்புக் குழாத்தினால் அவசியமெனக் கருதப்படின், ஒவ்வொரு திறத்தவரும், கேட்பில் உரைபெயர்ப்பாளரொருவரை அமர்த்துவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். கேட்புக் குழாம், எவரேனும் உரைபெயர்ப்பாளரின் ஆளடையாளத்தையும் அவரின் செலவுக்கான பொறுப்புடைமையையும் தீர்மானித்தல் வேண்டும்.

(6) வழக்குநடவடிக்கைகளுக்கான ஒவ்வொரு திறத்தவரும், தொலைபேசிமூலம் அல்லது வேறெவையேனும் வழிவகைகள்மூலம் சான்றை ஏற்றுக்கொள்வதற்குத் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கேட்புக் குழாத்தின் தற்றுணிபுக்கமைய, சாட்சிகளை அழைப்பதற்கும் வினவுவதற்குமான உரிமையுட்பட, சான்றை முன்வைப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்.

(7) தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான குழாத்தின் ஏதேனும் தேவைப்பாட்டுக்கு அல்லது பணிப்புக்கு இணங்கியொழுகுவதற்கு எவரேனும் திறத்தவர் தவறுதல், மேற்கெண்டு நடவடிக்கையெடுப்பதிலிருந்து தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்முறையீட்டுக் குழாத்தைத் தடுத்தலாகாது என்பதுடன் அத்தகைய தவறுதல் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்முறையீட்டுக் குழாத்தினால், அதன் முடிபைச் செய்யும்போது, கனத்துட்கொள்ளவும்படலாம்.

<u>தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்முறையீட்டுக் குழாத்தின் முடிபுகள்</u>

73. (1) கேட்பின் முடிவில், அல்லது அதன்பின்னர் உரியநேரத்திலான அடிப்படையில், தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்முறையீட்டுக் குழாம், அதிகபட்ச இயல்திறத் தடைவிதிப்பு ஏன் விதிக்கப்படவில்லையென ஏற்புடையற்பாலதானவிடத்து ஒரு நியாயப்படுத்துகையுட்பட, ஒரு முடிபுக்காகவும் விதிக்கப்பட்ட ஏதேனும் தகவின்மைக் காலப்பகுதிக்காகவுமான முழுக் காரணங்களையும் உள்ளடக்குகின்ற எழுத்திலான தேதியிடப்பட்ட மற்றும் கையொப்பமிடப்பட்ட முடிபொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) முடிபானது, 75 ஆம் விதியின்கீழ் மேன்முறையீடு செய்வதற்கான உரிமையுடன் விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு, அவரது விளையாட்டுகள் ஒழுங்கமைப்புக்கு மற்றும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கு இஊபபமு வினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) முடிபுக்கெதிராக 75 ஆம் விதியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மேன்முறையீடு செய்யப்படலாம். முடிபுக்கெதிராக மேன்முறையீடெதுவும் கொரணப்படாவிடின், அப்போது -

(அ) முடிபானது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை புரியப்பட்டது என்பதாகவிருப்பின், விதி 82 (2) இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகப் பகிரங்கமானமுறையில் வெளிவிடப்படுதல் வேண்டும் ; ஆனால்

(ஆ) முடிபானது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை புரியப்படவில்லை என்பதாகவிருப்பின், அப்போது, அம்முடிபானது, அம்முடிபின் விடயப0பொருளாகவுள்ள விளையாட்டு வீரரின் அல்லது வேறு

விதத்தில் சம்மதத்துடன் மட்டுமே பகிரங்கமான முறையில் செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய சம்மதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இஊபபமு நியாயமான முயற்சிகளைப் பயன்படுத்துதல் வேண்டுமென்பதுடன், சம்மதம் பெற்றுக்கொள்ளப்படின், அம்முடிபை அதன் முழுமையில் அல்லது விளையாட்டு வீரார் அல்லது வேறு ஆள் அங்கீகரிக்கக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கமைக்கப்பட்ட படிவத்தில் பகிரங்கமானமுறையில் வெளிவிடுதலும் வேண்டும்.

<u>மேன்முறையீடுசெய்வதற்கு உரித்துடைய ஆட்கள்</u>

74. (1) விதி 69 (6) இன் கீழான வழக்குகளில், பின்வரும் திறத்தவர்கள் விநநீ க்கு மேன்முறையீடுசெய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) எந்த முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுதின்றதோ அந்த முடிபின் விடயப்பொருளாகவுள்ள விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் :

(ஆ) எந்த வழக்கில் முடிபு அளிக்கப்பட்டதோ அந்த வழக்குக்கான மற்றைய திறத்தவர் :

(இ) இயைபான சர்வதேசச் சம்மேளனம் :

(ஈ) இஊபபமு மற்றும் அவ்வாள் வதிகின்ற நாட்டின் அல்லது அவ்வாள் நாட்டினத்தவராக அல்லது உரிமம் வைத்திருப்பவராக உள்ள நாடுகளின் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு:

(உ) ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கான அல்லது அங்கவீனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கான தகவுடைமையைப் பாதிக்கின்ற முடிபுகளுட்பட, அம்முடிபானது ஒலிம்பிக் விளையாட்டுகள் அல்லது அங்கவீனனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் விளையாட்டுகள் தொடர்பாகப் பயனொன்றைக் கொண்டிருக்கக்கூடியவிடத்து, ஏற்புடையற்பாலவாறு, சர்வதேச ஒலிம்பிக் குழு அல்லது சர்வதேச அங்கவீனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் குழு; அத்துடன்

(ஊ) உஊபபமு

(2) எழுபதாம் விதியின்கீழான வழக்குகளில், பின்வரும் திறத்தவர்கள், குறைந்தபட்சத்தில், மேன்முறையீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) எந்த முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த முடிபின் விடயப்பொருளாகவுள்ள விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள்;

(ஆ) எந்த வழக்கில் முடிபு அளிக்கப்பட்டதோ அந்த வழக்குக்கான மற்றைய திறத்தவர்;

(இ) இயைபான சர்வதேசச் சம்மேளனம்;

(ஈ) இஊபபமு மற்றும் அந்த ஆள் வதிகின்ற நாட்டின் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரன ஒழுங்கமைப்பு;

(உ) ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கான அல்லது அங்கவீனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் விளையாட்டுகளுக் கான தகவுடைமையைப் பாதிக்கின்ற முடிபுகளுட்பட, அம்முடிபானது ஒலிம்பிக் விளையாட்டுகள் அல்லது அங்கவீனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் விளையாட்டுகள் தொடர்பாகப் பயனொன்றைக் கொண்டிருக்கக்கூடியவிடத்து, ஏற்புடையற்பாலவாறு, சர்வதேச ஒலிம்பிக் குழு அல்லது சர்வதேச அங்கவீன முற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் குழு; அத்துடன்

(ஊ) உஊபபமு.

(3) இதன்கண்ணுள்ள வேறேதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், ஒரு தற்காலிக இடைநிறுத்துகையொன்றுக்கெதிராக மேன்முறையீடுசெய்யக்கூடிய ஒரே ஆள் விளையாட்டு வீரராக அல்லது எந்த வேறு ஆளுக்குத் தற்காலிக இடைநிறுத்துகை விதிக்கப்படுகின்றதோ அந்த வேறு ஆளாக உள்ளார்.

(4) கோவையின்கீழ் விநநீ க்குக் கொணரப்பட்ட வழக்குகளில் பெயர்குறிக்கப்பட்ட எவரேனும் பிரதிவாதியினால் எவையேனும் மாற்றெதிர் மேன்முறையீடுகளும் வேறு அடுத்துப்பின்னரான மேன்முறையீடுகளும் குறிப்பானமுறையில் அனுமதிக்கப்படுகின்றன. இவ்விதியின்கீழ் மேன்முறையீடு செய்வதறகான உரிமையைக்கொண்ட எவரேனும் திறத்தவர்

ஒரு மாற்றெதர் மேன்முறையீட்டை அல்லது அடுத்துப்பின்னரான மேன்முறையீட்டை மிகப்பிந்தியதாகத் திறத்தவரின் மறுமொழியுடன் கோப்பிடுதல் வேண்டும்.

**உரியநேரத்திலான முடிபை அளிப்பதற்குத் தவறுதல்**

75. குறிப்பிட்டவொரு வழக்கில், இஊபபமு ஆனது, உஊபபமு வினால் நிர்ணயிக்கப்பட்ட நியாயமான காலக்கெடுவினுள் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை புரியப்பட்டதாவென்பது தொடர்பில் முடிபொன்றை அளிப்பதற்குத் தவறுமிடத்து, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையெதுவும் கண்டுபிடிக்கப்படவில்லையென இஊபபமு முடிபொன்றை அளித்துள்ளதென்றாற்போன்று நேரடியாக விநநீ க்கு மேன்முறையீடு செய்வதற்கு அது விருப்புத் தெரிவிக்கலாம். உஊபபமு நியாயமானமுறையில் செயலாற்றியதென்றும் விநநீ கேட்புக்குழாம் தீர்மானித்தால், அப்போது, மேன்முறையீட்டை நடாத்துவதில் உஊபபமு வின் செலவுதொகைகளும் அற்றோணியின் கட்டணங்களும் இஊபபமு வினால் உஊபபமு வுக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

**நோபவிக்கள் தொடர்பான மேன்முறையீடுகள்**

76. நோபவி முடிபுகளுக்கெதிராக 16 முதல் 18 வரையிலான விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகப் புறநீங்கலான முறையில் முறையீடு செய்யப்படலாம்.

**மேன்முறையீட்டின் முடிபுகள் பற்றிய அறிவிப்பு**

77. ஒரு மேன்முறையீட்டுக்கான திறத்தவராகவுள்ள ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு, மேன்முறையீட்டின் முடிபை விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு மற்றும் 14.2 ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக 75 ஆம் விதியின்கீழ் மேன்முறையீடுசெய்வதற்கு உரித்துடையனவாக இருந்திருக்கக்கூடிய ஏனைய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கு முடிபை உடனடியாக வழங்குதல் வேண்டும்.

**12 ஆம் உறுப்புரையைப் பின்பற்றி முடிபுகளுக்கெதிரான மேன்முறையீடு**

78. விதி 68 ஐப் பின்பற்றி இஊபபமு வினாலான முடிபுக்கெதிராக விநநீ க்கு அல்லது விளையாட்டுகள் ஒழுங்கமைப்புக்குப் புறநீங்கலானமுறையில் மேன்முறையீடு செய்யப்படலாம்.

**மேன்முறையீடுகளைக் கோப்பிடுவதற்கான காலம்**

79. (1) விநநீ க்கு மேன்முறையீடொன்றைக் கோப்பிடுவதற்கான காலம், ஏதேனும் முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்கின்ற திறத்தவரினால் முடிபு பெறப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு நாட்களாதல் வேண்டும்:

ஆயின், மேன்முறையீடுசெய்வதற்கு உரித்துடையவராக இருந்தவரும் ஆனால் எந்த முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த முடிபுக்கு இட்டுச்சென்ற வழக்குநடவடிக்கைகளுக்கான திறத்தவராக இராதவருமான ஒரு திறத்தவரினால் கோப்பிடப்பட்ட மேன்முறையீடுகள் சம்பந்தமாகப் பின்வருவன ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) முடிபுபற்றிய அறிவித்தலிலிருந்து பதினைந்து நாட்களினுள், அம்முடிபை வழங்கிய குழுவிடமிருந்து வழக்குக் கோப்பைக் கோருவதற்கான உரிமை;

(ஆ) அத்தகையவொரு கோரிக்கை பதினைந்து நாட்காலப்பகுதியினுள் செய்யப்படின், அப்போது, அத்தகைய கோரிக்கையைச் செய்கின்ற திறத்தவர், விநநீ க்கு மேன்முறையீடொன்றைக் கோப்பிடுவதற்கு, கோப்புப் பெறப்பட்டதிலிருந்து இருபத்தொரு நாட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

ஆயின், மேலும், உஊபபமு வினால் கோப்பிடப்பட்ட மேன்முறையீடொன்றுக்கான கோப்பிடுதற் காலக்கெடு, பின்வருவனவற்றின் பிந்தியதாகவிருத்தல் வேண்டும்:

(அ) வழக்கிலான வேறெவரேனும் திறத்தவர் எந்தக் கடைசித் தேதியன்று மேன்முறையீடு செய்திருக்கக்கூடுமோ அந்த நாளுக்குப்பின்னர் இருபத்தொரு நாட்கள்; அல்லது

(ஆ) முடிபு தொடர்பான பூரணமான கோப்பு உஊபபமு வினால் பெறப்பட்டபின்னர் இருபத்தொரு நாட்கள்.

*(2)* தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்முறையீட்டுக் குழாத்துக்கு மேன்முறையீடொன்றைக் கோப்பிடுவதற்கான காலம், அத்தகைய மேன்முறையீட்டுக்கெதிராக மேன்முறையீடுசெய்கின்ற திறத்தவரினால் அம்முடிபு பெறப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு நாட்களாதல் வேண்டும். எவ்வாறாயினும், மேன்முறையீடு செய்வதற்கு உரித்துடையவராகவுள்ளவரும் ஆனால் மேன்முறையீட்டுக்கு அமைந்ததாகவுள்ள முடிபுக்கு இட்டுச்சென்ற வழக்குநடவடிக்கைகளுக்கு ஒரு திறத்தவராக இராதவருமான ஒரு திறத்தவரினால் கோப்பிடப்பட்ட மேன்முறையீடுகள் சம்பந்தமாகப் பின்வருவன ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) முடிபுபற்றிய அறிவித்தலிலிருந்து பதினைந்து நாட்களினுள், அத்தகைய திறத்தவர், முடிபை வழங்கிய குழுவிடமிருந்து, அத்தகைய குழு எந்தக் கோப்பின் மீது நம்பியுள்ளதோ அந்தக் கோப்பின் பிரதியொன்றைக் கோருவதற்கு உரிமைகொண்டிருத்தல் வேண்டும்;

(ஆ) அத்தகையவொரு கோரிக்கை பதினைந்து நாட்காலப்பகுதியினுள் செய்யப்படின், அப்போது, அத்தகைய கோரிக்கையைச் செய்கின்ற திறத்தவர், தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மேன்முறையீட்டுக் குழாத்துக்கு மேன்முறையீடொன்றைக் கோப்பிடுவதற்கு, கோப்புப் பெறப்பட்டதிலிருந்து இருபத்தொரு நாட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

ஆயின், உஊபபமு வினால் கோப்பிடப்பட்ட மேன்முறையீடொன்றுக்கான அல்லது இடையீட்டுக்கான கோப்பிடுதற் காலக்கெடு, பின்வருவனவற்றின் பிந்தியதாகவிருத்தல் வேண்டும்:

(அ) வழக்கிலான வேறெவரேனும் திறத்தவர் எந்தக் கடைசித் தேதியன்று மேன்முறையீடு செய்திருக்கக்கூடுமோ அந்த நாளுக்குப்பின்னர் இருபத்தொரு நாட்கள்: அல்லது

(ஆ) முடிபு தொடர்பான பூரணமான கோப்பு உஊபபமு வினால் பெறப்பட்டபின்னர் இருபத்தொரு நாட்கள்.

<u>அந்தரங்கத்தன்மையும் அறிக்கையிடுதலும்.</u>

*80. (1)* ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை ஒரு விளையாட்டு வீரர் அல்லது ஆளுக்கெதிராகத் துணிவுரைக்கப்படுகின்றதென அத்தகைய விளையாட்டு வீரர்கள் அல்லது வேறு ஆட்களுக்கான அறிவித்தல், இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் 22 ஆம், 23 ஆம் விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக இடம்பெறுதல் வேண்டும். ஒரு விளையாட்டுகள் ஒழுங்கமைப்பின் உறுப்பினராகவுள்ள ஒரு விளையாட்டு வீரருக்கான அல்லது வேறு ஆளுக்கான அறிவித்தல், விளையாட்டுகள் ஒழுங்கமைப்புக்கு அந்த அறிவித்தலை ஒப்படைப்பதன் மூலம் கொடுக்கப்படலாம்.

*(2)* சர்வதேசச் சம்மேளனங்களுக்கும் உஊபபமு வுக்கும் ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையினது துணிவுரை பற்றிய அறிவித்தல், விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆளுக்கான அறிவித்தல் கொடுக்கப்படும் அதேவேளையில், இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் 22 ஆம், 23 ஆம் விதிகளின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக இடம்பெறுதல் வேண்டும்.

*(3)* விதி 3 (அ) மற்றும் (ஆ) இன்கீழ் ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை பற்றிய அறிவிப்பு, விளையாட்டினுள்ளான விளையாட்டு வீரரின் பெயர், நாடு, விளையாட்டு மற்றும் ஒழுக்காறு, விளையாட்டு வீரரின் போட்டா போட்டி மட்டம், பரீட்சிப்பானது போட்டியின்போதோ அல்லது போட்டியில் இல்லாதபோதோ, மாதிரிச் சேகரிப்பன் தேதி, ஆய்வுகூடத்தினால் அறிக்கையிடப்பட்ட பகுப்பாய்வுசார் பெறுபேறு, மற்றும் பரீட்சித்தலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறான வேறு தகவல் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

*(4)* விதி 80 (1) றைப் பின்பற்றி ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை பற்றிய அறிவித்தலை விளைவித்திராத புலனாய்வுகள் தொடர்பிற்றவிர, சர்வதேசச் சம்மேளனங்களும் உஊபபமு வும், 22 முதல் 33 வரையிலான, 34 முதல் 38 வரையிலான அல்லது 69 முதல் 79 வரையிலான விதிகளைப் பின்பற்றி நடாத்தப்பட்ட ஏதேனும் பரிசீலனையின் அல்லது வழக்கு நடவடிக்கைகளின் நிலைமை மற்றும் கண்டறிகைகள் பற்றிக் கிரமமானமுறையில் நாளதுவரையாக்கப்பட்டனவாக இருத்தல் வேண்டுமென்பதுடன் விடயத்தைத் தீர்த்துவைத்தமையை விளக்குகின்ற உடனடியான எழுத்திலான நியாயப்படுத்தப்பட்ட விளக்கம் அல்லது முடிபு ஒன்று அவற்றுக்கு வழங்கப்படுதலும் வேண்டும்.

(5) பெறுகின்ற ஒழுங்கமைப்புகள், 82 ஆம் விதியில் தேவைப்படுத்தப்பட்டவாறு இஊபபமு பகிரங்க வெளிவிடுகையைச் செய்யும்வரை அல்லது பகிரங்க வெளிவிடுகையைச் செய்வதற்குத் தவறியுள்ளவரை அறிவதற்கான தேவையுள்ள அவ்வாட்கள்தவிர இத்தகவலை வேறெவரேனுமாளுக்கு வெளிவிடுதலாகாது.

(6) பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகைகள், இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகைகள், மற்றும் வேறு துணிவுரைக்கப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகள் சம்பந்தமான தகவல், அத்தகைய தகவல் 82 ஆம் விதிக்கிணங்கப் பகிரங்கமானமுறையில் வெளிவிடப்படும்வரை அந்தரங்கமானதாக வைத்திருக்கப்படுவதனை இஊபபமு உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அந்தரங்கமான தகவலைப் பாதுகாப்பதற்காகவும் அத்தகைய அந்தரங்கமான தகவலின் முறையீனமான அல்லது அதிகாரமளிக்கப்படாத வெளிவிடுகையைப் புலனாய்வுசெய்வதற்காகவும் ஒழுக்காற்று நடவடிக்கையெடுப்பதற்காகவும், இஊபபமு வுக்கும் அதன் எவரேனும் ஊழியர்கள், ஒப்பந்தகாரர்கள், முகவர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்திலுள்ள ஏற்பாடுகளை உள்ளடக்குதலும் வேண்டும்.

<u>ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை பற்றிய முடிபுகளின் அறிவித்தலும் கோப்புகளுக்கான கோரிக்கைகளும்</u>

81. (1) விதி 32 மற்றும் 36 முதல் 39 வரையிலான விதிகள், விதிகள் 46, 47, 48 முதல் 52 வரையிலான விதிகள், விதி 64 என்பவற்றைப் பின்பற்றிச் செய்யப்பட்ட ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை பற்றிய முடிபு, ஏற்புடையற்பாலதாயின், இயன்றளவு கூடியவரையிலான விளைவுகள் ஏன் விதிக்கப்படவில்லை என்பதற்கான நியாயப்படுத்துகையொன்று உட்பட, முடிபுக்கான எல்லாக் காரணங்களையும் உள்ளடக்குதல் வேண்டும். முடிபானது ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்ச்சில் இல்லாதவிடத்து, ஏதேனும் தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு, முடிபுபற்றி குறுகிய ஆங்கில அல்லது பிரெஞ்ச்சு சுருக்கமொன்றையும் ஆதாரப்படுத்தும் காரணங்களையும் வழங்குதல் வேண்டும்.

(2) விதி 81 (1) றைப் பின்பற்றிப் பெறப்பட்ட முடிபொன்றுக்கெதிராக மேன்முறையீடு செய்வதற்கான உரிமையொன்றைக் கொண்டுள்ள ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு, அதனைப் பெற்றதிலிருந்து பதினைந்து நாட்களினுள், அம்முடிபுபற்றிய முழு வழக்குக்கோப்பினதும் பிரதியொன்றைக் கோரலாம்.

<u>பகிரங்க வெளிவிடுகை</u>

82. (1) ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்துள்ளாரென இஊபபமு வினால் துணிவுரைக்கப்பட்ட எவரேனும் விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் ஆளடையாளம், 23 (1) முதல் (4) வரையிலான விதிகள், 23 (5) முதல் (9) வரையிலான விதிகள், விதிகள் 24, 25 அல்லது 26 என்பவற்றுக்கிணங்க விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு அறிவித்தல் வழங்கிய பின்னர் மட்டுமே மற்றும் அதேவேளையில் 80 (2) ஆம் விதிக்கிணங்க உஊபபமு வுக்கும் விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும் இஊபபமு வினால் பகிரங்கமானமுறையில் வெளிவிடப்படலாம்.

(2) விதி 69 (6) அல்லது விதி 70 என்பவற்றின்கீழான மேன்முறையீட்டு முடிபில் அது தீர்மானிக்கப்பட்டபின்னர் அல்லது அத்தகைய மேன்முறையீடு விட்டுக்கொடுக்கப்பட்டபின்னர், அல்லது 34 முதல் 38 வரையிலான விதிகளுக்கிணங்கவுள்ள கேட்பொன்று விட்டுக்கொடுக்கப்பட்டபின்னர், அல்லது ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றிய துணிவுரை உரியநோத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டபின்னர் இருபது நாட்களுக்குப் பிந்தாமல் இஊபபமு ஆனது, விளையாட்டு, மீறப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி, மீறுகையைப் புரிகின்ற விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் பெயர், சம்பந்தப்பட்ட தடைசெய்யப்பட்ட பதார்த்தம் அல்லது தடைசெய்யப்பட்ட முறை, ஏதேனுமிருப்பின், அது, மற்றும் விதிக்கப்பட்ட விளைவுகள் என்பனவுட்பட, விடயம் கையாண்டு தீர்க்கப்பட்டமையைப் பகிரங்கமானமுறையில் வெளிவிடுதல் வேண்டும். இஊபபமு, மேலே விபரிக்கப்பட்ட தகவலுட்பட, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைகள் சம்பந்தமான ஏதேனும் இறுதி மேன்முறையீட்டு முடிபுகளின் பெறுபேறுகளையும் இருபது நாட்களினுள் பகிரங்கமானமுறையில் அறிக்கையிடுதலும் வேண்டும்.

(3) விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரியவில்லையென ஒரு கேட்பின் அல்லது மேன்முறையீட்டின்பின்னர் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விடயத்தில், அம்முடிபின் விடயப்பொருளாகவுள்ள விளையாட்டு வீரரின் அல்லது வேறு ஆளின் சம்மதத்துடன் மட்டுமே அம்முடிபானது பகிரங்கமானமுறையில் வெளிவிடப்படலாம். அத்தகைய சம்மதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இஊபபமு நியாயமான முயற்சிகளைப் பயன்படுத்துதல் வேண்டும். சம்மதம் பெற்றுக்கொள்ளப்படின், இஊபபமு அம்முடிபை அதன் முழுமையில் அல்லது விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் அங்கீகரிக்கக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கமைக்கப்பட்ட படிவத்தில் பகிரங்கமானமுறையில் வெளியிடுதல் வேண்டும்.

(4) இஊபபமு வின் இணையத்தளத்தின்மீது தேவைப்பட்ட தகவலை இடுவதன்மூலம் அல்லது வேறு வழிவகைகளினூடாக அதனை வெளியிடுவதன்மூலம் மற்றும் அத்தகவலை ஒரு மாதத்தின் நீண்ட பகுதிக்கு அல்லது ஏதேனும் தகவின்மைக் காலப்பகுதியின்போது விட்டுவைப்பதன்மூலம் வெளியிடுகையானது குறைந்தபட்சத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(5) இஊபபமு, அல்லது விளையாட்டுகள் ஒழுங்கமைப்புகள், அல்லது இவை இரண்டினதும் எவரேனும் அலுவலர், எந்த விளையாட்டு வீரருக்கெதிராக அல்லது வேறு ஆளுக்கெதிராக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை துணிவுரைக்கப்படுகின்றதோ அந்த விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு, அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலனவான பகிரங்கக் கருத்துரைகளுக்கான பதிலாகத்தவிர, ஏதேனும் முடிவுறாத வழக்கின் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளின்மீது பகிரங்கமானமுறையில் கருத்துரைத்தலாகாது.

(6) விதி 82 இல் தேவைப்படுத்தப்பட்டவாறான பணிப்பாணைமுறையிலான பகிரங்க அறிக்கையிடுதல், ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்துள்ளவரெனக் காணப்பட்டுள்ள விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் பராயமடையாதவராகவிருக்குமிடத்து, தேவைப்படுத்தப்படுதலாகாது. ஒரு பராயமடையாதவரைச் சம்பந்தப்படுத்துகின்ற வழக்கொன்றில் ஏதேனும் விருப்புத்தெரிவுசார் பகிரங்க அறிக்கையிடுதல், அவ்வழக்கின் நிகழ்வுகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் விகிதாசாரப்படியானதாகவிருத்தல் வேண்டும்.

(7) இஊபபமு ஆனது, உஊபபமு வுக்கு வழங்கப்படும் பிரதியொன்றுடன், அதன் ஊக்கு பதார்த்தக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் பற்றிய பொதுவான புள்ளிவிபரஞ்சார் அறிக்கையைக் குறைந்தபட்சம் வருடாந்தமேனும் வெளியிடுதல் வேண்டும். பரீட்சிக்கப்பட்ட ஒவ்வொரு விளையாட்டு வீரரினதும் பெயரையும் ஒவ்வொரு பரீட்சிப்பினதும் தேதியையும் காட்டுகின்ற அறிக்கைகளையும் இஊபபமு வெளியிடலாம்.

<u>ஊக்கு பதார்த்தக் கட்டுப்பாட்டுத் தகவல் தீர்வகம்</u>

83. ஒருங்கிணைக்கப்பட்ட பரீட்சிப்பு விநியோகத் திட்டமிடுதலை வசதிப்படுத்துவதற்கும் பல்வேறு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளினால் பரீட்சிப்பிலான அவசியமற்ற இரட்டிப்பைத் தவிர்ப்பதற்கும், இஊபபமு ஆனது, அத்தகைய விளையாட்டு வீரர்களின்மீது போட்டியின் போதான மற்றும் போட்டியில் இல்லாத போதான எல்லாப் பரீட்சிப்புகளையும், அத்தகைய பரீட்சிப்புகள் நடாத்தப்பட்டுள்ளபின்னர் இயன்றளவு விரைவாக, ஊபபநிமுமு வைப் பயன்படுத்தி, உஊபபமு தீர்வகத்துக்கு அறிக்கையிடுதல் வேண்டும். இத்தகவல், தோதானவிடத்தும் ஏற்புடையற்பாலனவான விதிகளுக்கிணங்கவும், விளையாட்டு வீரருக்கும், விளையாட்டு வீரரின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும், விளையாட்டு வீரரின்மீது பரீட்சிப்பு அதிகாரத்தைக் கொண்டுள்ள வேறெவையேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புகளுக்கும் அணுகத்தக்கதாக்கப்படும்.

<u>தரவின் அந்தரங்கத்தன்மை</u>

84. (1) இஊபபமு ஆனது, விளையாட்டு வீரர்களும் வேறு ஆட்களும் தொடர்பான சொந்தத் தகவலை, கோவையின்கீழ் அவர்களின் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான செயற்பாடுகளையும், குறிப்பானமுறையில் அந்தரங்கத்தன்மையையும் சொந்தத் தகவலையும் பாதுகாப்பதற்கான சர்வதேச நியமமுட்படச் சர்வதேச நியமங்களையும், இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளையும் நடாத்துவதற்கு அவசியமானவிடத்தும் தோதானவிடத்தும் சேகரிக்கலாம், தேக்கிவைக்கலாம், செய்முறைப்படுத்தலாம் அல்லது வெளிவிடலாம்.

(2) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கிணங்க எவரேனுமாளுக்குச் சொந்தத் தகவலுட்பட்ட தகவலைச் சமர்ப்பிக்கின்ற எவரேனும் பங்குபற்றுநர், ஏற்புடையற்பாலனவான தரவுப் பாதுகாப்புச் சட்டங்களைப் பின்பற்றியும் வேறுவகையாகவும், அந்தரங்கத்தன்மையையும் சொந்தத் தகவலையும் பாதுகாப்பதற்கான சர்வதேச நியமத்துக்கிணங்கவும் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படுகின்றவாறு வேறுவகையாகவும், இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளை நடைமுறைப்படுத்தும் நோக்கங்களுக்காக அத்தகைய ஆளினால் சேகரிக்கப்படலாம், செய்முறைப்படுத்தப்படலாம், வெளிவிடப்படலாம் மற்றும் பயன்படுத்தப்படலாம் என உடன்பட்டுக்கொண்டுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

<u>முடிபுகளின் ஏற்புடைமையும் ஏற்றங்கீகாரமும்</u>

85. (1) அறுபத்தொன்பது முதல் 79 வரையிலான விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான மேன்முறையீட்டுக்கான உரிமைக்கமைய, கோவையுடன் ஒத்ததாகவுள்ள மற்றும் எவரேனும் கையொப்பமிடுநரின் அதிகாரத்தினுள்ளான அத்தகைய கையொப்பமிடுநரின் பரீட்சித்தல், கேட்புப் பெறுபேறுகள் அல்லது வேறு இறுதித் தீர்ப்புக்கள்

உலகெங்கும் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டுமென்பதுடன் இஊபபமு வினாலும் எல்லா விளையாட்டுகள் ஒழுங்கமைப்புகளினாலும் ஏற்றங்கீகரிக்கப்பட்டு அவற்றுக்கு மதிப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

(2) இஊபபமு வும் எல்லா விளையாட்டுகள் ஒழுங்கமைப்புகளும், கோவையை ஏற்றுக்கொள்ளாதுள்ள வேறு குழுக்களின் விதிகள், கோவையுடன் வேறுவகையில் ஒத்ததாகவிருப்பின் அக்குழுக்களினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளை ஏற்றங்கீகரித்தல் வேண்டும்.

(3) அறுபத்தொன்பது முதல் 79 வரையிலான விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்ட மேன்முறையீட்டுக்கான உரிமைக்கமைய இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் மீறுகை தொடர்பாக இஊபபமு வின் ஏதேனும் மீறுகை தொடர்பில் இஊபபமு வின் முடிபு, எல்லா விளையாட்டுகள் ஒழுங்கமைப்புகளினாலும் ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும், அத்தகைய முடிபுக்குப் பயனளிப்பதற்கு அவை அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

**<u>இஊபபமுவின் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளைக் கூட்டிணைத்தலும் விளையாட்டுகள் ஒழுங்கமைப்புகளின் கடப்பாடுகளும்</u>**

*86. (1) எல்லா விளையாட்டு ஒழுங்கமைப்புகளும் அவற்றின் உறுப்பினர்களும் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். விளையாட்டுகள் ஒழுங்கமைப்பின் நியாயாதிக்கத்தின் கீழுள்ள விளையாட்டு வீரர்களுக்கும் வேறு ஆட்களுக்கும் எதிராக இஊபபமு அவற்றைத் தானே நேரடியாக வலுவுறுத்தக்கூடிய வகையில் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்திரான விதிகள் ஒன்றில் நேரடியாக அல்லது ஒவ்வொரு விளையாட்டுகள் ஒழுங்கமைப்பினதும் விதிகளைக் குறிப்பீடு செய்து கூட்டிணைக்கப்படுதலும் வேண்டும்.*

*(2) ஒவ்வொரு விளையாட்டுகள் ஒழுங்கமைப்பும், ஒரு விளையாட்டு ஒழுங்கமைப்பினால் அல்லது அதன் உறுப்பு ஒழுங்கமைப்புகளுள் ஒன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு போட்டியில் அல்லது செயற்பாட்டில் பயிற்றுநராக, பயிற்சியளிப்பவராக, முகாமையாளராக, ஆட்டக்குழு பணியாட்டொகுதியினராக, அலுவலராக, மருத்துவ அல்லது மருத்துவப்பயிற்சி ஆளணியினராகப் பங்குபற்றுகின்ற எல்லா விளையாட்டு வீரர்களும் ஒவ்வொரு விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினரும் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளினால் பிணிக்கப்படுவதற்கு உடன்படுவதனையும் அத்தகைய பங்குபற்றுகையின் நிபந்தனையாக இக்கோவையின்கீழ் பொறுப்பாகவுள்ள ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பின் பெறுபேறுகள் முகாமை அதிகாரிக்கு அமைந்தவராகவிருப்பதனையும் தேவைப்படுத்துகின்ற விதிகளை நிலைநாட்டுதல் வேண்டும்.*

*(3) எல்லா விளையாட்டுகள் ஒழுங்கமைப்புகளும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்கு ஆலோசனையளிக்கின்ற அல்லது அது தொடர்பான ஏதேனும் தகவலை இஊபபமு வுக்கும் அவற்றின் சர்வதேசச் சம்மேளனங்களுக்கும் அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான புலனாய்வுகளை நடாத்துவதற்கு அதிகாரமுள்ள ஏதேனும் ஒழுங்கமைப்பினால் நடாத்தப்பட்ட அத்தகைய புலனாய்வுதொடர்பில் ஒத்துழைத்தலும் வேண்டும்.*

*(4) எல்லா விளையாட்டுகள் ஒழுங்கமைப்புகளும், செல்லுபடியான நியாயப்படுத்துகையின்றித் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களை அல்லது தடைசெய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்துகின்ற விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினர் இஊபபமு வின்அல்லது விளையாட்டுகள் ஒழுங்கமைப்பின் நியாயாதிக்கத்தின்கீழுள்ள விளையாட்டு வீரர்களுக்கு ஆதரவளிப்பதனைத் தடுப்பதற்கு ஒழுக்காற்று விதிகளை நிலைப்படுத்திவைத்தல் வேண்டும்.*

*(5) எல்லா விளையாட்டுகள் ஒழுங்கமைப்புகளும் இஊபபமு வின் ஒருங்கிணைப்புடன் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான அறிவுபுகட்டுகையை நடாத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.*

***<u>வரையறைகள் பற்றிய நியதிச்சட்டம்</u>***

*87. ஒரு விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆளுக்கெதிரான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை பற்றிய வழக்கு நடவடிக்கையெதுவும், 22 முதல் 33 வரையிலான விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றி, அம்மீறுகை ஏற்பட்டதெனத் துணிவுரைக்கப்படும் தேதியிலிருந்து பத்தாண்டுகளினுள் அத்தகைய விளையாட்டு வீரருக்கு அல்லது வேறு ஆளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தாலொழிய, அல்லது அறிவிப்பு வழங்குவதற்கு நியாயமானமுறையில் எத்தனிக்கப்பட்டிருந்தாலொழிய, தொடங்கப்படுதலாகாது.*

**உஊபபமு வுக்கு இஊபபமு இணங்கியொழுகுகை அறிக்கைகள்**

88. இஊபபமு ஆனது, கோவையின் உறுப்புரை 23.5.2 வுக்கிணங்கக் கோவையுடன் அது இணங்கியொழுகியமை பற்றி உஊபபமு வுக்கு அறிக்கையிடும்.

**அறிவு புகட்டுகை**

89. இஊபபமு ஆனது, குறைந்தபட்சம் கோவையின் உறுப்புரை 18.2 இல் நிரற்படுத்தப்பட்ட பிரச்சினைகளின்மீதேனும் ஊக்கு பதார்த்தத்திலிருந்து விடுபட்ட விளையாட்டுக்கான தகவல், அறிவு மற்றும் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடுதலும், நடைமுறைப்படுத்துதலும், மதிப்பீடு செய்தலும், கண்காணித்தலும் வேண்டுமென்பதுடன் விளையாட்டு வீரர்களினாலும் விளையாட்டு வீரர் ஆதரவளிப்பு ஆளணியினரினாலும் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களிலான முனைப்பான பங்குபற்றுகைக்கு ஆதரவளித்தலும் வேண்டும்.

**ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் திருத்தமும் பொருள்கோடலும்**

90. (1) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரன விதிகள் இஊபபமு வினால் காலத்துக்குக்காலம் திருத்தப்படலாம்.

(2) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகள், ஏலவேயுள்ள சட்டத்துக்கான அல்லது நியதிச்சட்டங்களுக்கான குறிப்பீடின்றி, சுயாதீனமான மற்றும் தன்னியக்கமான உரையாகப் பொருள்கோடப்படுதல் வேண்டும்.

(3) கோவையும் சர்வதேச நியமங்களும் இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் முக்கிய பாகங்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் முரண்பாடு ஏற்படும் விடயத்தில் மேலோங்கிநிற்றலும் வேண்டும்.

**விளையாட்டு வீரர்களினதும் வேறு ஆட்களினதும் மேலதிகப் பங்களிப்புகளும் பொறுப்புக்களும்**

91. பின்வருவன ஒவ்வொரு விளையாட்டு வீரரினதும் பொறுப்பாதல் வேண்டும்:-

(அ) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளை அறிந்திருத்தலும் அவற்றுக்கு இணங்கியொழுகுதலும்;

(ஆ) எல்லா நேரங்களிலும் மாதிரிச் சேகரிப்புக்குக் கிடைக்கக்கூடியவராகவிருத்தல்;

(இ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சந்தர்ப்பத்தில், அவர்கள் உட்செலுத்திப் பயன்படுத்துகின்றவை;

(ஈ) தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களையும் தடைசெய்யப்பட்ட முறைகளையும் மருத்துவ ஆளணியினர் பயன்படுத்தாதிருப்பதற்கான அவர்களின் கடப்பாடுபற்றி அவர்களுக்கு பெறப்பட்ட ஏதேனும் மருத்துவச் சிகிச்சை இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளை மீறுவதில்லையென்பதனை நிச்சயிப்பதற்கான பொறுப்பை ஏற்றலும்;

(உ) விளையாட்டு வீரர் முன்னைய பத்தாண்டுகளினுள் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்தாரெனக் கையொப்பமிடுநர் அல்லாதவரொருவரின் கண்டறிகையினாலான ஏதேனும் முடிபை அவர்களின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும் இஊபபமு வுக்கும் வெளிவிடுதல்;

(ஊ) எவையேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் மீறுகையைப் புலனாய்வுசெய்கின்ற ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புடன் ஒத்துழைத்தல்.

92. பின்வருவன ஒவ்வொரு விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினரினதும் பொறுப்பாதல் வேண்டும்:-

(அ) இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகள்பற்றி அறிந்திருத்தலும் அவற்றுக்கு இணங்கியொழுகுதலும்;

(ஆ) விளையாட்டு வீரர் பரீட்சித்தல் நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒத்துழைத்தல்;

(இ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான மனப்பாங்குகளை வளர்ப்பதற்கு விளையாட்டு வீரரின் விழுமியங்களின்மீதும் நடத்தையின்மீதும் அவரது செல்வாக்கைப் பிரயோகித்தல்;

(ஈ) அவர் முன்னைய பத்தாண்டுகளினுள் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையைப் புரிந்தாரெனக் கையொப்பமிடுநர் அல்லாதவரொருவரின் கண்டறிகையினாலான ஏதேனும் முடிபை அவரின் சர்வதேசச் சம்மேளனத்துக்கும் இயைபான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புக்கும் வெளிவிடுதல்;

(உ) ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையொன்றைப் புலனாய்வுசெய்கின்ற ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புடன் ஒத்துழைத்தல்;

(ஊ) செல்லுபடியான நியாயப்படுத்துகையின்றி ஏதேனும் தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது தடைசெய்யப்பட்ட முறையைப் பயன்படுத்துவதனை அல்லது உடைமையில் வைத்திருப்பதனைத் தவிர்த்தல்.

93. இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகள் 2015, சனவரி 1 ஆந்தேதியன்று ("பயனுறும் தேதி") முழு வலுவுக்கும் பயனுக்கும் வந்துள்ளன. பயனுறும் தேதிக்குமுன்னர் முடிவுறாதுள்ள கருமங்களுக்கு அவை எதிர்ச்செயலாற்றல்முறையில் ஏற்புடையனவாதலாகாது; ஆயின், எவ்வாறாயினும்,-

(அ) பயனுறும் தேதிக்கு முன்னர் இடம்பெறுகின்ற ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை, பயனுறும் தேதிக்குப் பின்னர் இடம்பெறுகின்ற மீறுகைகளுக்காக 41 முதல் 65 வரையிலான விதிகளின்கீழான ஏதேனும் தடைவிதிப்பைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக "முதலாவது மீறுகைகளாக" அல்லது "இரண்டாவது மீறுகைகளாக" க் கணிக்கப்படுகின்றது.

(ஆ) நடவடிக்கைமுறைசார் விதிகளாகவுள்ள விதி 54 இன்கீழும் 87 ஆம் விதியில் எடுத்துக்கூறப்பட்ட வரையறைகள்பற்றிய நியதிச்சட்டத்தின்கீழுமான பன்மடங்கான மீறுகைகளின் நோக்கங்களுக்காக முன்னரான மீறுகைகள் எந்தக் கடந்த காலத்தையும் உள்ளடக்கும் காலப்பகுதிகளில் கவனத்துட்கொள்ளப்படமுடியுமோ அந்தக் காலப்பகுதிகள் எதிர்ச்செயலாற்றல் முறையில் ஏற்புடையனவாக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், வரையறுத்தற் காலப்பகுதி பற்றிய நியதிச்சட்டம் பயனுறும் தேதிக்குமுன்னர் ஏலவே முடிவுறாதிருப்பின் மட்டுமே 87 ஆம் விதி ஏற்புடையற்பாலதாதல் வேண்டும். அல்லாவிடில், பயனுறும் தேதியிலுள்ளவாறு முடிவுறாதுள்ள ஏதேனும் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை தொடர்பான ஏதேனும் வழக்குத் தொடர்பிலும், பயனுறும் தேதிக்குமுன்னர் ஏற்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகையினது அடிப்படையின்மீது பயனுறும் தேதிக்குப்பின்னர் கொணரப்பட்ட அத்தகைய ஏதேனும் வழக்குத் தொடர்பிலும், அவ்வழக்கானது, அத்தகைய வழக்கைக் கேட்கின்ற குழாம், விடயத்தின் சூழ்நிலைகளின்கீழ் "குற்றம் நிகழ்ந்தபின்னரான சட்டமுறை" என்ற நெறி தோதானமுறையில் ஏற்புடையதாகின்றதெனத் தீர்மானித்தாலொழிய, சார்த்தப்பட்ட ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகை ஏற்பட்டுள்ள நேரத்தில் பயனுள்ளனவாகவிருக்கும் நிலையான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளினால் ஆளப்படுதல் வேண்டும்.

94. (1) பயனுறும் தேதிக்குமுன்னர் ஓர் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றிய இறுதி முடிபு அளிக்கப்பட்டுள்ள, ஆனால் விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள் பயனுறும் தேதியன்றுள்ளவாறு தகவின்மைக் காலப்பகுதியை இன்னமும் அனுபவித்துக்கொண்டிருக்கின்ற வழக்குகள் தொடர்பில், விளையாட்டு வீரர் அல்லது வேறு ஆள், இந்த ஊக்கு பதாாத்தப் பயன்பாட்டிற்கெதிரான நோக்கில் தகவின்மைக் காலப்பகுதியிலான குறைப்பொன்றைக் கவனத்துட்கொள்வதற்கு ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைக்கான விளைவுகள் முகாமைப் பொறுப்பைக் கொண்டிருந்த இயைபான ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) அத்தகைய விண்ணப்பம் தகவின்மைக் காலப்பகுதி முடிவுறுமுன்னர் செய்யப்படுதல் வேண்டும். அளிக்கப்பட்ட முடிபுக்கெதிராக 69 (5) முதல் 74 வரையிலான விதிகளைப் பின்பற்றி மேன்முறையீடுசெய்யப்படலாம். ஆயின், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதியின் மீறுகைபற்றி இறுதி முடிபு அளிக்கப்பட்டு தகவின்மைக் காலப்பகுதி முடிவுற்ற ஏதேனும் வழக்குக்கு இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகள் ஏற்புடைமையெதனையும் கொண்டிருத்தலாகாது.

(3) பயனுறு தேதிக்குமுன்னர் வலுவிலிருந்த விதிகளின் அடிப்படையில் முதலாவது மீறுகைக்கான தடைவிதிப்பு தீர்மானிக்கப்பட்டவிடத்து, 53 ஆம் விதியின்கீழ் இரண்டாவது மீறுகைக்காகத் தகவின்மைக் காலப்பகுதியைக் கணக்கிடும் நோக்கத்துக்காக, இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகள் ஏற்புடையனவாக இருந்திருப்பின், அந்த முதலாவது மீறுகைக்காகக் கணக்கிடப்பட்டிருக்கக்கூடிய தகவின்மைக் காலப்பகுதி ஏற்புடையதாக்கப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல்:-

*95.* இவ்விதிகளின் நோக்கத்துக்காக-

“ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிருவாக மற்றும் முகாமை முறைமை (ஊபபநிமுமு)” என்பது, தரவுப் பாதுகாப்புச் சட்டவாக்கத்துடன் இணைந்து அக்கறைகொண்டுள்ளோரையும் உஊபபமு வையும் உதவுவதற்கு வடிவமைக்கப்பட்ட தரவுப்பதிவு, தேக்கிவைத்தல், பகிர்தல் மற்றும் அறிக்கையிடுதலுக்கான இணைய அடிப்படையிலான தரவுத்தள முகாமைக் கருவி என்று பொருளாகும்;

“பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகை” என்பது, அகத்தோற்றப் பதார்த்தங்களின் அதிகரித்த அளவுகள் அல்லது ஏதேனும் தடைசெய்யப்பட்ட முறையின் பயன்பாடு பற்றிய சான்று உட்பட, ஒரு தடைசெய்யப்பட்ட பதார்த்தம் அல்லது அதன் ஊன்மச்சிதைவுகள் அல்லது குறியீடுகள் உள்ளமையை ஒரு மாதிரியில் அடையாளங்காண்கின்ற, ஆய்வுகூடங்களுக்கும் தொடர்புபட்ட தொழினுட்ப ஆவணங்களுக்குமான சர்வதேச நியமத்துடன் ஒத்திருக்கின்ற உஊபபமு வினால் தராதர அங்கீகாரமளிக்கப்பட்ட ஆய்வுகூடத்திலிருந்தான அல்லது வேறு உஊபபமு வினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூடத்திலிருந்தான ஓர் அறிக்கை என்று பொருளாகும்;

“பாதகமான நடைமுறைக் கண்டறிகை” என்பது, ஏற்புடையாற்பாலனவான சர்வதேச நியமங்களில் விவரிக்கப்பட்டவாறு ஒரு பாதகமான நடைமுறைக் கண்டறிகையாக அடையாளங்காணப்பட்ட ஓர் அறிக்கை என்று பொருளாகும்;

“ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு” என்பது, ஊக்கு பதார்த்தக் கட்டுப்பாடு நடைமுறையின் ஏதேனும் பாகத்தைத் தொடக்கிவைப்பதற்கான, நடைமுறைப்படுத்துவதற்கான அல்லது வலுவுறுத்துவதற்கான விதிகளை வலுவுறுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ளவொரு கையொப்பமிடுநர் என்று பொருளாகும். இது, சர்வதேச ஒலிம்பிக் குழுவையும், சர்வதேச அங்கவீனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் குழுவையும், தமது நிகழ்ச்சிகளில் பரீட்சித்தலை நடாத்துகின்ற வேறு பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்புகளையும், உஊபபமு வையும், சர்வதேசச் சம்மேளனங்களையும், தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்புளையும் உள்ளடக்கும்;

“விளையாட்டு வீரர்” என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்டவாறான அதேபொருளையுடையது;

“விளையாட்டு வீரர் உயிரியற்சார் நடைமுறை” என்பது, பரீட்சித்தலுக்கும் புலனாய்வுகளுக்குமான சர்வதேச நியமத்திலும், ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்திலும் விவரிக்கப்பட்டவாறு தரவுகளைச் சேகரித்து சரிபார்க்கின்ற நிகழ்ச்சித்திட்டமும் முறைகளும் என்று பொருளாகும்;

“விளையாட்டு வீரர் ஆதரிப்பு ஆளணியினர்” என்பது, விளையாட்டுகள் போட்டியில் பங்குபற்றுகின்ற அல்லது அதற்கு ஆயத்தமாகின்ற விளையாட்டு வீரரொருவருடன் செயலாற்றுகின்ற, அவருக்குச் சிகிச்சையளிக்கின்ற அல்லது உதவுகின்ற எவரேனும் பயிற்றுநர், பயிற்சியளிப்பவர், முகாமையாளர், முகவர், ஆட்டக்குழுப் பணியாட்டொகுதியினர், அலுவலர், மருத்துவ, மருத்துவப்பயிற்சி ஆளணியினர், பெற்றோர் அல்லது வேறெவரேனுமாள் என்று பொருளாகும்;

“இயல்பிலிருந்து மாறுபட்ட கண்டறிகை” என்பது, ஒரு பாதகமான பகுப்பாய்வுசார் கண்டறிகையைத் தீர்மானிக்கு முன்னர் ஆய்வுகூடங்களுக்கான சர்வதேச நியமத்தினால் அல்லது தொடர்புபட்ட தொழினுட்ப ஆவணங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மேலதிகப் புலனாய்வைத் தேவைப்படுத்துகின்ற ஓர் உஊபபமு தராதர அங்கீகாரம்பெற்ற ஆய்வுகூடத்திலிருந்தான அல்லது வேறு உஊபபமு அங்கீகாரம் பெற்ற ஆய்வுகூடத்திலிருந்தான அறிக்கை என்று பொருளாகும்;

“இயல்பிலிருந்து மாறுபட்ட நடைமுறைக் கண்டறிகை” என்பது, ஏற்புடையாற்பாலனவான சர்வதேச நியமங்களில் விவரிக்கப்பட்டவாறு இயல்பிலிருந்து மாறுபட்ட நடைமுறைக் கண்டறிகை என விவரிக்கப்பட்ட ஓர் அறிக்கை என்று பொருளாகும்;

“கோவை” என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையுடையது;

“போட்டி” என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையுடையது;

''மாசுபடுத்தப்பட்ட தயாரிப்பு'' என்பது, தயாரிப்புச் சுட்டுத்துண்டில் அல்லது ஒரு நியாயமான இணையத்தளத் தேடுகையில் கிடைக்கக்கூடிய தகவலில் வெளிக்காட்டப்படாத தடைசெய்யப்பட்ட பதார்த்தமொன்றைக் கொண்டுள்ள ஒரு தயாரிப்பு என்று பொருளாகும்;

''விளையாட்டுத்துறை நடுத்தீர்ப்பு நீதிமன்றம் (விநநீ)'' என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையுடையது;

''நிகழ்ச்சி'' என்பது, ஒலிம்பிக் விளையாட்டுகள், பீனா உலகத் திறப்பாட்டு முதன்மைகள், அல்லது பான் அமெரிக்க விளையாட்டுகள் உட்பட, ஓர் ஆட்சிக் குழுவின்கீழ் ஒன்றாக நடாத்தப்படும் தொடர்ச்சியான தனிப்பட்ட போட்டிகள் என்று பொருளாகும்;

''நிகழ்ச்சி நடைபெறும் இடங்கள்'' என்பது, ஏதேனும் நிகழ்ச்சிக்காக ஆட்சிக் குழுவினால் அவ்வாறு பெயர்குறிக்கப்பட்ட இடங்கள் என்று பொருளாகும்;

''போட்டியில் பரீட்சித்தல்'' என்பது'' 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையுடையது;

''சர்வதேச நிகழ்ச்சி'' என்பது, சர்வதேச ஒலிம்பிக்குழு, சர்வதேச அங்கவீனமுற்ற ஆட்களுக்கான ஒலிம்பிக் குழு, ஒரு சர்வதேசச் சம்மேளனம், ஒரு பாரிய நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு, அல்லது வேறொரு சர்வதேச விளையாட்டு ஒழுங்கமைப்பு நிகழ்ச்சிக்கான ஆட்சிக் குழுவாகவுள்ளவிடத்தான அல்லது நிகழ்ச்சிக்கான தொழினுட்ப அலுவலர்களை நியமிக்கின்றவிடத்தான ஒரு நிகழ்ச்சி அல்லது போட்டி என்று பொருளாகும்;

''ஊன்மச்சிதைவு'' என்பது, ஓர் உயிரிஉருமாற்ற நடைமுறைமூலம் தயாரிக்கப்பட்ட ஏதேனும் பதார்த்தம் என்று பொருளாகும்;

''தேசிய ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான ஒழுங்கமைப்பு'' என்பது, ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளைக் கடைப்பிடிப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும், மாதிரிகளின் சேகரிப்பைப் பணிப்பதற்கும், பரீட்சிப்புப் பெறுபேறுகளை முகாமைசெய்வதற்கும், தேசிய மட்டத்தில் கேட்புகளை நடாத்துவதற்கும் முதனிலை அதிகாரத்தையும் பொறுப்பையும் கொண்டுள்ளதென ஒவ்வொரு நாட்டினாலும் பெயர்குறிக்கப்பட்ட ஏதேனும் உருவகம் என்று பொருளாகும். எவரேனும் தகுதிவாய்ந்த அதிகாரசபையினால் இப்பெயர்குறித்தல் செய்யப்பட்டிராதவிடத்து, உருவகமானது, நாட்டின் தேசிய ஒலிம்பிக் குழுவாக அல்லது அதன் பெயர்குறிப்பிட்டவராக இருத்தல் வேண்டும்;

''தேசிய நிகழ்ச்சி'' என்பது, ஒரு சர்வதேச நிகழ்ச்சியாகவிராத சர்வதேச அல்லது தேசிய மட்ட விளையாட்டு வீரர்களை உட்படுத்துகின்றவொரு விளையாட்டு நிகழ்ச்சி அல்லது போட்டி என்று பொருளாகும்;

''தேசிய மட்ட விளையாட்டு வீரர்'' என்பது,

(அ) முறையான விளையாட்டுகள் ஒழுங்கமைப்பினால் அல்லது விளையாட்டுகள் அமைச்சின் விளையாட்டுகள் அபிவிருத்தித் திணைக்களத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு தேசிய மட்டப் போட்டியின் ஏதேனும் விளையாட்டில் பங்குபற்றுகின்ற ஒரு விளையாட்டு வீரர்;

(ஆ) ஏதேனும் விளையாட்டில் தேசியப் போட்டியின் அதியுச்ச மட்டத்தில் போட்டியிடுகின்ற ஒரு விளையாட்டு வீரர்;

(இ) சர்வதேசச் சம்மேளனத்தினாலான சர்வதேச மட்ட விளையாட்டு வீரராகத் தேசிய மட்டத்தில் அல்லது சர்வதேச நிகழ்ச்சிகளில் போட்டியிடுகின்ற ஒரு விளையாட்டு வீரர்,

என்று பொருளாகும்:

ஆயின், எவரேனும் விளையாட்டு வீரர் ஒரு சர்வதேச மட்ட விளையாட்டு வீரராக அவரது முறையான சர்வதேசச் சம்மேளனத்தினால் வகுப்பாக்கஞ்செய்யப்படுமிடத்து, அத்தகைய விளையாட்டு வீரர், இந்த ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளின் நோக்கங்களுக்காக ஒரு சர்வதேச மட்ட விளையாட்டு வீரராகக் கருதப்படுதல் வேண்டும்; ஒரு தேசிய மட்ட விளையாட்டு வீரராக அல்ல;

"போட்டியில் இல்லாதபோது" என்பது, போட்டியின்போதாகவிராத ஏதேனும் காலப்பகுதி என்று பொருளாகும்;

"தடைசெய்யப்பட்ட நிரல்" என்பது, உலக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதரான முகவராண்மையினால் வெளியிடப்பட்ட வாறான பதார்த்தங்களின் நிரல் என்று பொருளாகும்;

"தடைசெய்யப்பட்ட முறை" என்பது, தடைசெய்யப்பட்ட நிரலின்மீது அவ்வாறு விவரிக்கப்பட்ட ஏதேனும் முறை என்று பொருளாகும்;

"தடைசெய்யப்பட்ட பதார்த்தம்" என்பது, தடைசெய்யப்பட்ட நிரலின்மீது அவ்வாறு விவரிக்கப்பட்ட ஏதேனும் பதார்த்தம் என்று பொருளாகும் அல்லது பதார்த்தங்களின் வகுப்பு என்று பொருளாகும்;

"மாதிரி" என்பது, ஊக்கு பதார்த்தத்தைக் கட்டுப்படுத்துகின்ற நோக்கங்களுக்காகச் சேகரிக்கப்பட்ட ஏதேனும் உயிரியற்சார் பொருள் என்று பொருளாகும்;

"இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை (இஊபபமு)" என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை என்று பொருளாகும்;

"பரீட்சித்தல்" என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையுடையது;

"நோய்தீர்க்கும் பயன்பாட்டிற்கெதிரான விலக்களிப்பு (நோபவி)" என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையுடையது;

"பயன்பாடு" என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையுடையது;

"உலக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை (உஊபபமு) என்பது, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளையுடையது;

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.